# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2018

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு இலங்கை

# முகவுரை

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் சுதந்திரமான சுகாதாரக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அன்று தொடக்கம் அதற்கமைவாகச் செயற்பட்டு முன்னோக்கிச் செல்லுகின்றது. 1931 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு நோய் தடுப்பு, நோய் நிவாரணம், நிருவாகம் மற்றும் புனரமைப்பு ஆகிய பிரிவுகளின் ஊடாக பண்புசார் சுகாதார சேவைகளை வழங்கி இலங்கை மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சுகாதாரக் கொள்கையை வகுத்தல், தரங்களைப் பேணுதல், சுகாதார சேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலோபாய வழிகாட்டல்களை வழங்குதல், வளப் பகிர்வு, சகல சுகாதார சேவைகளையும் வழங்குகின்ற நிறுவனங்களின் பணியாட் தொகுதிக்கு பயிற்சியளித்தல், முகாமைத்துவம் மற்றும் சகல மக்களுக்குமான சுகாதார பாதுகாப்பு நிறுவன முறைமையின் ஊடாக சேவைகளை வழங்குகின்ற இடங்களில் இலவசமாக சுகாதார சேவைகளை வழங்குவது இந்த அமைச்சின் பிரதான செயற்பாடாகும்.

அடுத்தடுத்து வரும் அரசாங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலவச சுகாதாரம் மற்றும் கல்வி சார்ந்த முழுமையான சமூகக் கொள்கைகள் காரணமாக இலங்கை சுகாதார நிலையில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சுகாதார முறைமையின் நீண்ட கால நோக்கமானது நிலைத்து நிற்கின்ற சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்ளுகின்ற மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுதல் என்பதுடன் சமூக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வதுமாகும். சுகாதார அமைச்சு மேலும் முன்நோக்கிச் சென்று சகல மக்களுக்கும் மேம்பட்ட ஆரம்ப சுகாதார சேவையை வழங்கி முழுச் சுகாதார சேவையையும் (UHC) உள்ளடக்கியவாறு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. முழுச் சுகாதார சேவையையும் உள்ளடக்குவதன் மூலம் சுகாதார மட்டத்தை மேம்படுத்துதல், நோய் தடுப்பு, நோய் நிவாரணம், புனர்வாழ்வு, நோயாளர்களுக்கான உதவிச் சேவைகள் (palliative care) தேவைப்படுகின்ற அனைத்து மக்களும் பெற்றுக் கொள்ளுவதை உறுதிப்படுத்தல் போதுமான அளவு தரப் பரிசோதனை சேவைகளை வழங்கும்போது இச் சேவையைப் பெறுநர் நிதி நெருக்கடிக்கு ஆளாகாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இந்த 2018 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் ஊடாக சுகாதாரப் பிரிவின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மட்டுமன்றி சுகாதாரப் பிரிவின் 2018 ஆம் ஆண்டுக்காக பொதுவாகத் தயாரிக்கப்பட்ட இலக்குக்கு அமைவான முன்னேற்றங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும் இந்த அறிக்கையின் மூலம் கடந்த ஆண்டின் பிரதான செயலாற்றுகை இலக்குக்கு அமைவாக அடைந்த முன்னேற்றத்தின் கண்ணோட்டமும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

# பொருளடக்கம்

## பகுதி I: சுகாதாரம் மற்றும் போசணை


| | | பக்க இல |
|---|---|---|
| **1.0** | பொழிப்பு | 2 |
| 1.1 | கடமைகள் மற்றும் பணிகள் | 3 |
| 1.2 | இலங்கையின் தேசிய சுகாதாரச் சுட்டிகள் | 4 |
| 1.3 | நேரொத்த அமைச்சுக்களின் நிறுவனங்களில் உள்ள மனித வள சுயவிபரம் 2018 | 5 |
| 1.4 | வருடாந்த நிதிச் செயலாற்றுகைச் சுறுக்கம் 2018 | 6 |
| **2.0** | 2018 ஆம் ஆண்டு அடைந்த பிரதான வெற்றிகள் | 8 |
| **3.0** | நேரொத்த அமைச்சின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள், விசேட கருத்திட்டங்கள் மற்றும் பணிப்பாளர் பிரிவு | 17 |
| **3.1** | தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தல் | 17 |
| 3.1.1 | தொற்று நோயியல் பிரிவு | 17 |
| 3.1.2 | காசா நோய் மற்றும் மார்பு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் | 18 |
| 3.1.3 | தொழு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் | 19 |
| 3.1.4 | நோய் தடுப்பு காப்புச் சேவைகள் | 20 |
| **3.2** | நோய்க் காவியின் ஊடாகப் பரப்பப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தல் | 21 |
| 3.2.1 | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 21 |
| 3.2.2 | யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 22 |
| 3.2.3 | மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் | 23 |
| **3.3** | தொற்றா நோய் கட்டுப்பாடு | 24 |
| 3.3.1 | தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் | 24 |
| 3.3.2 | மன நல சேவைகள் | 27 |
| 3.3.3 | நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் | 28 |
| **3.4** | தாய்சேய் நல சேவைகள் | 29 |
| **3.5** | வாய்ச் சுகாதார சேவைகள் | 30 |
| **3.6** | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி | 31 |
| 3.6.1 | மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் | 31 |
| **3.7** | போசணை | 32 |
| 3.7.1 | போசணைப் பிரிவு | 32 |
| **3.8** | அனர்த்தத்துக்கு முன் ஆயத்தம் மற்றும் பதில் சேவைகள் | 33 |
| **3.9** | சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 34 |
| **3.10** | சுகாதார ஊக்குவிப்பு | 35 |
| **3.11** | இளைஞர் முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான சேவைகள் | 36 |
| **3.12** | தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தல் | 37 |
| **3.13** | மேலதிகச் சேவைகள் | 38 |
| **3.13**.1 | ஆய்வுகூடச் சேவைகள் | 38 |
| **3.13**.2 | தேசிய இரத்த மாற்றுச் சேவைகள் | 40 |
| **3.13**.3 | சுகாதார சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பு | 41 |
| **3.13**.4 | பொது விலங்கு மருத்துவச் சேவைகள் | 42 |
| **3.13**.5 | மருத்துவ புள்ளிவிபர அலகு | 42 |
| **3.13**.6 | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | 44 |
| **3.14** | மருத்துவ சட்ட சேவைகள் | 45 |
| 3.15 | பாலியல் சார்ந்த நோய் கட்டுப்பாட்டுச் சேவைகள் | 46 |
| 3.16 | மருத்துவ வழங்கல் சேவைகள் | 47 |
| 3.17 | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் | 48 |
| **3.18** | முகாமைத்துவம், அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சேவைகள் | 48 |
| **3.18.1** | திட்டமிடல் பிரிவு | 48 |
| **3.18.2** | சர்வதேச சுகாதாரம் | 50 |
| **3.19** | நிதிச் சேவைகள் | 51 |

| | | |
|---|---|---|
| 3.20 | சுகாதார சேவைகள் நிறுவனங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் | 52 |
| 3.20.1 | உள்நாட்டு நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டம் | 52 |
| 3.20.2 | வெளிநாட்டு உதவியின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் | 55 |
| 3.20.3 | இரண்டாவது சுகாதாரப் பிரிவு அபிவிருத்திக் கருத்திட்டம். (SHSDP) | 56 |
| 3.20.4 | எயிட்ஸ் (AIDS), காச நோய் (Tuberculosis) மற்றும் மலேரியா (Malaria) நோய்களுக்கு எதிராக செயற்படுவதற்கு உலகலாவிய நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டம். (GFATM) | 56 |
| 3.20.5 | சுகாதார சேவையையும் உள்ளடக்கியவாறான சுகாதார சேவை வழங்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தல். | 56 |
| 4.0 | நேரொத்த அமைச்சுக்குரிய மருத்துவமனைகளின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பொழிப்பு - 2018 | 57 |

# பகுதி I:

# சுகாதாரம் மற்றும் போசணை

1.0 பொழிப்பு

**நோக்கம்**
**தேசத்தின் பொருளாதாரம் சமூக,உள மற்றும் ஆன்மீக அபிவிருத்தியில் பங்குகொள்ளும் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குதல்.**

**செயற்பணி**
**மக்களின் தேவைப்பாடுகளுக்கு முகங்கொடுத்து, இணங்கிச் செயற்பட்டு, முழுமையான, உயர் தரத்திலான பண்புசார், சமநிலையுடன், ஆக்கத்திறன் வாய்ந்தவாறு திறமுறையான சுகாதார சேவையை இலங்கை மக்களுக்கு வழங்குவதன் மூலம் அடைந்து கொள்ளக் கூடிய அதிகூடிய சுகாதார மட்டத்தை அடைந்து கொள்ளல்.**

**கொள்கை நோக்கங்கள்**

- சரியான சுகாதார குறிக்கோள்களை அடைவதற்கு சேவை வழங்கலை பலப்படுத்தல்.
- அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் பொருத்தமானதும் அணுகக் கூடியதுமான உயர் தர நோய் நீக்கும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்.
- தரமான புனர்வாழ்வு பரமரிப்புக்கு சிகிச்சை சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரிய நோயாளர்களுக்கு சமமானவாறு பெற்றுக் கொள்ளுவதை மேம்படுத்தல்.
- சேவை வழங்கல் தரவுகளின் அடிப்படையிலான நடைமுறையின் மூலம் பலப்படுத்தி தொடர்ச்சியான சேவைகளை அனைத்து நோயாளர்களுக்கும் வழங்குதல்.
- நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு அவர்களது பணத்தை தனிப்பட்ட ரீதியில் செலவு செய்ய நேரிடுகின்றது. அதாவது நோயாளர்களின் செலவைக் குறைத்துக் கொள்ளுவதற்காக புதிய உபாயங்களை மேம்படுத்தல்.
- மனித வள முகாமைத்துவம் உள்ளடங்கலாக சிறந்த மீள் கட்டமைப்பினூடாக பரந்த சுகாதார முறைமை ஒன்றை உறுதி செய்தல்.
- அனைத்து சுகாதர பராமரிப்பு வழங்குநர்களுடன் இணைந்து மூலோபாய கூட்டாண்மையை மேம்படுத்தல்

### 1.1 கடமைகள் மற்றும் பணிகள்:

**சுகாதாரம் மற்றும் போசாக்கு**

1. கொள்கை வகுத்தல், சுகாதாரப் பிரிவுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
2. சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியம் பற்றிய விடயங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக கொள்கைகள் உருவாக்கம், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்,கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.
3. பொது சுகாதார சேவைகளுக்கு தேவைப்படும் கொள்கைகள் தர நியமங்கள் உருவாக்கம்.
4. பொது சுகாதாரம் மற்றும் போசணை என்பவற்றை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சி திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தல்
5. சர்வதேச தடுப்பு காப்பு மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்
6. தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்கள் என்பவற்றின் தரம் நியமங்கள் மற்றும் விலையிடல் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை
7. தொண்டு அடிப்படையிலான மருத்துவ நிறுவனங்களின் ஒழுங்கு முறைகள் மற்றும் மேற்பார்வை
8. தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் கட்டுப்பாடு தடுப்பு மற்றும் குணப்படுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
9. பாடசாலை சுகாதார பணிகள் மற்றும் பல் மருத்துவ சேவைகளை நடைமுறைப்படுத்தல்
10. தோட்டத்துறையின் சுகாதார பராமரிப்பு தொடர்பான விடயங்கள்
11. பொதுத் துப்பரவேற்பாடுகள்
12. திரிபோஷா விநியோக திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
13. மாகான சபைகளின் கீழ்வருபவை தவிர்ந்த சகல மருத்துவமனைகள் மற்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் தொடர்பான முகாமைத்துவம்
14. அட்டவணைப்படுத்தப்பட்ட பயிற்சி வைத்தியசாலைகளின் அனைத்து திணைக்களங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை மேலாண்மை செய்தலும், ஒழுங்கமைத்தலும் மற்றும் பிற உயர் மருத்துவ கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு
15. தேசிய குருதி பரிமாற்ற சேவைகள் தொடர்பிலான விடயங்கள்
16. மருந்துகள் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான விடயங்கள்
17. இலங்கை மருத்துவ சேவைகள் தொடர்பான நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்
18. மருத்துவ மற்றும் துறை மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சி வாய்ப்புகளை விரிவு படுத்தல்
19. சுகாதார துறைக்கு உரிய ஆராய்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான புதிய உத்திகளை அறிமுகம் செய்தல்
20. தேசிய சுகாதார காப்பீட்டு திட்டங்கள் தொடர்பான விடயங்கள்

**நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள்** :

1. ஸ்ரீ ஜெயவர்த்தன பொது வைத்தியசாலை
2. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை
3. தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபை
4. தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை
5. அரசு மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
6. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
7. இலங்கை திரிபோஷா கம்பனி

### 1.2 இலங்கையின் தேசிய சுகாதாரச் சுட்டிகள்

சுகாதார சேவை வழங்கல் பணிகளை பகுப்பாய்வு செய்தல் சுகாதார சேவைகளை வழங்கும் போது உயர் வினைத்திறனையும் மற்றும் செயல் திறனையும் அடைந்து கொள்ளுவதற்கு காரணமாக இருக்கும். சுகாதார நிறுவனங்களின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை குறித்த காலத்துடன் மதிப்பீடு செய்வதன் மூலம் சுகாதார சேவையின் செயலாற்றுகையை தெரிவு செய்த சுட்டிகளைப் பயன்படுத்தி சுகாதார அளவீடுகளை மேற்கொள்ள முடியும். இத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு தேசிய சுகாதார செயலாற்றுகை கட்டமைப்பு ஒன்றை சுகாதாரத் திணைக்களம் இனங்கண்டுள்ளது. இச் சுட்டிகளைப் பயன்படுத்தி சுகாதார செயலாற்றுகை பகுப்பாய்வுக்கும் மற்றும் சரியான பாதையில் செல்லுவதற்கும் அத்துடன் பணியாட் தொகுதி தொடர்பிலும் வளங்களை பகிரும் போதும் தீர்மானம் ஒன்றை எடுக்கக் கூடியவாறு இச் சுட்டிகளைப் பயன்படுத்த முடியும். தெரிவு செய்யப்பட்ட பயன்தகு சுட்டிகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

| சுட்டி | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| பிறக்கும் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் | ஆண் - 72<br>பெண் - 78.6<br>(2011 – 2013) | - | - |
| தாய் மரண விகிதம் | 33.7 | 33.8 | 39 |
| ஐந்து வயதுக்கு கீழ் உள்ள இறப்பு விகிதம் (1,000 பிறப்புகளுக்கு) | 10.75 | 9.27 | 10.90 |
| குழந்தை இறப்பு விகிதம் ( 1,000 பிறப்புகளுக்கு) | 9.16 | 8.20 | 9.00 |
| தாய் வழி இறப்பு விகிதம் (100,000 பிறப்புகளுக்கு) | 6.59 | 5.80 | 6.30 |
| கர்ப்பிணி காலம் 8 வாரங்களுக்கு முன்னர் பதிவு செய்த தாய்மார்களின் விகிதம் | 77.08 | 78.47 | 79.40 |
| நிறை குறைந்த முன்பள்ளி வயது ( வயது 2-5) பிள்ளைகளின் விகிதம் | 16.97 | 21.23 | 20.50 |
| எடை குறைந்த பிறப்பு விகிதம் | 11.36 | 11.20 | 11.80 |
| சிறுவர் மறுசீரமைப்பு: தொண்டை அழற்சி ஏற்புவலி, குக்கல் ஆகிய மூன்று விடயங்களுக்கும் தடுப்பூசி வழங்கிய பிள்ளைகளின் விகிதம் | - | 97 | 96 |
| நோய்த் தொற்று ஏற்படாத மக்கள் தொகை 1,000 க்கு புதிய HIV தொற்று எண்ணிக்கை | 0.03 | 0.03 | 0.0082 |
| இருதய நோய். நீரிழிவு அல்லது காலங்கடந்த காசநோயினால் ஏற்படுகின்ற மரண விகிதம் | 17.7 | - | - |
| தற்கொலை மரண விகிதம் | 14.5 | 14.3 | 15.1 |
| அடையாளம் காணப்பட்ட வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்ட காச நோயாளர்களின் விகிதம் | 83.2 | 84.1 | 84.6 |
| தற்பொழுது antiretroviral **சிகிச்சை பெறுகின்ற** HIV **தொற்றுடன் வாழ்கின்றவர்களின் விகிதம்** | - | 15.13 | 36.98 |
| சர்வதேச சுகாதார ஒழுங்கு விதி (IHR) -சம- கொள்ளலவு சுட்டென் (Core Capacity Index) | - | 79.2 | 76 |
| திறமுறையான அடிப்படையில் இருக்க வேண்டிய உரிய அத்தியாவசிய மருந்துகள் மற்றும் கொள்வனவு செய்யும் சாத்தியம் பற்றிய சுகாதார வசதிகளின் அளவு | | 50%<br>**பொது 100.0**<br>**தனிப்பட்ட 95.29**<br>75%<br>**பொது 82.16**<br>**தனிப்பட்ட 80.26**<br>90%<br>**பொது 21.44**<br>**தனிப்பட்ட 53.04** | |

### 1.3 நேரொத்த அமைச்சுக்களின் நிறுவனங்களில் உள்ள மனித வள சுய விபரம் -2018

| இலக்கம் | பதவி வகுதி | 2018/12/31 அன்று மொத்த அங்கீகரிக்கபட்ட எண்ணிக்கை | ஒப்பந்த அடிப்படையில் உள்ள உத்தியோகத்தர்கள் | 2018/12/31 அன்று சேவையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் | 1609 | | 1580 |
| 2 | மருத்துவ உத்தியோகத்தர் | 13398 | | 11054 |
| 3 | மருத்துவ நிருவாக உத்தியோகத்தர் | 166 | | 97 |
| 4 | நிபுணத்துவ பல் மருத்துவர் | 71 | | 66 |
| 5 | பல் மருத்துவ உத்தியோகத்தர் | 747 | | 670 |
| 6 | நிருவாக சேவை உத்தியோகத்தர் | 41 | | 31 |
| 7 | வைத்திய ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் | 1406 | 2 | 1231 |
| 8 | கதிரியக்கர் | 773 | 1 | 470 |
| 9 | தொழில்நுட்ப வல்லுனர்கள் | 180 | 1 | 124 |
| 10 | இயன் மருத்துவர் | 565 | | 455 |
| 11 | மருந்தாளர் | 1273 | | 1076 |
| 12 | கண் தொழில்நுட்பவியலாளர் | 156 | | 140 |
| 13 | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் | 1687 | | 1136 |
| 14 | பொதுச் சுகாதார பரிசோதகர் | 208 | | 188 |
| 15 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | 24 | | 10 |
| 16 | EEG பதிவாளர் | 96 | | 86 |
| 17 | ECG பதிவாளர் | 411 | | 239 |
| 18 | உணவு மருந்து கண்காணிப்பாளர் | 35 | 1 | 12 |
| 19 | Orthoptist | 23 | | 9 |
| 20 | பொது சுகாதார ஆய்வக தொழில்நுட்பவியலாளர் | 119 | | 87 |
| 21 | பூச்சியியல் உத்தியோகத்தர் | 36 | | 24 |
| 22 | பல் தொழில்நுட்பவியலாளர் | 57 | | 32 |
| 23 | ஏனைய பணிப்பாளர் | 7 | | 6 |
| 24 | கணக்காளர் | 80 | 3 | 51 |
| 25 | RMO/AMO | 112 | | 107 |
| 26 | வேறு உத்தியோகத்தர்களும் சமாந்தர சேவைகளும் | 352 | | 171 |
| 27 | தாதி உத்தியோகத்தர் | 28363 | | 23857 |
| 28 | வேறு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 196 | 1 | 131 |
| 29 | ஏனைய ஆரம்ப மட்ட பயிலுநர்கள் | 1301 | 2 | 998 |
| 30 | ஏனைய ஆரம்ப மட்ட ஓரளவு பயிலுநர்கள் | 1753 | | 1226 |
| 31 | ஏனைய ஆரம்ப மட்ட பயிற்றப்படாதவர்கள் | 909 | | 574 |
| 32 | வேறு இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை | 5551 | | 4120 |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் | | | |
| 33 | பொதுச் சுகாதார தாதி | 63 | | 41 |
| 34 | பரிசாரர் | 6313 | | 1637 |
| 35 | ஊழியர்கள் | 20993 | | 18721 |
| 36 | மருந்து கலவையாளர் | 140 | | 128 |
| 37 | மனித வளங்கள் | 1 | | 0 |
| | **மொத்த எண்ணிக்கை** | **89212** | **16** | **73589** |

## 1.4 வருடாந்த நிதி செயாலாற்றுகை சுருக்கம் 2018

| கருத்திட்ட இலக்கம் | விபரம் | மதிப்பீடு 2018 (ரூபா) | திருத்தப்பட்ட வரவு செலவு 2018 (ரூபா) | செலவு 2018 (ரூபா) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | **133,043,550,000** | **137,592,550,000** | **134,448,816,751** |
| | **தனிநபர் வேதனாதிகள்** | **69,894,750,000** | **74,007,005,000** | **73,976,446,141** |
| 1001 | சம்பளங்களும் கூலிகளும் | 27,746,950,000 | 29,218,655,000 | 29,207,375,830 |
| 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு | 16,432,800,000 | 21,747,400,000 | 21,735,028,177 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 25,715,000,000 | 23,040,950,000 | 23,034,042,135 |
| | **போக்குவரத்து செலவுகள்** | **201,300,000** | **255,160,000** | **253,511,119** |
| 1101 | உள்நாட்டு | 132,300,000 | 165,860,000 | 164,948,220 |
| 1102 | வெளிநாட்டு | 69,000,000 | 89,300,000 | 88,562,899 |
| | **வழங்குதல்** | **48,392,300,000** | **49,363,988,100** | **46,648,878,529** |
| 1201 | காகிதாகி மற்றும் அலுவலக உபகரணம் | 245,700,000 | 338,233,100 | 333,531,443 |
| 1202 | எரிபொருள் | 373,300,000 | 434,330,000 | 428,241,289 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 2,340,300,000 | 1,921,400,000 | 1,917,109,196 |
| 1204 | மருத்துவ வழங்கல் | 45,025,000,000 | 46,025,000,000 | 43,330,646,343 |
| 1205 | ஏனைய | 408,000,000 | 645,025,000 | 639,350,258 |
| | **பராமரிப்பு செலவுகள்** | **681,400,000** | **800,714,400** | **794,047,301** |
| 1301 | வாகனங்கள் | 253,500,000 | 264,620,000 | 261,389,695 |
| 1302 | இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 171,200,000 | 200,020,000 | 198,930,869 |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | 256,700,000 | 336,074,400 | 333,726,737 |
| | **சேவைகள்** | **7,133,400,000** | **7,895,677,500** | **7,764,757,176** |
| 1401 | போக்குவரத்து | 36,200,000 | 75,880,600 | 64,026,174 |
| 1402 | தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 575,200,200 | 635,790,500 | 634,314,166 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 2,596,500,000 | 2,998,319,000 | 2,938,205,295 |
| 1404 | வாடகை மற்றும் உள்ளூராட்சி மன்ற வரி | 200,000,000 | 236,237,400 | 200,307,404 |
| 1408 | குத்தகைஅடிப்படிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள் | 667,000,000 | 4,350,000 | 4,230,288 |
| 1409 | ஏனைய | 3,058,500,000 | 3,945,100,000 | 3,923,673,848 |
| | **இடமாற்றம்** | **3,707,900,000** | **2,798,505,000** | **2,551,778,275** |
| | நலன்புரித் திட்டங்கள் | 3,080,000,000 | 2,226,000,000 | 1,982,108,578 |
| 1503 | பொது நிறுவனங்கள் | 21,000,000 | 21,000,000 | 20,485,980 |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்பு தொகை | 28,000,000 | - | - |
| 1506 | பொது ஊழியர்களுக்கு ஆதனக் கடன் வட்டி | 556,000,000 | 524,880,000 | 523,353,108 |
| 1508 | ஏனைய | 22,900,000 | 26,625,000 | 25,830,610 |
| | **ஏனைய மீளாய்வு செலவினம்** | 3,032,500,000 | 2,471,500,000 | 2,459,398,208 |
| 1703 | அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் | 3,000,000 | - | - |

| கருத்திட்ட இலக்கம் | விபரம் | மதிப்பீடு 2018 (ரூபா) | திருத்தப்பட்ட வரவு செலவு 2018 (ரூபா) | செலவு 2018 (ரூபா) |
|---|---|---|---|---|
| **மூலதன செலவினம்** | | **43,349,000,000** | **46,998,688,000** | **32,534,934,021.98** |
| | **மூலதன சொத்துகளின் சீரமைப்பு மற்றும் மேம்பாடு** | **7,345,700,000** | **7,652,316,423** | **6,829,576,666.95** |
| 2001 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | 4,717,250,000 | 4,992,306,337 | 4,218,970,484.54 |
| 2002 | இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 2,530,450,000 | 2,552,482,356 | 2,517,538,146.40 |
| 2003 | வாகனங்கள் | 98,000,000 | 107,527,730 | 93,068,036.01 |
| | **மூலதன சொத்துக்கள் கையகப்படுத்தல்** | **25,722,500,000** | **27,481,972,686** | **17,734,661,997.39** |
| 2101 | வாகனங்கள் | 200,000,000 | 1,582,688,000 | 458,512,500.00 |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 425,000,000 | 448,374,544 | 420,239,946.61 |
| 2103 | இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 13,198,500,000 | 13,046,771,519 | 8,345,605,736.55 |
| 2104 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | 11,540,000,000 | 12,045,138,623 | 8,487,109,250.23 |
| 2106 | மென்பொருள் அபிவிருத்தி | 359,000,000 | 359,000,000 | 23,194,564.00 |
| | **மூலதன இடமாற்றம்** | **1,404,500,000** | **1,404,500,000** | **1,079,479,687.63** |
| 2201 | பொது நிறுவனங்கள் | 1,397,500,000 | 1,397,500,000 | 1,073,739,409.02 |
| 2202 | அபிவிருத்தி உதவி | 7,000,000 | 7,000,000 | 5,740,278.61 |
| | **ஆற்றல் விருத்தி** | **928,300,000** | **1,010,237,421** | **972,622,441.37** |
| 2401 | பணியாட் தொகுதி பயிற்சி | 928,300,000 | 1,010,237,421 | 972,622,441.37 |
| | **ஏனைய மூலதன செலவுகள்** | **7,948,000,000** | **9,449,661,470** | **5,918,593,228.64** |
| 2505 | கொள்வனவுக்கு முன்னரான ஆயத்தம் | 148,400,000 | 141,251,262 | 93,892,562.93 |
| 2506 | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 1,190,000,000 | 1,126,000,000 | 618,520,334.26 |
| 2507 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 106,000,000 | 181,000,000 | 115,591,717.99 |
| 2509 | வேறு | 6,503,600,000 | 8,001,410,208 | 5,090,588,613.46 |

## 2.0 2018 ஆம் ஆண்டு அடைந்த பிரதான வெற்றிகள்

**கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன இந் நாட்டு மக்களுக்கு ஆற்றிய சேவைகளுக்கான "சுவபதி" விருது வழங்கும் வைபவத்தின் போது**



கௌரவ சுகாதார. போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர். மருத்துவர் ராஜித சேனாரத்ன " சுவபதி" விருதினைப் பெற்றுக் கொண்டார். சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் இலங்கை சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும் உலக சுகாதார நிறுவனமும் (WHO) இணைந்து கௌரவ சுகாதார அமைச்சரினால் மக்களின் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைப்பதற்கு மேற்கொண்ட பங்களிப்புக்காக பாராட்டுவதற்காகவே இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வைபவம் 2018 ஜூலை மாதம் 31 ஆந் திகதி அதிமேதகைய சனாதிபதி. கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க. உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மருத்துவர் ராசியா பென்சே, அமைச்சர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. கௌரவ சுகாதார அமைச்சர் மக்களுக்காக செய்த சேவைகளில் அனைத்து மருந்துகளின் விலைகளும் குறைக்கப்பட்டமை, கண்ணில் வெள்ளை படர்ந்த நோயாளர்களுக்கு இலவச கண் வில்லைகள் வழங்கியமை, இருதய நோயாளர்களுக்கு இலவசமாக ஸ்டேன் (Stents) வழங்கியமை, அனைத்து குருதிப் பரிசோதனைகளும் கட்டண அறவீடு இன்றி பெற்றுக் கொள்ளுவதற்கான வசதிகள் மற்றும் புற்று நோய் சிகிச்சைக்கு உரித்துள்ள அனைத்து புற்று நோயாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற நிதியை 1.5 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல்.

- **70 வது உலக சுகாதார தினம் 2018 ஏப்ரல் மாதம் கொழும்பில் (உலக சுகாதார அமைப்பினால்) கொண்டாடப்பட்டது.**

உலக சுகாதார அமைப்பின் (WHO) 70 வது உலக சுகாதார தினம் மிகவும் விமர்சையாக தாமரைத் தடாகம் கலையரங்கில் 2018.04.07 ஆந் திகதி அதிமேதகைய சனாதிபதி மைத்திரிபால சிரிசேன மற்றும் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் ஆதனோம் கிரபேசேசஸ் அவர்களது பங்களிப்புடன் நடைபெற்றது. எல்லா ஆண்டுகளும் ஏப்ரல் மாதம் 07 ஆந் திகதி உலக சுகாதார அமைப்பினால் உலக சுகாதார தினம் கொண்டாடப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டின் சர்வதேச விழா இலங்கையில் நடத்தப்பட்டது.. 2018 ஆம் ஆண்டு உலக சுகாதார தினத்தின் தொனிப்பொருள் " உலக சுகாதாரம் அனைவருக்கும். எல்லா இடங்களிலும்" என்பதாகும்.




தேசிய தரப்படுத்தல் தொலைக்காட்சி வலையமைப்பு (NQTV) இலத்திரனியல் சுகாதார அட்டை (e Health Card), நினைவு முத்திரை மற்றும் இலங்கைக்கான திறமுறை அபிவிருத்தி இலக்கு வழி (SDG Tracker for Sri Lanka) ஆகிய செயற்பாடுகள் அதிமேதகைய சனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் சீசெல்ஸ் நாட்டின் கௌரவ பிரதமர், கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க, கௌரவ சுகதாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் பைசல் காசிம், உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் ஆதனோம் கிரபேசேசஸ் உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் புனாமி கெத்ரபோல் சிங் போன்ற உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

- **ருபெல்லாவை இல்லாதொழித்த நாடாக இலங்கையை பெயரிடுதல்.**




இந்தியாவின் புதுடில்லியில் 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் (WHO) தென்கிழக்காசிய பிராந்தியக் கூட்டத்தில் இலங்கை ருபெல்லா இல்லாத நாடாக உலக சுகாதார அமைப்பினால் பெயரிடப்பட்டது, இந்தச் சான்றிதழ் தென்கிழக்காசிய வலயத்தின் (WHO SEAR) பிராந்தியப் பணிப்பாளர் மருத்துவர் புனாமி கெத்ரபோல் சிங்கினால் கௌரவ சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு வழங்கப்பட்டது. உலக சுகாதார அமைப்பினால் இலங்கை 2015 ஆம் ஆண்டு மலேரியா இல்லாத நாடாகவும், 2016 ஆம் ஆண்டு யானைக்கால் நோய் இல்லாத நாடாகவும், 2017 சிறுவர் ஏற்புவலி இல்லாத நாடாகவும் 2018 ஆம் ஆண்டு ருபெல்லா நோய் இல்லாத நாடாக பெயரிட்டமை இந்நாட்டு சுகாதார சேவை அடைந்த இன்னுமொரு திருப்பு முனையாகும். என

மருத்துவர் சிங் தெரிவித்தார். இலங்கை எல்லா ஆண்டும் நோயை இல்லாதொழிப்பது, இந் நாட்டின் சுகாதார சேவையின் தலைமைத்துவம் வழங்குகின்ற பாரிய ஒத்துழைப்பின் காரணத்தால் பெற்றுக் கொண்ட வெற்றியாகும் எனப் பாராட்டி உலக சுகாதார அமைப்பின் பிராந்தியப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

- **இலங்கை சனாதிபதியின் அனுசரணையுடன் தொற்றா நோய் தொடர்பான முதலாவது சார்க் (SAARC) கூட்டம் நடந்தமை**

2018 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந்திகதி கோல்பேஸ் ஹோட்டலில் அதிமேதகைய சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் அனுசரணையுடன் தொற்றாநோய் (NCD) தொடர்பான முதலாவது சார்க் (SAARC) கூட்டம் நடைபெற்றது. தொற்றா நோய் (NCDs) காரணமாக வருடாந்தம் உலகம் பூராவும் சுமார் 10 மில்லியன் மக்கள் மரணமடைவதுடன் இதற்கு பிரதான காரணம் தவறான உணவுப் பழக்கம். உடற்பயிற்சி செய்யாமை, மன அழுத்தம் மற்றும் மதுபானம் அத்துடன் புகைபிடிக்கும் பழக்கம் போன்றன காரணங்களாகக் கருதப்படுகின்றது. இந்த தொற்றா நோயைக் கட்டுப்படுத்துவதற்காக உலக சுகாதார அமைப்பினால் (WHO) அனேக நாடுகளில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



- **கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன உலக சுகாதார அமைப்பின் (WHO) உப தலைவராக தெரிவு செய்யப்படல்.**

உலக சுகாதார அமைப்பின் (WHO) நிறைவேற்றுக் குழுவின் உப தலைவராக கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன ஜெனீவாவில் நடைபெற்ற அதன் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். 2018.05.28 ஆந் திகதி நடந்த WHO நிறைவேற்றுக் குழுவின் தெற்காசிய வலயத்தின் 143 வது அமர்வின் போது ஒரு வருட காலத்துக்காக அவர் உப தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார். இந்த நிறைவேற்றுக் குழு சுகாதாரத் துறையின் தொழில்நுட்ப தகைமையைக் கொண்ட அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும். இந்த அங்கத்தவர்கள் மூன்று வருட காலத்துக்காக தெரிவு செய்யப்படுவர் இந்தக் குழுவின் பிரதான பணிகளாவன. உலக சுகாதார பேரவைக்கு (World Health Assembly) தேவையான தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதைப் பலப்படுத்துதல் மற்றும் ஆலோசனைளை வழங்குதல் அத்துடன் பொதுவான பணிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.





- **" Cuba Salud 2018 " சர்வதேச மாநாட்டில் கியுபாவில் உற்பத்தி செய்கின்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.**





கியுபாவின் பொதுச் சுகாதார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் 82 நாடுகளில் இருந்து சுமார் 3,000 க்கும் அதிகமான முக்கிய நபர்களுடன் பிரதான சுகாதாரப் பிரிவின் பிரதானியான உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் ஆதனோம் கிரபேசேசஸ் கலந்து கொண்டார். இலங்கையின் சுகாதாரப் பிரிவின் அபிவிருத்திக்காக கியுபா அரசாங்கம் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பை வழங்கியது. அண்மையில் கியுபாவின் ஹவானா மாநாட்டு நிலையத்தில் நடந்த " Cuba Salud 2018 " சர்வதேச மாநாட்டின் போது சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன அவர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு கியுபா பொதுச் சுகாதார அமைச்சர் ரொபேட்டோ மொராலெஸ் ஒஜேடா உறுதியளித்தார்.

இரண்டு அமைச்சர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது கியுபாவில் உற்பத்தி செய்கின்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (SPC) ஊடாக இலங்கைக்கு பெற்றுக் கொள்ளுவதற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இலங்கை மற்றும் கியுபா சுகாதார அதிகாரபீடங்களுக்கு இடையே சில கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

➢ **சீனா – இலங்கை நற்பு மருத்துவமனை ஒன்றை நிருமாணித்தல் ( தெற்காசியாவின் மிகப் பெரிய சிறுநீரக மருத்துவமனை )**





சீனாவின் நன்கொடையாகக் கிடைக்கின்ற பொலன்நறுவ தேசிய சிறுநீரக மருத்துவமனையை நிருமாணிக்கும் பணிகள் 2018.08.21 ஆந் திகதி அதிமேதகைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கு அதிமேதகைய சனாதிபதியின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் முகமாக இந்தப் புதிய மருத்துவமனையானது தெற்காசியாவின் மிகப்பெரிய சிறுநீரக மருத்துவமனையாக 1.2 பில்லியன் ரூபா செலவில் நிருமாணிக்கப்படுகின்றது. வடமத்திய மாகாணத்துக்கு மாத்திரமின்றி ஏனைய பிரதேசங்களிலும் வசிக்கின்ற மக்களுக்கு இந்த மருத்துவமனை மிகப்பெறுமதி வாய்ந்த ஒன்றாக விளங்கும் என்பதுடன் இது இலங்கை மக்களுக்காக கிடைத்த நன்கொடையாகும். இந்த மருத்துவமனைக் கருத்திட்டம் அதிநவீன உபகரணங்களைக் கொண்டதும் சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இதில் உள்ளடங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் 200 நோயாளர் கட்டில்களைக் கொண்ட களக் கட்டடத் தொகுதியும் , 100 கசிவுகளை வடிகட்டும் இயந்திரங்கள் கொண்ட வெளி நோயாளர் பிரிவு (OPD) மற்றும் ஆறு நவீன சத்திர சிகிச்சைக் கூடங்களையும் கொண்டதாகும். 200 ஆசனங்களைக் கொண்ட கேட்போர்கூடம் மற்றும் 300 வாகனங்களை நிறுத்தக் கூடிய வாகனத் தரிப்பிடம் மற்றும் பணியாட் தொகுதியினருக்கான வதிவிட வசதிகள் போன்றனவும் இந்த மருத்துவமனையில் தாபிக்கப்படவுள்ளது. இக் கருத்திட்டம் 24 மாதங்களில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதுடன் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் இந்த மருத்துவமனையின் ஊடாக மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறான ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளது.

➢ **களுத்துரை மாவட்டத்தின் பொது மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை ஆரம்பித்தல்.**

களுத்துறை மாவட்டத்தில் புதிதாக நிருமாணிக்கப்படுகின்ற விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு (A & E Unit) கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவினால் 2018.05.10 ஆந் திகதி மிகச் சிறப்பாக திறந்து வைக்கப்பட்டது. இக் கருத்திட்டத்துக்காக அமைச்சினால் 1030 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதுடன் இந் நாட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்துவதற்கு கௌரவ அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் நாடு பூராவும் நிருமாணிக்கின்ற A & E பிரிவுகளில் இதுவும் ஒன்றாகும்.



➢ **யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்காக புனரமைப்பு நிலையமொன்றை நிருமாணித்தல்.**




யாழ்ப்பாண மருத்துவமனையில் புனரமைப்பு நிலையமொன்றுக்கான அடிக்கல்லை கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவினால் 2018.08.16 அன்று நடப்பட்டது. இக் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் 530 மில்லியன் ரூபாவாகும்.என்பதுடன் இது குவைத் செஞ்சிலுவைச் சங்கத்தின் நன்கொடையாகும்.

➢ **கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை நிருமாணித்தல்.**

கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜிதசேனாரத்னவின் அனுசரணையுடன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த தள மருத்துவமனையில் உத்தேச நவீன விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் 2018.06.17 ஆந் திகதி நடைபெற்றது. இக் கருத்திட்டத்தின் செலவு சுமார் 1900 மில்லியன் ரூபாவாகும்.





**மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவொன்றை நிருமாணித்தல்.**




கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜிதசேனாரத்னவின் தலைமையில் கௌரவ பிரதி அமைச்சர் பைசல் காசிமின் பங்களிப்புடன் 2018.06.17 ஆந் திகதி மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவொன்றை நிருமாணிப்பதற்காக அடிக்கல் நடப்பட்டது. இக் கருத்திட்டத்திற்கான செலவு 3,383 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் இக் கருத்திட்டத்தை ஒரு வருடமும் 10 மாதங்களிலும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மட்டக்களப்பு போதனா மருத்துவனையில் 04 வது மட்டத்திலான விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை ஆரம்பித்தல்.**




கௌரவ சுகாதார அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி சுகாதார அமைச்சரினால் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் 04 வது மட்டத்திலான விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவொன்று 2018.06.17 ஆந் திகதி மிகச் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது. இக் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 895 மில்லியன் ரூபாவாகும்.

- **பகமுன பிரதேச மருத்துவமனையின் சிறுநீரக நோயைத் தடுக்கும் பிரிவு மற்றும் புதிய நிருவாகக் கட்டடம்**





- பொலன்நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள பகமுன பிரதேச மருத்துவமனைக்காக புதிதாக நிருமாணிக்கப்பட்ட "சிறுநீரக நோயைத் தடுக்கும் பிரிவு மற்றும் புதிய நிருவாகக் கட்டடம்" கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையில் 2018.08.01 ஆந் திகதி மிகச் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிருமாணிப்பு "புபுதமு பொலன்நறுவ" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டதாகும்.

➢ **உலக புகைத்தலை எதிர்க்கும் தினத்தைக் கொண்டாடுதல் - 2018**




உலக புகைத்தலை எதிர்க்கும் தினம் ' புகையிலை மற்றும் இருதய நோய்' என்னும் தொனிப் பொருளின் கீழ் 2018 ஜூன் மாதம் 07 ஆந் திகதி பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் (Waters Edge) இல் நடபெற்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவின் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றது.

நாடா (NATA) நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோனின் வரவேற்புரையுடன் இந்த வைபவம் ஆரம்பிக்கப்பட்டது. சுகாதார,போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் திரு ஜனக சுகததாச , சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜயசிங்க, உலக சுகாதார அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி மருத்துவர் ராசியா பென்சே , இலங்கை இருதய சங்கத்தின் தலைவர் மருத்துவர் எம்.ஆர்.முபாரக், புகையிலை பாவனையைக் கட்டுப்படுத்துதல் சம்பந்தமான பல்வேறு அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறுபட்ட 250 பேர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். இதன்போது 'தும்வெட்டியென் மிதென ஹதவத்' என்னும் புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

➢ **இலங்கையில் உடல் உறுப்புகளை ஒட்டும்போது நிலவுகின்ற தடையை அகற்றும் நோக்கில் ' உடல் உறுப்புகளை தானம் செய்யும் தினம் 2018 ' கொண்டாடப்பட்டது.**




கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவினால் உடல் உறுப்புகளை ஒட்டுவதற்குத் தேவையான நோயாளர்களுக்கு உடல் உறுப்புகளை வழங்குவதனை தைரியப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அரச அல்லது தனியார் துறையின் நோயாளர்களுக்காக உடல் உறுப்புகளை வழங்கும்போது நோயாளர்கள் மீது திணிக்கப்படும் செலவுகளை நீக்கும் நோக்கில் சுகாதார அமைச்சினால் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

➢ **மெடிகெயா தேசிய சுகாதார கண்காட்சி - 2018**



மருத்துவவியல் தொழில்நுட்பத்தில் உள்ள அதிநவீன உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனைப் பலப்படுத்தும் நோக்கில் தேசிய மெடிகெயா சுகாதாரக் கண்காட்சி 2018, B2C கண்காட்சியாகும். இக் கண்காட்சியின் மூலம் வியாபாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்களில் அவர்களது வியாபாரங்கள் மற்றும் மருத்துவவியலின் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பில் விளம்பரப்படுத்தலுக்கு ஒரு சிறந்த சந்தர்ப்பமாகக்கிக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இதன் அடிப்படை நோக்கமானது நோய்களை இனங்காணல், தடுத்தல் மற்றும் நிலவுகின்ற நவீன தொழில்நுட்பம் தொடர்பிலும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பிலும் தற்போதைய சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவதாகும்.

➢ **உலக குருதி வழங்குநர் தினத்தைக் கொண்டாடுதல் - 2018**



கிரேக்கத்தினால் உருவாக்கப்பட்ட உலக குருதி வழங்குநர் தினம் - 2018 கௌரவ சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையில் " Blood Connects us All " (குருதி எம் அனைவரையும் இணைக்கின்றது) என்னும் தொனிப்பொருளின் கீழ் ஜூன் மாதம் 14 திகதி தாமரைத் தடாகம் கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வு வருடாந்தம் நடைபெறுவதுடன் எல்லா ஆண்டுகளும் ஒரு தினத்தைப் பயன்படுத்தி தொண்டர் அடிப்படையில் குருதியை கொடையாக வழங்குபவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் அவர்களைப் பாராட்டுவதற்கும் குருதி வழங்குவதை தைரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக குருதியை வழங்குவதனால் உயிரொன்று காப்பாற்றப்படுதல் மற்றும் வாழ்வின் மாற்றம் தொடர்பிலான விழிப்பூட்டல் போன்றன மேற்கொள்ளப்படும். இன்றைய தினத்தின் தொனிப்பொருள் " வாழ்வில் பங்காளியாகுங்கள், குருதியை வழங்குங்கள்' " (Share Life, Give Blood). என்பதாகும்.

### 3.0 நேரொத்த அமைச்சின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் விசேட கருத்திட்டங்கள் மற்றும் பணிப்பாளர் பிரிவு

### 3.1 தொற்று நோய்களை கட்டுப்படுத்தல்

### 3.1.1 தொற்று நோயியல் பிரிவு :-

தடுப்பூசிகள் மூலம் தடுக்கக் கூடிய நோய் உட்பட அனேகமான தொற்று நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான சுகாதார அமைச்சின் மத்திய நிலையம் தொற்று நோயியல் பிரிவாகும். தடுப்பூசியால் தடுக்கக் கூடிய நோய்கள் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் கண்காணிப்பு உள்ளடங்கலான பெருமளவான தொற்று நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, தேசிய நோய்த்தடுப்பு நிகழ்ச்சி திட்டத்தை நடத்துதல் பேரழிவுகளின் போது நோய்க்கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்கான அவசரகால சிகிச்சைப் பிரிவாக செயற்படுதல் பல்கலைக்கழக மாணவர்கள் பட்டபின் படிப்பு மாணவர்கள் மற்றும் மருத்துவ கள சுகாதார அலுவலர்களுக்கான பயிற்சி அத்துடன் தொற்று நோய்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய பகுதிகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளுவது இதன் பிரதான பணிகளாகும்..

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- முன் ஆயத்தமாக ஒரு sentinel பிரதேசத்தில் Offline National Renal Registry மேம்படுத்துதல், பூர்த்தி செய்தல் மற்றும் நிறுவுதல்.
- முதல் வருடத்தில் CKDu Cohort ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்தல்.
- திமோர் லெஸ்வே (Timor-Leste) அரசின் நோய் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தை பலப்படுத்துவதற்காக அந்நாட்டின் சுகாதார உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமை
- வெளிக்களங்களில் தொற்று நோய்களை மதிப்பீடு செய்தல் உட்பட நிறுவன மட்டத்தில் கிளினிக்குகள் மற்றும் மரணங்கள் தொடர்பிலான மீளாய்வில் ஈடுபடுகின்ற தென் மாகாணத்தின் இன்புளுவென்சா தொற்று நோய் தொடர்பிலான ஆய்வுகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன..
- நிறுவன மட்டத்தில் இன்புளுவென்சா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான சுற்றறிக்கைகளை வெளியிட்டமை.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

**1. நோய் தடுப்பு விகிதம்**

பிரதான தடுப்பூசிகளின் மூலம் தடுக்கக் கூடிய நோய்களுக்கான நோய் தடுப்பு விகிதம் 100% ஆகும்.

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| பீ.சீ.ஜி (BCG) | > 95% | > 95% | > 95% | > 95% |
| Pentavalent | > 95% | > 95% | > 95% | > 95% |
| டீ.ரி (DT) | > 95% | > 95% | > 95% | > 95% |
| சின்னமுத்து (Measles) | > 95% | > 95% | > 95% | > 95% |

### 3.1.2 காசநோய் மற்றும் மார்புநோய் கட்டுப்பாட்டு திட்டம்

தேசிய காச நோய் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய்கள் நிகழ்ச்சித்திட்டம் மார்பு நோய்கள் தொடர்பான பல செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. முன்னோடி மாவட்டங்களில் (களுத்துறை, கம்பஹா மற்றும் கேகாலை) அமைந்துள்ள அரசாங்க சுகாதார நிறுவனங்களில் நோயைக் கண்டுபிடித்தல் மற்றும் சிகிச்சை சேவைகளை பன்முகப்படுத்தல் தேசிய காசநோய் தொடர்பான ஆய்வுகூடம் (National Tuberculosis Reference Laboratory) ஊடாக நோயை இனங்காணல் சேவைகளை மேற்கொள்ளல், பிராந்தியத்தின் நுண்ணுயிர்களை உருவாக்கும் இரசாயனகூடம், மாவட்ட மார்பு கிளினிக் இரசாயனகூடம் மற்றும் நுண் மையங்கள், NPTCCD மத்திய மருந்துக் களஞ்சியம் ஊடாக மருந்துக் கொள்வனவு இந்த செயர்பாடுகளின் மூலம் நாட்டிலுள்ள காசநோய் மற்றும் பிற சுவாச நோய்களை கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுகைகள் உருவாக்குதல் நாடு முழுவதும் காசநோய் மற்றும் பிற சுவாச நோய்களை காட்டுப்படுத்தும் செயற்பாடுகளை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் நாட்டின் நிகழ்ச்சி திட்ட செயற்பாடுகளுக்கு தடையின்றி மருந்துகளை வழங்குதல் மற்றும் பிற தளபாடங்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தல், தொழில்நுட்ப வழிகாட்டுகைகள் மற்றும் நிதி உதவிகளை வழங்குதல் மனித வள அபிவிருத்தி, நோய் கண்டறியும் சேவைகளை ஒழுங்கு செய்தல் காசநோய் மற்றும் பிற சுவாச நோய்களின் தொடர்பான நிபுணத்துவ ஆலோசனை, தகவல் தொடர்புகள் மற்றும் சமூக அணிதிரட்டல், போன்ற பணிகள் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்ற.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- கம்பஹா DCC இல் உயிர் வேதியியல் மற்றும் இரத்தவியல் ஆய்வு கூடத்தை பூர்த்தி செய்தல் மற்றும் குருநாகல் DCC திருத்தப் பணிகள்.
- NPTCCD இல் நிருவாக பணியாட் தொகுதியினருக்கான உள்நாட்டுப் பயிற்சி வழங்கல்.
- 12 Gene - Xpert இயந்திரங்கள், நடமாடும் X-ray இயந்திரம் மற்றும் 17 டிஜிடல் X-ray இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்.
- NHSL மற்றும் NSACP உட்பட சுகாதார நிறுவனங்களில் 16 சளி சேகரிக்கும் நிலையங்களை நிருமாணித்தல்.
- இலத்திரனியல் தரவு முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் நெறிப்படுத்தல். வன் பொருட்களை கொள்வனவு செய்து முடிவுறுத்தியமை மற்றும் கொழும்பு, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.
- கொழும்பு சிறைச்சாலைக் கைதிகளுக்கான காச நோய் பரிசோதனைத் திட்டங்களை ஆரம்பித்தல்.
- சிறுவர் காசநோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சைகள் தொடர்பில் 2018 ஏப்ரல் மாதம் 23 தொடக்கம் 27 வரை SAARC வலய பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல்.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | | ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2015 | 2016 | 2017 | 2018 |
| காச நோய் தடுப்பு விகிதம் | சனத்தொகை 100,000 க்கு 60.7 | சனத்தொகை 100,000 க்கு 56.3 | சனத்தொகை 100,000 க்கு 44.5 | சனத்தொகை 100,000 க்கு 40.9 | சனத்தொகை 100,000 க்கு 39.0 | சனத்தொகை 100,000 க்கு 40.1 |
| காச நோய் சிகிச்சையின் வெற்றி விகிதம் | >90% | >90% | 83.2% | 84.1% | 84.6% | - |
| மீளாய்வு செய்யும்போது பாதிப்புற்ற விகிதம் (Loss to follow up rate) | <5% | <5% | 4.5% | 4.2% | 3.9% | - |
| காசநோய் மரண விகிதம் | <5% | <5% | 6.9% | 6.8% | 7% | - |

### 3.1.3 தொழுநோய் கட்டுப்பட்டுத் திட்டம்

தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம், இலங்கையின் தொழுநோய் கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் செயற்பாட்டு மையமாக செயற்படுகின்றது. இந்த இயக்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்ட சுட்டிகளைப் பயன்படுத்தி தேசிய தொழுநோய் மூலோபாயம் 2016 – 2020 ஐ செயற்படுத்தல் இதன் பொறுப்பாகும் அதுமாத்திரமன்றி பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் சுட்டிகளைப் பயன்படுத்தி தேசிய தொழுநோய் மூலோபாயம் 2016 – 2020 ஐ நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் உரிய பங்குதாரர்களுடன் கூட்டுறவை ஏற்படுத்தி பேணுதல், தொழுநோய் கட்டுப்பாட்டு செயற்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு மற்றும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல், தொழுநோய் தொடர்பாக சகல வகை ஊழியர்களுக்கும் பயிற்சி அளித்தல் தொழுநோய் கட்டுப்பாட்டு தொடர்பில் திறனை கட்டிஎழுப்புதல் உடல் ஊனமுற்றவர்களின் புனர்வாழ்வு தொடர்பில் விசேட கவனத்துடன் தொழுநோய் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சேவைகளை வழங்குதல், பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் தொடர்புகளை கண்டறிதல் தொடர்பாக விசேட கவனத்துடன் குறிப்பாக அடையாளம் காணப்பட்ட அதிகளவில் தொற்று வியாதியுள்ள மாவட்டங்களில் தொழுநோய் ஏற்படும் அபாயத்தில் உள்ள மக்களை பரிசோதனை செய்வதால் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதனூடாக நோயை கட்டுப்படுத்தல், சரும நோய் சிகிச்சை நிலையத்தில் தொழுநோயாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தல் என்பன இத்திட்டத்தினூடாக மேற்கொள்ளபப்டுகின்றது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :-**

- 2018 ஆண்டு தொற்று நோய் அதிகமாக க் காணப்படும் பிரதேசங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வீட்டுக் கண்காணிப்புகள் 15 உம் நோய் பரிசோதனைச் செயற்பாடுகள் 65 உம் சுகாதார பணியாட் தொகுதியினருக்கான 51 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன.

- நோயாளர்கள் தொடர்பான வரைபட முறைமை 2018 ஆம் ஆண்டு நாடு பூராவும் விரிவாக்கப்பட்டது.

- சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் (MOOH), தாதி உத்தியோகத்தர்கள்,பொதுச் சுகாதார இரசாயனகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (PHLTs), பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (PHII), GPS மற்றும் ஆயுர்வேத மருத்துவர்கள் போன்ற அனைத்து நோய் தடுப்பு மற்றும் சிகிச்சையளிக்கும் சுகாதாரப் பணியாட் தொகுதியினருக்கு பயிற்சி அளித்தல்..

- கொழும்பு மாநகர சபை பிரதேசத்துக்குள் நடமாடும் மாதாந்த கிளினிக்குகளை நடத்தியமை( 2018 ஆண்டுக்குள் 11 விசேட கிளினிக்குகள் நடத்தப்பட்டன.)

- 2018 ஆண்டு தோள் நோய் தொடர்பான கிளினிக்குகளில் மற்றும் செட்டலைட் கிளினிக்குகளில் தொழு நோய் சிசிச்சை சேவைகளின் பண்புசார் தன்மையை கண்காணிக்கும் விசேட செயற்பாடுகள் ( திருகோணமலை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, மொணறாகல, அம்பாறை, கல்முனை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் பதுளை மாவட்டங்கள்)

- மாவட்டங்களை மீளாய்வு செய்து 2018 ஆம் ஆண்டுக்குள் குருநாகல், கண்டி, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களில் தொழு நோயை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- ஜப்பான் NIID தொழு நோய் ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் DNA/PCR பரிசோதனையை ஆரம்பித்தல்..

- 2019 - 2020 , இல் நடத்தப்படவுள்ள " Social Marketing Campaign " க்காக 2018 இல் KAP ஆய்வை பூர்த்தி செய்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| இனங்காணப்பட்ட புதிய நோயாளர்களின் எண்ணிக்கை | 1977 | 1832 | 1873 | 1683 |
| NCDR ( 100,000 பேருக்கு) | 9.4 | 8.6 | 8.9 | 8.03 |
| சிறுவர்களின் விகிதம் | 11.3 | 8.6 | 10.4 | 9.74 |
| அங்கவீனமான விகிதம் | 10 | 7.5 | 7.3 | 6.5 |
| MB விகிதம் | 53.8 | 53.5 | 57.8 | 61 |

### 3.1.4 நோய் தடுப்பு காப்பு சேவைகள் :

நோய் தடுப்பு காப்பு பிரிவின் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு : எல்லை சுகாதார பாதுகாப்பு மற்றும் சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகள் (IHR) – 2005 தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல் நுழைவு முனைகளில் (துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ) பொது சுகாதார அலுவலகங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து கண்காணித்தல், நுழைவு முனைகளில் (POES) உள்ள துறைமுக விமான நிலைய சுகாதார அலுவலக ஊழியர்களுக்கு தொழில்நுட்ப வலிகாட்டுகைகளை வழங்குதல் நோய்காவிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் உள்ளடங்கலாக நோய்த்தொற்று அல்லது மாசுபாடுகளின் மூலங்களிருந்து விடுபட்டுள்ளது என்ற நிபந்தனையுடன் பராமரிப்பதற்கு அசுத்தமடைதலை தடுப்பதற்காக கப்பல்களையும் மற்றும் சரக்குகளையும் பரிசோதித்தல், மூட்டை முடிச்சுக்கள், சரக்குகள், கொள்கலன்கள், போக்குவரத்துகள், பொருட்கள், தபால் பொதிகள் மற்றும் மனித எச்சங்கள் அல்லது மனிதர்களுக்கான சுகாதார செயற்பாடுகள் என்பவற்றின் தொற்று நீக்கம் அல்லது சுத்தப்படுத்தல் என்பவற்றின் மீதான மேற்பார்வை கப்பல்கள் / விமானங்களில் பரிசோதனை மற்றும் இலவச துறைமுகத்தை பயன்படுத்துவதற்கு கப்பலுக்கு கொடுக்கப்படும் அனுமதியை வழங்குதல் நுழைவு முனைகளில் சுற்றாடல் சுகாதாரம் மற்றும் நோய்க்காவி கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தல், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவி துறைமுக சுகாதார அலுவலகம் ஊடக பயணிகளுக்கு மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி வாய்வழி போலியோ மருந்து meningococcal மருந்து மலேரியா எதிர்ப்பு தடுப்பு மருந்து (Anti-Malaria Prophylaxix) என்பவற்றை வழங்குதல் நுழைவு முனைகளில் (POEs) சர்வதேச சுகாதார ஒழுங்கு முறைகளின் IHR) முக்கிய விடயங்களை பேணுதல் IHR -2005 நோய் தடுப்பு காப்பு சட்டம், உணவுச் சட்டம், nata தொல்லை சட்டம் ( Nuisance) மற்றும் பிற தொடர்புடைய சட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை கண்காணித்தல், எல்லை சுகாதார பாதுகாப்பு மற்றும் IHR -2005 இல் பொது சுகாதார பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் நீண்ட காலம் தங்கியுள்ள வீசா வின்னப்பதாரகளுக்கு உடல் நல மதிப்பீட்டு நடைமுறைகளை நிலை நாட்டுவதனூடாக குடியேற்ற சுகாதார கொள்கையை செயற்படுத்துவதற்கு ஆதரவு வழங்குதல்

நோய்க் காவிகளைத் தடுப்பதற்கு கப்பல்கள் மற்றும் பொருட்களை பரிசோதனைக்கு உட்படுத்துதல்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- நோய் தடுப்புப் பிரிவு மற்றும் கப்பல் அத்துடன் துறைமுகங்கள் போன்ற இடங்களில் அமைந்துள்ள பொதுச் சுகாதார அலுவலகங்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்தல்..
- திருகோணமலை துறைமுகத்தில் அமைந்துள்ள சுகாதார அலுவலகத்தின் கட்டடத்தைப் புதுப்பித்தல்.
- சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாராத பணியாட் தொகுதியினருக்காக சுகாதார கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல்.
- நுழைவு இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைத் திட்டத்தை திருத்தம் செய்தல் மற்றும் அச்சிடல்.
- IHR தொழிற்பாட்டுக் குழுக் கூட்டம் மற்றும் மீளாய்வுக் கூட்டம் நடத்துதல் அத்துடன் நோய் தடுப்புச் சட்டம் தொடர்பான கூட்டங்களை நடத்துதல்.
- தகவல் முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்குதல்.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| சர்வதேச சுகாதார ஒழுங்கு விதியின் மத்திய ஆற்றல் சுட்டி | 79% | 76% | - |
| மஞ்சல் காய்ச்சல் தடுப்பூசி ஏற்றப்பட்ட உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை | 4,830 | 4,126 | 4,724 |
| கப்பல் துப்பரவேற்பாட்டுச் சான்றிதழுக்காக பரிசோதனை செய்யப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை | 340 | 340 | 352 |

3.2. **நோய்க்காவியின் ஊடாக- பரப்பப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தல்:**

**3.2.1 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு டெங்கு நோயால் ஏற்படும் ஆரோக்கியமின்மை மற்றும் மரண வீதத்தை குறைப்பதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆரம்பகால நோயறிதல், செயல்திறன்மிக்க நோயாளர் பராமரிப்பு, ஒருங்கிணைந்த நோய்க்காவி கட்டுப்பாடு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் பல செயற்பாடுகளுடன் தீவியாமான தேங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம் 2017 ஜூனில் ஆரம்பிக்கப்பட்டது. ஒருங்கிணைத்த நோய்க்காவி முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல், நோயாளர் பராமரிப்பினை மேம்படுத்தல் டெங்கு கட்டுப்பாட்டு தடுப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு துறைகளுக்கு இடையேயான தொடர்புகள் மற்றும் சமூக சேவைகளில் அதனைப் பயன்படுத்துதல். எச்சரிக்கை தொடர்பான தொடர்பாடல் மற்றும் நோய் பரவுவது தொடர்பிலான பதிலளித்தல். சாட்சிகள் அடிப்படையிலான கிளினிக் உதவிச் சேவைகள் robust டெங்கு தடுப்பு மற்றும் புதிய ஆய்வுகள் போன்ற பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- டெங்கு நோய் ஏற்படுதல் மற்றும் டெங்கு நோயாளர்களின் மரண விகிதம் குறைதல்.
- நோய்க் காவி ஒழிப்பு செயற்பாட்டுக்காக சுகாதார ஊழியர்களை ஆட்சேர்ப்புத் செய்தல்.
- அனைத்து பாரிய அச்சுறுத்தல் உள்ள மாவட்டங்களிலும் HDU அலகு ஒன்றை நிறுவுதல் (மாகாணப் பணிப்பாளர்களுக்கு உபகரணங்களுக்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டமை)

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| சம்பவங்களின் எண்ணிக்கை (Incidence) | 2023 ஆகும் போது <100/ 100,000 | 260/ 100,000 | 868/ 100,000 | 240/100,000 (இற்றைவரைப் படுத்தப்படுகின்றது ) |
| நோயாளர் மரண விகிதம் (Case Fatality Rate) | 2023 ஆகும் போது <0.1 | 0.17 | 0.21 | 0.11 (இற்றைவரைப் படுத்தப்படுகின்றது ) |
| முன்பதிவு அட்டவணை (Premise Index) | 2023 ஆகும் போது <1% | 6.84% | 9.68% | 8.8 (இற்றைவரைப் படுத்தப்படுகின்றது ) |
| Breteau Index | 2023 ஆகும் போது <1% | 8.86% | 11.67% | 10.1 (இற்றைவரைப் படுத்தப்படுகின்றது ) |
| நடத்தப்பட்ட அனுமானக் கண்காணிப்புத் திட்டத்தின் எண்ணிக்கை (கண்காணிப்பு செய்யப்பட்ட அனுமானங்களின் எண்ணிக்கை மில்லியனில்) | | 18 (2.3) | 20 (2.7) | 12 (1.5) |

3.2.2 **யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டம்** :

ஒட்டுண்ணியியல் கண்காணிப்பு மற்றும் எதிர்ச்செயல் நிலையினை கண்டறிதலை வலுப்படுத்தல் நோய்த்தடுப்பு முகாமைத்துவம் மற்றும் உடல் ஊனமுறுவதை தடுத்தல், நிபுணத்துவ ஆலோசனை தொடர்பாடல் மற்றும் சமூக அணி திரட்டல் செயற்பாட்டு ரீதியான ஆராய்ச்சியில் ஈடுபடல் இலங்கையில் தரக்கட்டுப்பாடு, மேம்பாடு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகளை யானைக்கால் தடுப்பு இயக்கம் இலங்கையில் மேற்கொள்கின்றது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- கண்காணிப்பின்போது பயன்படுத்துகின்ற நுட்ப முறையைத் தரப்படுத்துவதற்காக ஒட்டுண்ணி மற்றும் பூச்சியியல் ரீதியான வழிகாட்டல்களை ஏற்படுத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டுத் திட்டமொன்றை வகுத்தல்.
- காலி மாவட்டத்தில் அதிகளவான எச்சரிக்கையுள்ள சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (MOH) பிரிவில் (பலப்பிட்டி, ஹபராதுவ) மேம்படுத்தப்பட்ட ஒட்டுண்ணிக் கண்காணிப்புடன் Xenomonitoring (நுளம்புக் கண்காணிப்பு) நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்.
- இடம்பெயர்ந்த இந்திய தொழிலாளர்களுக்கு இடையே யானைக்கால் நோய் காணப்படுகின்ற 30 நோயாளர்களை இனங் காணல் ( மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 21 %) .
- பாடசாலைப் பிள்ளைகளுக்கான யானைக்கால் நோய் பற்றிய துண்டுப் பிரசுரமொன்றைத் தயாரித்தமை மற்றும் அச்சிட்டமை அத்துடன் தொற்று காணப்படுகின்ற மாவட்டங்களில் வசிக்கின்ற பாடசாலைப் பிள்ளைகளுக்காக பிரதேசத்தில் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல்.
- திருகோணமலை, மொணறாகல, அனுராதபுரம் மற்றும் நுவரெலியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அனுராதபுர மாவட்டத்தில் ( திறப்பனை MOH பிரதேசத்தில்) ஒரு யானைக்கால் நோயாளி இனங்காணப்பட்டது.
- முகநூல் (face book) உட்பட தொடர்பாடல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், தற்போதைய சவால்கள் தொடர்பில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகள் தயாரித்தல் அத்துடன் அச்சிடல். மக்களை விழிப்பூட்டுவதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துதல் ( தொலைக்காட்சி, மற்றும் ஒலிபெருக்கிச் சாதனங்களில் நேரடி நிகழ்ச்சிகள்) விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளுக்காக ஒளிப்பதிவுகளை மேற்கொள்ளல் அத்துடன் தொடர்பாடல் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக முகநூல் மற்றும் பிரதேச ஊடகங்களில் குறுகிய நிகழ்ச்சித் திட்டங்களை விளம்பரப்படுத்தல்.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| நுண்ணுயிர் விகிதம் (Microfilaria rate) | 2021 ஆகும் போது | 0.06 | 0.04 | 0.02 |
| நுண்ணுயிர் அடர்த்தி (Microfilaria density) | 2021 ஆகும் போது | 355.48 | 316.87 | 281.42 |
| பாதிக்கப்பட்ட விகிதம் (Infected rate) | 2021 ஆகும் போது | 0.85 | 0.77 | 0.93 |
| பரவக்கூடிய விகிதம் (Infective rate0 | 2021 ஆகும் போது | 0.01 | 0.03 | 0.03 |

### 3.2.3 மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம்

2016 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பினால் இலங்கை மலேரியா நோய் அற்ற நாடாக உறுதிப்படுத்தப்பட்டதுடன் எந்தவொரு உள்நாட்டு மலேரியா நோயாளர் ஒருவரும் இனங் காணப்படவில்லை. இந்த நிலைமை தக்க வைத்து கொள்ளப்பட்டுள்ளது. மலேரியா ஒழிப்பு இயக்கம் (AMC) இலங்கைக்கு மலேரியா மீண்டும் உருவாகுவதைத் தடுத்தல் அத்துடன் மலேரியா நோய் காரணமாக ஏற்படக்கூடிய மரண வீதத்தை பூஜ்ஜிய நிலையில் வைத்திருப்பதற்கும் முடிந்துள்ளது. 2018 திசெம்பர் மாதம் இந் நாட்டில் இனங்காணப்பட்ட மலேரியா நோயாளர் நீங்கலாக 2012 நவம்பர் மாதம் தொடக்கம் இலங்கையில் உள்நாட்டு மலேரியா நோயாளர்கள் இல்லை என்பதுடன் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் மலேரியா மரண விகிதம் பூஜ்ஜியமாகப் பேணப்படுகின்றது.

எவ்வாறாயினும், எச்சரிக்கைமிக்க மக்கள் வசிக்கின்றமை மற்றும் தற்பொழுது நோய் ஏற்படக்கூடிய தன்மை (receptivity) அதிக மட்டத்தில் காணப்படுதால் இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் ஏற்படக்கூடிய அதிகளவான எச்சரிக்கை நிலைமை காணப்படுகின்றது. வெளி நாடுகளில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு இந் நாட்டுக்கு வருகை தரும் இலங்கையினர் மற்றும் வெளி நாட்டவர் ஆகிய இரு தரப்பினர் ஊடாகவும் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற சர்வதேச இடம்பெயர்வுகள் மூலமும் மலேரியாநோய் மீண்டும் இந் நாட்டுக்குள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இந்த நோயைப் பரப்புகின்ற நோய்க் காவி நுளம்புகளும் இலகுவில் நகரம் சார்ந்த பிரதேசங்களில் பரவக்கூடும் எனவும் புதிய மலேரியா நோய் பரப்பும் நுளம்புகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டன.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- மலேரியா ஒழிப்பு இயக்கம் மலேரியா நோயாளர்களை முகாமைப்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளிலும் சுகாதார நிறுவனங்களுக்கு இலவசமாக மலேரியா நோயை இனங்காண்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் துரிதமாக வசதிகளை வழங்குவதன் மூலம் தனது துரித சேவையை விரிவாக்கம் செய்துள்ளது.

- நாட்டினுள் மலேரியா நோய் பரவுவதை தடுப்பதற்காக மலேரியா ஒழிப்பு இயக்கத்தினால் அச்சுறுத்தலாக உள்ள குழுக்களை இலக்கு வைத்து தூர இடங்களில் உள்ள பிரதேசங்களில் நடமாடும் கிளினிக்குகளை நடத்துதல். மருத்துவமனைகளை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் இரத்த வங்கி குருதிப் பரிசோதனை உட்பட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமான குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மலேரியா தொற்று நோய் காணப்படுகின்ற நாடுகளுக்கு பயணிக்கின்ற இலங்கையருக்காக அவர்களது வெளிநாட்டு பயணத்தின் போது மலேரியா நோய் பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் சிகிச்சைகளும் மலேரியா ஒழிப்பு இயக்கத்தினால் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

- மாதாந்தம் நாடு பூராவும் 30 இடங்களில் பொதுவான பாதுகாப்பு கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பை ஆய்வு செய்வதற்கு உதவியாக காலாண்டுக்கு ஒரு தடவை 50 இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.3 தொற்றா நோய்கள் கட்டுப்பாடு

### 3.3.1 தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டம் பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றது. பொது விழிப்புணர்வு மற்றும் வலுவூட்டல் என்பவற்றினூடாக புற்றுநோயை ஆரம்பத்திலேயே தடுத்தல், மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் மூலம் உரிய சேவை வழங்குநர் ஊடாக குறிப்பாக முன்னரே உதவி செய்வதன் ஊடாக புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கு ஆலோசனை வழங்குதல், முன்னராகவே நோயை இனங் காணக்கூடியவாறு நோய்க்குரிய அம்சங்களைக் கொண்டவர்களை பரிசோதனைக்கு உட்படுத்துதல் மற்றும் புற்று நோய் என சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களில் குறித்த அறிகுறியைக் கொண்ட ஆட்களை துரிதமாக சிகிச்சைக்காக தொடர்புபடுத்துதல். புற்றுநோய் சம்பந்தமாக நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சைகளுக்கான வசதிகள் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுத்தல்.. புனர்வாழ்வளித்தல், உயிருக்குப் பாதுகாப்பு, மற்றும் நோய்த்தடுப்பு பராமரிப்பு வசதிகள் , புற்று நோய் கண்காணிப்பு என்பவற்றில் மேம்பாடு புற்று நோய் தகவல் முறைமைகளில் மேம்பாடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மேம்பாடு சுகாதார பராமரிப்பு ஊழியர்களின் தொழில்சார் பயிற்சி, திறனை கட்டி எழுப்புதல் மற்றும் அதன் கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சி செய்தலும் பயன்பாடும், புற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை கண்காணித்தலும் மற்றும் மதிப்பீடு செய்தலும்

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- பொதுவான புற்றுநோய் தொடர்பான ஆரம்ப கட்ட உதவிச் சேவை மருத்துவர்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் நோயாளர்கள் நிபுணத்துவ மருத்துவர்களை நோக்கி தொடர்புபடுத்துவதற்கான திட்டங்களை வகுத்தல்.
- ஆரம்ப கட்ட உதவிச் சேவை மருத்துவர்கள் மற்றும் தாதி உத்தியோகத்தர்களுக்கான சலுகை அடிப்படையிலான உதவி (Palliative Care) வழங்குவது தொடர்பான வழிகாட்டல் புத்தகத்தின் வரைவொன்று மேற்கொண்டமை.
- புற்று நோய் வேதனை முகாமைத்துவம் என்னும் பெயரில் சிறிய புத்தகமொன்றைத் தயாரித்தல் மற்றும் அச்சிடல் வாய்ப் புற்று நோய் முகாமைத்துவத்துக்கான தேசிய வழிகாட்டல், வாய் தொடர்பிலான அதிகளவு பாதிப்பு (OPMD) / வாய்ப் புற்று நோய் தொடர்பிலான அதிகளவு எச்சரிக்கை மிக்க நோயாளர்களை இனங்காண்பதற்கும் குறித்த மக்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்ற குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள்/பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவது சம்பந்தமான சுற்றறிக்கைகள் மற்றும் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வாய்வழி சார்ந்த குறைபாடுகள் (Oral Potentially Malignant வாய்வழியாக ஏற்படக்கூடிய கோளாறுகள் (Oral Potentially Malignant Disorders) தொடர்பில் தேசிய வழிகாட்டல்களை திருத்தம் செய்தல் மற்றும் அச்சிடல்.
- மருத்துவமனை வளாகம் மற்றும் அனைத்து பிற சுகாதார சேவை நிறுவனங்களில் வெற்றிலை சாப்பிடுதல். வெற்றிலை விற்பனை. புகையிலை மற்றும் பாக்கு சார்ந்த உற்பத்திகள் விற்பனை செய்வதை தடை செய்தல் தொடர்பான சுற்றறிக்கையை அச்சிட்டு விநியோகித்தல்.
- ஆரம்ப சுகாதார சேவைகள் (PHC) பணியாட் தொகுதியனருக்காக புற்று நோய் தடுப்பு தொடர்பான கையேட்டின் முதலாவது வரைவைத் தயாரித்தல். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைத் திட்டத்துக்கு அமைவாக புற்று நோயை பதிவு செய்து கொள்ளுவதற்கான கையேடு ஒன்றை தயாரித்தல் மற்றும் புற்று நோய் கண்காணிப்பு படிவமொன்றை அச்சிடல்.
- சலுகை உதவிச் சேவைகள் (Palliative Care) தொடர்பில் தேசிய மூலோபாய கட்டமைப்பு ஒன்றை வெளியிடல்.
- புற்றுநோய் கண்காணிப்புக்காக ICD - 0 கையேடு மற்றும் திட்டமிடல் கையேடுகள் (Staging manuals) கொள்வனவு செய்தல்.

- மகரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் புற்றுநோய் உள்ள இளைஞர்கள். பாதுகாவலர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் மனநிலை - சமூகவியல் தேவைப்பாடுகள் மற்றும் மன அழுத்தம் அத்துடன் அவர்களது தியானத்துக்கான தகவல்களின் தேவைப்பாடுகள் இதில் தலையிடுவதன் போதான தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல். " இலங்கையில் பெண்களுக்கான மார்புப் புற்று தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல் " இலங்கையில் பெண் மார்பக புற்றுநோயாளர்கள் மரணிக்காது வாழ்பவர்களின் ஆயுட் காலம் தொடர்பிலான சகிச்சை வழிகாட்டிகள் "கால தாமதம் மற்றும் தாமதத்தின் தாக்கம் " தொடர்பில் ஆராய்ச்சிகள்" பற்றிய தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

- OPMD/ வாய்ப் புற்று நோயைத் தடுத்தல் மற்றும் பரிசோதனை செய்தல் தொடர்பாக பிரதேச பல் மருத்துவர்களுக்கு (RDSs) பயிற்சி அளிப்பவர்களை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.23 மாவட்டங்களின் பல் மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார உதவி பணியாட் தொகுதியினர்களுகான புற்றுநோய் ஒழிப்பு செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். பல் மருத்துவர்களுக்கான வாய்ப் புற்றுநோயை தடுத்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பாக பயிற்சியளிப்பவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் இந்தியாவில் நடைபெற்றமை. மற்றும் சுகாதார பணியாட்தொகுதிக்கான சலுகை அடிப்படையிலான சேவைகள் (Palliative Care) தொடர்பில் பயிற்சி பெறுபவர்களை பயிற்றுவிப்தற்கான நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியமை.

- தேசிய புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NCCP) புற்று நோய் பதிவு பணியாட் தொகுதி மகரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் புள்ளிவிபரவியல் பிரிவின் பணியாட் தொகுதி மற்றும் புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தில் ஈடுபடுகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கான செயலமர்வொன்றை நடத்தியமை.
- கொரியா சோல் நகரில் நடைபெற்ற புற்று நோய் ஒழிப்பு தொடர்பான ஐந்தாவது தலைமைத்துவ செயலமர்வில் கலந்து கொள்ளல்.
- தாய்லாந்து புரபா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மத்திய மட்டத்திலான முகாமையாளர்களுக்கான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம், புற்றுநோயைத் தடுத்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பில் சீனாவில் நடந்த ஆசிய பசுபிக் பயிற்சிப் பாடநெறி, போசாக்கின்மையின் காரணமாக இரட்டிப்பான அழுத்தங்கள் தொடர்பாக அவுஸ்திரேலியா வியானா நகரில் நடந்த சர்வதேச ஒன்றியம் போன்றவற்றில் கலந்து கொண்டமை.

- சிறிய கையேடுகள். துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிற கற்கைப் பொருட்களின் ஆக்கங்கள் மற்றும் அச்சிடல் ( பொதுவாக புற்றுநோயை ஆரம்பத்திலேயே தடுத்தல் மற்றும் முன்னரே இனங்காணல் தொடர்பில் அனைத்து மொழிகளிலுமான பிரசுரங்கள், பதாதைகள், பிளெக்ஸ் பெனர் மற்றும் சுவர் விளம்பரங்கள் உருவாக்குதல் மற்றும் " வாகனங்கள் நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்படும் விளம்பரங்களில் கல்விச் செய்திகளை பார்வைக்கு விடுதல் )

- ஊடகங்கள் தொடர்பான செயற்பாடுகள், ஊடக கருத்தரங்குகளை நடத்துதல் ( தலை மற்றும் கழுத்து சார்ந்த புற்று நோய்க்கான உலக தினம் மற்றும் மார்பு புற்று நோய் தொடர்பாக விழிப்பூட்டும் மாதத்தில் மார்புப் புற்று நோயைத் தடுத்தல் மற்றும் முன்னரே இனங் காணல் தொடர்பில் ஊடகங்கள்,தொலைக்காட்சிகளில் விளம்பரப்படுத்துதல்.

- தேசிய புற்றுநோய் ஒழிப்புத்திட்டத்தில் (NCCP) சிகிச்சை மற்றும் திட்டமிடல் பிரிவுக்காக புதிய நடமாடும் காண்காட்சிப் பிரிவு, ஹம்பாந்தோட்டை பொது மருத்துவமனைக்காக Chemotherapy isolator இயந்திரம், அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்காக Endoscopy பிரிவு, பதுளை மாகாண பொது மருத்துவமனைக்காக Contaminating monitors மற்றும் Movable lead shield barrier, அபேக்ஷா

மருத்துவமனைக்காக Colposcopy இயந்திரம், NCCP அலுவலகம் மற்றும் புற்றுநோயை முன்னரே கண்டறியும் நிலையத்துக்குத் தேவையான வேறு உபகரணங்கள் மற்றும் கருவிகள் ( கணினி,வேறு தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், பொது மக்கள் தொடர்பு கொள்ளக்கூடியதான முறைமை மற்றும் தளபாடங்கள்) கொள்வனவு செய்தல்.

- NCCP இன் கணினி வலையமைப்பு மற்றும் உள்ளக தொலைபேசி முறைமையை மேம்படுத்துதல்.

- தோட்டப் பிரிவின் சுகாதார நிருவாகத்துடன் வாய்ப் புற்று நோய் தொடர்பில் கேகாலை மாவட்டத்தில் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 19 மாவட்டங்களில் புற்றுநோய் தடுப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கு மாவட்ட மட்டத்தில் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. புற்று நோயைத் தடுத்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பான தேசிய ஆலோசனைக் குழுக் கூட்டங்கள், சலுகை அடிப்படையிலான உதவி தொடர்பான தேசிய தொழிற்பாட்டுக் கூட்டங்கள், HOI மற்றும் புற்று நோய் தொடர்பான நிபுணத்துவ மருத்துவர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- தனியார் சுகாதார நிறுவனங்களில் புற்றுநோய் கண்காணிப்பு முறைமையைப் பலப்படுத்துவதற்காக தனியார் சுகாதாரப் பிரிவை ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் மற்றும் உரிய ஆய்வு நிலையங்களுடன் இரண்டு கூட்டங்கள் நடத்தியமை. புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கான மேற்பார்வை பயணங்கள் - குருநாகல் மருத்துவமனை, மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட புற்றுநோய் கண்காணிப்பு தொடர்பான இறப்புப் பதிவாளர்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்களுடன் இரண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியமை. பிரதேச பல் மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார பணியாட் தொகுதியினர், மற்றும் பிற தரப்பினருடன் சேர்ந்து வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தியமை. “இலங்கையில் மார்புப் புற்று நோயைக் குறைத்தல் - எதிர்கால வழி “ தொடர்பான கலந்துரையாடலுக்கான கூட்டமொன்று நடத்தியமை.
- சுகாதார பணியாட் தொகுதியினால் புற்றுநோய் தடுப்பு மற்றும் சலுகை அடிப்படையிலான உதவிச் சேவைகளை வழங்குவதற்காக செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கும் பாராட்டுவதற்கும் “ புற்று நோய் தடுப்பு மற்றும் சலுகை அடிப்படையிலான உதவிச் சேவைகளை வழங்குவது பற்றிய சிறந்த ஆக்கத்திறன் வாய்ந்த செயற்பாடுகள் தொடர்பிலான தேசிய ஒன்றியம்” என்னும் பெயரில் மாநாடொன்று (symposium) நடத்தியமை.
- 2011 மற்றும் 2014 ஆண்டுகளில் புற்றுநோய் ஏற்படுகின்றமை தொடர்பிலான தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பிரகடனப்படுத்துதல்.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| புற்றுநோய் பற்றிய தரவுகளை வெளிப்படுத்தல். | " புற்றுநோய் பற்றிய தரவுகளை வெளிப்படுத்தலானது. நடப்பு ஆண்டிலிருந்து 3 வருடங்களை தாண்டாது இருத்தல் வேண்டும். | 2010 புற்றுநோய் பற்றிய தரவுகளை வெளிப்படுத்தப்பட்டது. | - | 2011 புற்றுநோய் பற்றிய தரவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2014 இடைக்கால அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| தேசிய ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடத்தியமை | ஆண்டொன்றுக்கு 4 கூட்டங்கள் நடாத்துதல் (காலண்டுக்கு 1 என்ற விகிதத்தில்) | 3 கூட்டங்கள் நடத்தப்பட்டன. | 3 கூட்டங்கள் நடத்தப்பட்டன. | 3 கூட்டங்கள் நடத்தப்பட்டன. |
| மாவட்ட மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தியமை | ஆண்டொன்றுக்கு 26 கூட்டங்கள் நடாத்துதல் (மாவட்டத்துக்கு 1 என்ற விகிதத்தில்) | 2 மீளாய்வுகள் நடத்தப்பட்டன. | 18 மீளாய்வுகள் நடத்தப்பட்டன | 19 மீளாய்வுகள் நடத்தப்பட்டன |
| பொதுவான புற்றுநோய்க்கான | பொதுவான புற்றுநோய்க்கான | OPMD முகாமைத்துவ | Colorectal, தைரொயிட் | இறைப்பை மற்றும் விதைப்பை தொடர்பான |

| | | | | |
|---|---|---|---|---|
| சரியான வழிகாட்டல்கள் மற்றும் தொடர்புபடுத்தும் திட்டங்களை வகுத்தல். | சரியான வழிகாட்டல்கள் மற்றும் தொடர்புபடுத்தும் திட்டங்களை பெற்றுக் கொள்ள முடிந்தது | வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமை. | புற்று நோய் மற்றும் மார்பு புற்று நோய் சம்பந்தமான வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தங்களைச் செய்தல். | வழிகாட்டல்கள் மற்றும் தொடர்புபடுத்தும் திட்டத்தை வகுத்தல், பொதுவாக பெண்களின் பிறப்புறுப்பு முறைமை சார்ந்த புற்று நோய் தொடர்பிலான வழிகாட்டல்கள் மற்றும் திருத்தங்கள், வாய்வழி புற்று தொடர்பான வழிகாட்டல்ளை வகுத்தல், OPMD மற்றும் வாய்வழி புற்றுநோய் சம்பந்தமான தொடர்புபடுத்தல் திட்டமொன்றை பிரகடனப்படுத்தியமை. |

3.3.2 **மனநல சேவைகள்**:

மனநல பணிப்பாளர் அலுவலகத்தின் முக்கிய பணிகளாவன :பணிப்பாளர் அலுவலகத்தின் ஆதிக்க வரம்பின் கீழ் முன்னுரிமை தேவைப்படும் மனநல சேவையின் முக்கியமான பகுதிகளில் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஆலோசகராக செயற்படல், மனநல சேவைகள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல் அல்லது மீளாய்வு செய்தல், மன நலம் தொடர்பில் மூலோபாயத்திட்டங்களை வகுத்தல், மதுபானம் மற்றும் போதைவஸ்து பயன்பாடு தற்கொலை மற்றும் ஏனைய தொடர்புடைய பகுதிகள் தொடர்பில் மூலோபாயத் திட்டங்களை வகுத்தல் மன நல சேவைகளின் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் உதவிகளை வலுப்படுத்தல், மன நலம் தொடர்பான தேசிய நடுத்தர கால மற்றும் வருடாந்த திட்டங்களை வகுத்தல், மன நலம் தொடர்பான மாகாண /மாவட்ட திட்டங்களை மேம்படுத்துவதை இலகுபடுத்தல், அரசாங்க அமைச்சுகள், தொழில்சார் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் சிவில் சமூகங்கள் மற்றும் நுகர்வோர் குழுக்கள் ஆகியவற்றுக் கிடையிலும் கூட்டு வலையமைப்புகளை ஏற்படுத்தி பேணுதல், தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களின் தலையீட்டுடன் சம்மந்தப்பட்ட கடமை பட்டியல்கள் உள்ளடங்கலாக தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ வழிகாட்டுகைகள் மற்றும் நெறிமுறைகள் / வடிவமைப்புகள் என்பவற்றை தயாரித்தல் மீளாய்வு செய்தல் திட்டம் குறித்த IEC பயிற்சி பொருட்களை ஏற்பாடு செய்தல், சேவையின் போதான மற்றும் பட்டப்பின் படிப்பு மட்டத்தில் சம்மந்தப்பட்ட ஊழியர்களின் திறனைக் கட்டிஎழுப்புதல் அவசர நிலைகள் பேரனர்த்தங்கள் மற்றும் விஷேட சூழ்நிலைகளில் உளவியல் ரீதியான முதலுதவி மற்றும் மன நல சேவைகள் வழங்குவதை உறுதி செய்தல் மத்திய மட்டத்தில் மன நல சுகாதார நிகழ்ச்சி திட்டத்தை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் நிகழ்ச்சி திட்ட செயற்பாடுகளுக்காக மனநல சுகாதாரம் தொடர்பில் மேம்படுத்தப்பட்ட தரவு தளத்தின் கிடைப்பனவை உறுதி செய்தல், பரிசோதனை தேவைப்படும் பகுதிகளை அடையாளம் கண்டு செயற்பாட்டு ரீதியான ஆராய்ச்சியினை நடத்துதல்

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- மன நல சுகாதார ஊக்குவிப்பு தொடர்பில் 05 மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார பணியாட் தொகுதியினருக்கு பயிற்சியளித்தல்.
- சேவை நிலையங்களில் மனநிலையை சிறந்தவாறு பேணுவதற்கு ஊக்குவித்தல்.
- ஆரம்ப மருத்துவ உதவி நிறுவனங்களில் மனநிலை சுகாதார உதவிகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பொதியொன்றைத் தயாரித்தல்.
- பாடசாலைப் பிள்ளைகளுக்கு இடையே உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் சிறுவர் உளவியல் சுகாதாரம் தொடர்பான உளவியல் சுகாதார தொழில்சார்பாளர்களுக்காக செயலமர்வுகளை நடத்துதல்.
- ஆரம்ப சுகாதார சேவைகள் உதவி ஊழியர்களுக்கான ஆலோசனை ஆற்றல் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல்.

- சமூக மனநல சுகாதாரம் தொடர்பான பல்வகை ஒழுங்கு முறையிலான மனநல சுகாதார குழு அங்கத்தவர்களுக்காக வெளிநாட்டு பயிற்சி வழங்குதல்.
- அனைத்து பாடசாலை பிள்ளைகளுக்கும் இடையே மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கும் இடையே “சுவய” சஞ்சிகையை விநியோகித்தல்.
- தேசிய வளக் குழுக்களின் பங்களிப்புடன் 18 மாவட்ட மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- பல்வகை ஒழுங்கு முறையிலான மனநல சுகாதார குழுவுக்கு உரிய மனித வள அவிபிருத்தி.
- தேசிய மனநல சுகாதார மீளாய்வுகளை நடத்தியமை.
- அறிக்கையிடப்பட்ட தற்கொலைகள் தொடர்பாக ஊடக வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்.
- போதைப் பொருள் பாவனை தொடர்பான தேசிய வளக் குழுவை பயிற்றுவித்தல் - வெளிநாடு
- தெமட்டபிடிய மற்றும் தியத்தலாவ தள மருத்துவமனைகளில் மனநல சுகாதார பிரிவுகளை மேம்படுத்துதல். முல்லைத்தீவு மற்றும் கேகாலை மாவட்டங்களின் பொது மருத்துவமனைகளின் மனநல சுகாதார சிகிச்சை பிரிவு (acute psychiatry unit) நிருமாணிப்பு, நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனையின் ஆண் மனநல சுகாதார களம் ஒன்றை தாபித்தல்.
- ஆனமடுவ பிரதேச மருத்துவமனையில் மனநல சுகாதார புனரமைப்புப் பிரிவு ஒன்றை நிருமாணித்தல்.
- 2018 உலக மனநல சுகாதார தினத்தைக் கொண்டாடியமை.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| ஆகக் குறைந்தது சமூக ஒத்துழைப்பு ஒன்றாவது செயற்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | 25 | DNA | DNA | 11 |
| வதிவிட மனநல சுகாதார சிகிச்சை சேவைகளை பேணுகின்ற மாவட்டங்களின் எண்ணிக்கை | 25 | 21 | 21 | 24 |
| இடைநடு சுகாதார சேவைப் பிரிவுகளை பேணுகின்ற மாவட்டங்களின் எண்ணிக்கை | 25 | - | 15 | 16 |
| மதுசாரம் பாவிப்பவர்களை புனர்வாழ்வளிக்கும் பிரிவுகள் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை | 25 | 07 | 07 | 08 |
| தற்கொலை செய்து கொள்ளும் விகிதம் (100,000 பேருக்கு) | - | 14.3 | 15.2 | - |
| மக்கள் எண்ணிக்கையில் வயது 18 க்கும் மேற்பட்டவர்களில் மதுசாரம் பாவிப்பவர்களின் எண்ணிக்கை | - | 36% ஆண்களுக் கிடையே | - | - |

### 3.3.3 நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் :

எச்சரிக்கைமிகு பிரதேசங்களின் மதிப்பீட்டின் பிரகாரம் CKD/CKDU நோயாளர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 60,000 நோயாளர்கள் காணப்படுவதுடன் அவர்களில் அனேகமானோர் வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். இதற்கு மேலதிகமாக அம்பாறை, திருகோணமலை, பதுளை, மொணறாகல, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, குருநாகல், வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். CKD/CKDU நோய் சம்பந்தமாக 2008 ஆம் ஆண்டு ஆட்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இந் நாட்டின் CKD/CKDU நோயாளர்களின் எண்ணிக்கை 27,530 ஆகும். இந்தப் பெறுமானம் சுகாதார அமைச்சினால் இந்த ஆண்டு கணிப்பீட்டின் போது பெறப்பட்ட எண்ணிக்கையாகும். CKD/CKDU நோய் காரணமாக அரச மருத்துவமனைகளில் சுமார் 2000 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.. எச்சரிக்கைமிகு பிரதேசங்களில் 20 வயதுக்கும் மேற்பட்டவர்களை பரிசோதனைக்கு உட்படுத்துதல், நோயாளர்களுக்கான மருத்துவ சேவைகளை மேம்படுத்துதல், நோயினால் பீடிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் பயிற்றப்பட்ட மருத்துவர் குழுக்களை அதிகரித்தல் CKD/CKDU நோயாளர்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வாழ்க்கை நடைமுறைகளை அபிவிருத்தி செய்வதற்காக பொதுமக்களை

விழிப்பூட்டல். நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்காக உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- CKD/CKDU நோயை அடையாளம் காண்பதற்காக 2018 ஆம் ஆண்டு எச்சரிக்கைமிகு பிரதேசங்களில் அண்ணளவாக சுமார் 204,539 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

- நாள்பட்ட சிறுநீரக நோயைத் தடுத்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகளாவன CKD/CKDU எச்சரிக்கைமிகு பிரதேசங்களில் CKD கிளினிக் நிலையங்களை நிருமாணித்தல். பிரதேச மருத்துவமனைகள் மற்றும் தள மருத்துவமனைகளுக்காக 13 கிளினிக் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- எச்சரிக்கைமிகு பிரதேசங்களில் 15 கசிவு வடித்தல் பிரிவுகளை நிருமாணித்தல், இதில் 10 பிரிவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போதனா மருத்துவமனைகளிலும், பதுளை, திருகோணமலை, மற்றும் ஹம்பாந்தோட்டை மருத்துவமனைகளிலும் சிறுநீரகங்களைப் பொருத்துவதற்கான வசதிகளுடன் 5 சிறுநீரகப் பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன. 04 பிரிவுகளின் நிருமாணிப்புப் பணிகளை உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல்,தேசிய மருத்துவமனை, கண்டி போதனா மருத்துவமனை, அனுராதபுரம் போதனா மருத்துவமனை மற்றும் பேராதெனிய போதனா மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் உடல் உறுப்புகளைப் பொருத்துதல் மற்றும் கசிவு வடிதல் சேவைகளைப் பலப்படுத்தல்.

- கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் பொருத்தும் பிரிவொன்றைத் தாபித்தல் CKD/CKDU மேலே காட்டப்படுள்ளன எச்சரிக்கை மிகு பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளுகின்ற சில நடவடிக்கைகளாகும்.

### 3.4 **தாய்சேய் நல சேவைகள்**

குடும்ப சுகாதார பணியகம் (FHB) இலங்கையில் இனப்பெருக்கம், தாய்மையடைதல், புதிதாக பிறந்த குழந்தை, இளமைப்பருவம் மற்றும் இளைஞர் குழுக்களின் (EMNCAYH) சுகாதார சேவைகளை திட்டமிடல், செயற்படுத்தல். கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்கு பொறுப்பாகவுள்ளது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- சிறுபராய நோய் முகாமைத்துவம் தொடர்பான தேசிய வழிகாட்டல்களை இற்றைவரைப்படுத்தல்.

- HDU பிரிவுக்கான 30 கட்டில்கள் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.. (மீ. 5.7) கிடைத்த பொருட்கள் - Infusion pumps 30 (2,107,826) மற்றும் sryinge pumps 30 (மீ. 1.9), adult sucker 30 (மீ. 4.47), hand held Doppler 50 (மீ. 1.5), CTG இயந்திரங்கள் 6 (மீ. 3.7), spot lamps 50 (மீ.4.5), multipara monitor 20 க்கான விலை மனு கோரப்பட்டுள்ளது. (மீ.4.5)

- CHD அச்சிடப்பட்டுக் கொண்டிருப்பதுடன் கையிருப்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. CF பலகை மீண்டும் அச்சிடல் மற்றும் குழுக்கள் பற்றிய ஆலோசனைப் புத்தகம் ஒன்று அச்சிடல்.

- இளைஞர்களுக்கு இடையே உளவியல் சமூக ரீதியான நல்லொழுக்கத்தை ஊக்கப்படுத்துவதை பயிற்றுவிப்பவர்களைப் பயிற்றுவித்தல் (TOT) நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- மூன்று மாவட்டங்களின் பாடசாலை சிற்றூண்டிச்சாலைகளில் சுத்தமான உணவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியம் தொடர்பிலான முன்னோடி பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- AYFHS பற்றிய தேசிய மீளாய்வு
- இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாக சுகாதார ஊழியர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்காக பயிற்றுவிப்பவர்களைப் பயிற்றுவித்தல் (TOT) நிகழ்ச்சித் திட்டங்கள் மருத்துவமனைகளை அடிப்படையாகக் கொண்டு 08 மாவட்டங்களில் 06 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- ஆற்றல் விருத்தி : பிரசவப் பிரிவின் பணியாட் தொகுதிக்காக EMOC பயிற்சியளித்தல், அத்தியாவசிய புதிய பிறந்த குழந்தை பராமரிப்பு (Essential Newborn Care) சேவை தொடர்பான பயிற்சி, புதிய குழந்தையின் உயர்வாழ்வாதார உதவி (Neonatal Advanced Life Support), தாய்ப்பால் கொடுத்தல் தொடர்பான அறிவுறுத்தல்,நோய்வாய்ப்பட்ட புதிதாக பிறந்த குழந்தைக்காக வசதிகளை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பை வழங்குதல், குடும்பக் கட்டுப்பாடு, குழந்தைகள் மற்றும் பிள்ளைகளுக்கான உணவு வழங்கல் சிறுபராய அபிவிருத்தி மற்றும் விசேட தேவைப்பாடுகள், SMI, வாழ்க்கைத் தேர்ச்சி, மனநல ஆரோக்கியம், புதிய இளம் சுகாதார, பால்சமத்துவ மற்றும் பெண்களின் ஆரோக்கியம் பற்றிய ஆராய்ச்சி, வெளிக்கள பணியாட்தொகுதிக்கான பயிற்சியளிப்பதற்கான தொடர்பாடல்.
- 28 மாவட்டங்களில் தாய்சேய் செயற்பாடுகள் தொடர்பான MCH மீளாய்வு, MOMCH கருத்தரங்கு 02, RSPHNO கருத்தரங்கு 01, SSO செயலமர்வு 01, தேசிய போசாக்கு மீளாய்வு 01, e-HMIS அபிவிருத்திக் கூட்டம் 01, 23 மாவட்டங்களில் செயலமர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 25 மாவட்டங்களில் தாய் மரண விகித மீளாய்வு 81 மருத்துவமனைகளின் வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட பிறப்புக் குறைபாட்டுக் கண்காணிப்பு (Birth Defect Surveillance) நடைமுறைப்படுத்தல்.
- குடும்ப சுகாதார பணியகத்தின் (FHB) பணியாட்தொகுதிக்காக அனர்த்தத்துக்கு முன்னரான ஆயத்தம் பற்றிய பயிற்சி செயலமர்வொன்று நடத்தியமை.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | மதிப்பீடு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| தாய் மரண விகிதம் (பிறப்பு 100,000 க்கு) | | 33.8 | 39 | |
| சிசு மரண விகிதம் (பிறப்பு 1000 க்கு) | | 8.2 | 8.7 | |
| பதிவு செய்யப்பட்டுள்ள பிரசவத்துக்குப் பின்னரான பிரசவத்துக்கான நுழைவு விகிதம் | | 92.8 | 80.8 | |
| புதிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை பயன்படுத்திய விகிதம் | | 57.6 | 57.9 | |
| உள்ளடக்கப்பட்டுள்ள பெண்கள் கிளினிக் | | 52.8 | 53.3 | |

### 3.5 வாய்ச் சுகாதார சேவைகள்

பல் சிகிச்சை சேவைகள் பணிப்பாளர் பணிமனை சமூக மட்டத்தில் வாய்வழி சுகாதார ஊக்குவிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன என்பதையும் தீவு முழுவதும் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு அவசியமான பற்சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன என்பதையும் தீவு முழுவதும் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு அவசியமான பற்சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. என்பதையும் உறுதி செய்கின்றது. வாய்வழி சுகாதார பராமரிப்பு பாதுகாப்பு தரம் என்பவற்றில் பல் மருத்துவ தொழில் முறையாளர்களின் திறனை கட்டிஎழுப்புதல், தேசிய வாய்வழி சுகாதார கொள்கை ஆவணம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுத்தல். தேசிய வாய்வழி சுகாதார ஆய்வு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுத்தல், நேரொத்த அமைச்சு மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்கான பல் சிகிச்சை மருத்துவ நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்தல் என்பனவும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- கண்காணிப்பு முறைமைக்கான தரவுகளைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பில் பல் மருத்துவர்கள் மற்றும் பிரதேச பல் மருத்துவர்களுக்கு பயிற்சியளித்தல்.
- வாய்வழி சுகாதார பராமரிப்பு சேவைகளின் பண்புகளும் பாதுகாப்பும் தொடர்பாக பல் தொழில்சார்பாளர்களின் ஆற்றலை விருத்தி செய்தல்.
- சுகாதார நிறுவனங்களுக்குத் தேவையான பல் உபகரணங்களை வழங்குதல் மற்றும் CT Cone Beam ஸ்கேன் இயந்திரமொன்றை வழங்குதல்.
- தேசிய போதனா பல் மருத்துவமனை (NDHS) , நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனை, களுத்துறை தேசிய சுகாதார நிறுவனம் (NIHS) மற்றும் தெற்கு கொழும்பு போதனா மருத்துவமனை (CSTH) ஆகிய நிறுவனங்களில் பல் பிரிவு மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.

### 3.6 பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

#### 3.6.1 மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (MRI ) தேசிய அளவிலான மருத்துவ ஆய்வுகூடம் நோய் கண்டறிதல் சேவைகளை வழங்குவதுடன் ஆராய்ச்சி நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. இது பட்டப்பின் படிப்பு மருத்துவ மாணவர்களுக்காக பயிற்சி நிலையமாகும் என்பதுடன் தேசிய மட்டத்திலான நோய் கண்டறிதல் ஆய்வுகூட சேவைகள் வழங்குதல் மற்றும் தடுப்பூசிகளின் பண்புசார் தன்மையை நிருவகிக்கும் நிறுவனம் ஒன்றாகவும் விளங்குகின்றது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- MRI இன் எச்சரிக்கைமிக்க BSL 3 ஆய்வுகூடமொன்றை தாபித்தல்.
- MRI க்காக நன்கொடையின் அடிப்படையில் 10 மாடிக் கட்டடமொன்றை நிருமாணிப்பதற்காக வெளி நாட்டு வளத் திணைக்களத்துடன் கலந்துரையாடல்.
- Electron Microscope மூலம் ஸ்கேன் செய்வதை சிறந்த நிலையில் எடுப்தற்கான உபகரணமொன்று கொள்வனவு செய்தல்.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| ஆண்டொன்றுக்கு மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | - | 55 | 44 | 24 |
| ஆண்டொன்றுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் எண்ணிக்கை | - | 606,220 | 825,973 | 1,280,538 |

## 3.7 போசணை

### 3.7.1 போசணைப் பிரிவு

போசணைப் பிரிவு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்கின்றது.

மாவட்டங்களில் ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிப்பதற்கு மாவட்ட ஊட்டச்சத்து செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டி சுகாதார போசணை சுதேச வைத்திய அமைச்சின் போசணை வரவு செலவு திட்டத்தை நிர்வகித்தல், போசணைக்காக தலையிடுவதற்காக சுகாதார அமைச்சின் உரிய ஏனைய நிறுவனங்களைஒருங்கிணைத்தல், பல துறை போசணை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் கூட்டுப் பங்கான்மையை வழங்குதல் தேசிய போஷாக்கு தகவல் மற்றும் கண்காணிப்பு முறையினை நடைமுறைப்படுத்துதல் திரிபோஷா நிகழ்ச்சி திட்டத்தின் உபகரணங்களை ஸ்திரப்படுத்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துதல்

### ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:

- 2018 ஆம் ஆண்டு மாவட்ட போசாக்கு செயற்பாட்டுத் திட்டம் (DNAP) இன் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் போசாக்கு சம்பந்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- 22 மாவட்டங்களின் 24 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள சிறுபராய அபிவிருத்து நிகழ்ச்சித் திட்டத்தின் போசாக்கு அம்சங்கள் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமை.
- மாவட்ட போசாக்கு கண்காணிப்பு முறைமை தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 நிகழ்சிகள் நடாத்தியமை.
- கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையில் தேசிய போசாக்கு மாதத்தின் கீழ் 2018.06.04 ஆந் திகதி பூர்வாங்க விழாவொன்று நடாத்தியமை.
- உலக உணவு நிகழ்ச்சித் திட்ட களஞ்சிய முகாமைத்துவம் (WEP Warehouse Management) தொடர்பில் தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமை.
- இளைஞர் போசாக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தியமை மற்றும் போசாக்கு தொழிற்பாட்டுக் குழுக் கூட்டம் நடாத்தியமை.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| DNAP ஒதுக்கீட்டுத் தொகையை பயன்படுத்திய விகிதம் = DNAP மொத்தச் செலவு * 100 / DNAP க்காக மாவட்டத்துக்கு விடுவிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு | 100% | 75% | 80% | 85% |
| முன் பள்ளி போசாக்கு நிகழ்ச்சித் திட்டம் = நடத்தப்பட்ட முன் பள்ளி போசாக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை / திட்டமிடப்பட்ட முன் பள்ளி ஊக்குவிப்பு TOT நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 100% | 90% | 90% | 98% |

| | | | | |
|---|---|---|---|---|
| திரிபோச களஞ்சியப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்ட விகிதம்=<br><br>பூர்த்தி செய்யப்பட்ட புதிய திரிபோச களஞ்சிய வசதிகளின் அளவு * 100<br>―――――――――<br>கோரிக்கை விடுக்கப்பட்ட புதிய திரிபோச களஞ்சிய வசதிகளின் அளவு | | 65% | 80% | 82% |
| இளைஞர் சமூகசாலைகளின் ஊடாக இளைஞர் திரிபோச ஊக்குவிப்பு =<br><br>நடத்தப்பட்ட இளைஞர் போசாக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை<br>----------------------------------------------------<br>திட்டமிடப்பட்ட இளைஞர் போசாக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | | | | 60% |

### 3.8 **அனர்த்தத்துக்கு முன் ஆயத்தம் மற்றும் பதில் சேவைகள்** :

அனர்த்த தயார் நிலை மற்றும் பதில் சேவைப் பிரிவு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாகவுள்ளது. பாதுகாப்பான வைத்தியசாலைகளின் முன் முயற்சிகளால் சுகாதார வசதிகளின் கட்டமைப்பு சார்ந்த கட்டமைப்பு சாராத மற்றும் செயற்பாட்டு வடிவிலான திறனை மேம்படுத்தல், சுகாதார துறை அனர்த்த முகாமைக்கான தரப்பினரின் ஒருங்கிணைப்பினை மேம்படுத்தல் சுகாதர துறை அனர்த்த முகாமையின் பொருட்டு தகவல் வழங்கும் உதவியை மேம்படுத்தல் அறிவு முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றை மேம்படுத்தல் சுகாதார துறை அனர்த்த முகாமை சார்பாக சமூக பங்கேற்பை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரத் துறை அனர்த்த முகாமை பெறுபேறுகளின் அடிப்படையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டினை ஒருங்கிணைத்தல்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- மூலோபய திட்டங்கள் தொடர்பான புத்தகம், அனர்த்த உதவி ஊழியர்களுக்கான கையேடு (ஆங்கில மொழியில்) மற்றும் 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை அச்சிடல்.
- முல்லேரியா தேசிய மனநல சுகாதார நிறுவனத்துக்காக மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் முறைமையொன்றைக் கொள்வனவு செய்தல், தேசிய சுகாதார நிறுவனத்துக்காக தீயணைப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் மீள நிரப்புதல், தெற்கு கொழும்பு போதனா மருத்துவமனைக்காக மெனிகின் (mannequin) பெற்றுக் கொள்ளல், பதுளை மாகாண பொது மருத்துவமனையின் முன் ஆயத்தமாக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், தேசிய தொற்றா நோய் தொடர்பான நிறுவனத்துக்காக உபகரணங்கள் மற்றும் இணையத்தள முறைமையைப் பெற்றுக் கொள்ளல், கேகாலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் (RDHS) அவசர தொழிற்பாட்டு நிலையத்துக்கான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- தேசிய மருத்துவமனை மற்றும் மேலும் 13 மருத்துவமனைகளில் 13 தாதி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி நடாத்தியமை.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 25 | 28 மருத்துவமனை களில் 22 நிகழ்ச்சித் திட்டங்கள். | 21 மருத்துவமனைகள் | NHSL மற்றும் மேலும் 13 மருத்துவமனைகளில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தியமை மற்றும் 2017 மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக தாதி உத்தியோகத்தர்களுக்கு மீள விளக்கமளிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 10 | 9 | 13 | 13 |
| அனர்த்த த்துக்கு முன்னரான ஆயத்த நிலை மற்றும் சேவை வழங்கல் தொடர்பான நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | | பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களத்தின் 30 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியொன்று வழங்கப்பட்டது | சிலாபம் மாவட்ட பொது மருத்துவமனையில் 06பயிற்சி நிகழ்ச்சிகள் | ஏற்புடையதில்லை |
| உபகரணங்களைக் கொள்வனவு செய்தல். | 05 மருத்துவமனைகளுக்காக | 04 மருத்துவமனைகள் சுகாதார அமைச்சின் அனர்த்தத்துக்கு முன்னரான ஆயத்தம் மற்றும் பதில் சேவைகளுக்காக Mannequins கொள்வனவு செய்தல். | 04 மருத்துவமனைகள் .கேகாலை பிரிவில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 02 | 06 மருத்துவமனைகள் |
| வெளியீடுகளை அச்சிடல். | மூன்று வகையான சிறிய புத்தகங்கள் ( 500 பிரதிகள் விகிதம்) | 03 புத்தகங்கள் (500 பிரதிகள் விகிதம்) | 03 புத்தகங்கள் (500 பிரதிகள் விகிதம்) | 03 புத்தகங்கள் (500 பிரதிகள் விகிதம்) |

3.9 **சுற்றாடல் மற்றும் தொழில் சார் சுகாதாரம்** :

இந்தப் பணிப்பாளர் பிரிவு வைத்தியசாலை கழிவு அகற்றல் மற்றும் சுத்திகரிப்பு, தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு உள்ளடங்கலாக அனைத்து சுற்றுச் சூழல் சுகாதர நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப ரீதியாக பொறுப்பாகவுள்ளது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- தொழில்சார் சுகாதாரத்தின் பாதுகாப்பு தொடர்பில் சுகாதார பணியாட் தொகுதியின் ஆற்றலை விருத்தி செய்தல்.
- தொழில்சார் சுகாதாரம் தொடர்பில் வருடாந்த மாவட்ட மீளாய்வுகளை நடத்துதல்.
- பொதுச் சுகாதார பணியாட் தொகுதிக்காக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (N 95 முகமூடி) கொள்வனவு செய்தல்.
- தொழில்சார் மற்றும் சுற்றாடல் சுகாதாரம் தொடர்பான பதாதைகளை அச்சிடல்.
- தொழில்சார் மற்றும் சுற்றாடல் சுகாதாரம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை அச்சிடல்
- சாக்கடை மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல். இரண்டு மருத்துவமனைகளினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் (Scheduled Waste License) மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உணவுகளை பரிசோதனை செய்தல் மாதிரிப் பரிசோதனை மற்றும் 10845 சுகாதாரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- அயடின் உப்பு உற்பத்தி செய்கின்ற 26 கைத்தொழிற்சாலைகள் மற்றும் 42 போத்தல் அல்லது பொதியிட்ட குடிநீர் உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
- உணவுப் பொருட்கள் கண்காணிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- உணவு ஆய்வுகூடங்களைப் பலப்படுத்தல்.
- FCAU பணியாட் தொகுதி, மாகாண/ மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் மற்றும் SPHID க்கான ஆற்றல் விருத்தி
- Codex கூட்டங்கள், இலத்திரனியல் வேலைக் குழுக்களுக்காக கலந்து கொள்ளல் மற்றும் தொடரறா (online) கருத்துத் தெரிவிக்கும் முறைமை.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| வருடாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்ட விகிதம் | 100% (n=27) | 7.5% (n=2) | 14.8% (n=5) | 92.6% (n=25) |
| சுகாதார தொழில்சார்பாளர்களுக்காக நடத்தப்பட்ட தொழில்சார் சுகாதார பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | ஆண்டொன்றுக்கு 10 - 12 | 100% (n=10) | 100% (n=10) | 100% (n=12) |
| உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்கு விதியை வர்த்தமானியில் அறிவித்தல் | ஆண்டொன்றுக்கு 3 - 5 | 01 | 01 | இல்லை |
| பெற்றுக் கொண்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர எண்ணிக்கை (நேரொத்த அமைச்சின் மருத்துவமனைகள்) | திரட்டிய | DNA | 13 | 18 |

### 3.10 சுகாதார ஊக்குவிப்பு

சுகாதார கல்விப் பணியகம் 2018 ஆம் ஆண்டு சுகாதார ஊக்குவிப்பு பணியகமாக (HPB) உயர்த்தப்பட்டது. சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நோக்கில் பொதுச் சுகாதார நிபுணத்துவ மருத்துவர்களின் கண்காணிப்பின் கீழ் தொழில்நுட்ப பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் சுகாதார ஊக்குவிப்பின் (HP) பிரதான அம்சங்கள் மற்றும் சுகாதார அறிவிப்புகள். வாழ்வாதார தேர்ச்சி. ஆலோசனை வழங்குதல். சமூக பயிற்சியின் ஊடாக. மக்களைப் பலப்படுத்தல் போன்றன உள்ளடக்கப்பட்ட இலங்கையின் சுகாதார ஊக்குவிப்பு ஆரம்பம் தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான நிலைமையை உருவாக்குதல், விசேட சுகாதார தினங்களைக் கொண்டாடுவதற்கும் மற்றும் விசேட சந்தர்ப்பங்கள், சுகாதார தொடர்புகள் தேவைப்படுகின்ற அனர்த்த நேரங்களில் அல்லது நோய் பரவும் சந்தர்ப்பங்களில் (ஊடக கலந்துரையாடல்கள்) பொதுச் பிரச்சினைகள், வாய்வழி சுகாதாரப் பிரச்சினைகளுக்காக " சுவசெரிய" என்னும் திட்டம் 24 மணித்தியால சேவையின் ஊடாக துரிதமாக தேவையான சேவைகளை வழங்குதல். சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் தொழில்நுட்ப பிரிவுகளின் பொறுப்பானது பிரதான பிரிவாக அடையாளம் காணப்பட்ட துறைகளில் சுகாதார மற்றும் சுகாதாரம் சாராத பணியாட் தொகுதிக்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், கல்விப் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடல், வாய்வழி சுகாதார பிரச்சனைகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் , வழிகாட்டல்கள், வீடியோ நிகழ்ச்சிகள், சுகாதார ஊக்குவிப்பு மற்றும் சுகாதாரக் கல்வி செயற்பாடுகள், தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மீளாய்வுகள் மற்றும் வெளிக்கள நிறுவன கண்காணிப்புகள் மேற்கொள்ளல்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- தாய்ப்பாலின் பெறுமதி, இன்புலுவன்சா, அனர்த்தத்தின் போது சுகாதாரத்தைப் பேணல், உணவுப் பாதுகாப்பு வாரத்துக்காக உணவு பழுதடைவதைக் கட்டுப்படுத்துவது மற்றும் விழிப்புணர்வுக் கிளினிக்குகள் சம்பந்தமான கல்வி வெளியீடுகளை அச்சிடல்.

- தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி பெறும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான தொடர்பாடல் பற்றிய ஆற்றல் விருத்தி, தாதி உத்தியோகத்தர்களின் ஆலோசனைத் தேர்ச்சி பற்றிய ஆற்றல் விருத்தி, பிரதேச பல் மருத்துவர்களுக்கான முதியோர்களின் வாய்ச் சுகாதாரம் தொடர்பான ஆற்றல் விருத்தி, ஆரம்ப சுகாதார சேவை பணியாட் தொகுதிக்கான இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாடல் தேர்ச்சிக்கான ஆற்றல் விருத்தி, மருத்துவனைகளின் நடுத்தர

முகாமையாளர்களுக்கான மருத்துவமனைகளின் சுகாதார ஊக்குவிப்பு தொடர்பான மாவட்ட மட்டத்திலான ஆலோசனைகள் மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்களுக்கான சுகாதார ஊக்குவிப்பு/ தொடர்பாடல்களைப் பலப்படுத்துதல் தொடர்பான பயிற்சி வழங்குபவர்களைப் பயிற்றுவித்தல். (TOT), அதிபர்கள் மற்றும் சுகாதாரவியல் ஆசிரியர்களுக்கான பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு தொடர்பான நடுத்தர மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

- உரிய சுகாதார உத்தியோகத்தர்களுக்காக எச்சரிக்கை தொடர்பாடல் பற்றிய செயலமர்வு மற்றும் கொழும்பு மாவட்ட கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான முதலுதவி மற்றும் வாய்வழித் தாக்கத்தை தடுப்பது பற்றிய செயலமர்வு நடத்தப்பட்டன.

பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை

### 3.11. **இளைஞர் முதியோர் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான சேவைகள்** :

இளைஞர் முதியோர் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான ஆரம்ப. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் தொடர்பான பொறுப்பு வாய்ந்த தேசிய மட்டத்தில் செயற்படும் நிறுவனம் அமைச்சின் இளைஞர் முதியோர் மற்றும் ஊனமுற்றோர்களுக்கான பிரிவாகும். மேலும் முதியோரின் உடல், உள சமூக நலன்களை மேம்படுத்தல், எதிர்காலத்தில் ஆரோக்கியமான மிகச் சிறந்த ஆக்கத்திறன் வாய்ந்த சமூகங்களை உருவாக்குதல், ஊனமுற்ற மக்களின் வாழ்வாதாரத்தின் பண்புசார் தன்மையை மேம்படுத்தல், ஊனமுற்றவர்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தல் மற்றும் அறிவை மேம்படுத்தல், இளைஞர் சமூகத்தின் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ளல் மற்றும் அவர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு அவர்களின் எண்ணக்கரு மற்றும் வாழ்வாதார ஆற்றலை மேம்படுத்துதல் இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாராத இளைஞர் மற்றும் ஊனமுற்றோர்களுக்கு சேவைகளை வழங்குபவர்களுக்கான ஆற்றல் விருத்தி.
- தாதி உத்தியோகத்தர்களுக்கான மாவட்ட மட்ட முதியோர் மற்றும் ஊனமுற்றோர் சேவை தொடர்பான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்
- நிறுவன மட்டத்திலான சுகாதார சேவைகள் வழங்குநர்களுக்கான முதியோர் மற்றும் ஊனமுற்றோர் சேவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்
- முதியோர் மற்றும் ஊனமுற்றோர் சேவை தொடர்பான கல்வி சார்ந்த பொருட்களை (materials) உருவாக்குவதற்காக விசேட நிபுணர்களுடனான கலந்துரயாடல் கூட்டங்கள் நடத்தியமை.
- இலங்கைக்கு முன்னுரிமை ஒத்துழைப்பு உற்பத்திகளை வகுப்பதற்கான ஆலோசனைக் கூட்டங்களை நடத்துதல்.
- வீடுகளில் உள்ள முதியோர் மற்றும் கவனிப்பாளர்களுக்கான போசாக்கு வழிகாட்டல்களை வகுத்தல். மற்றும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தியமை போன்றவைகள் இந்த ஆண்டில் பெற்ற வெற்றிகளாகும்.

### பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| சுட்டிகள் | இலக்கு | 2018 |
|---|---|---|
| • முதியோர் மற்றும் ஊனமுற்றோர் சேவைகள் தொடர்பாக ஒரு வருட காலமாக நடத்தப்பட்ட ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | 08 |
| • பயிற்சியளிக்கப்பட்டோர் எண்ணிக்கை | | 206 |

3.12 **தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல்**.:
தனியார் சுகாதார துறை அபிவிருத்தி பணிப்பாளர் பிரிவு மற்றும் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையுடன் (PHSRC) இணைந்து தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல், தனியார் மருத்துவ நிறுவனங்கள் சட்டத் திருத்தங்கள் மற்றும் உரிய நடைமுறைகளை ஒருங்கிணைத்தல், பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக அங்கீகாரம் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சு மற்றும் தனியார் சுகாதார துறைக்குமிடையில் தொடர்புகளைப் பேணுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது., இலங்கையில் தற்பொழுது சுமார் 5120 கட்டில்களைக் கொண்ட 200 மருத்துவமனைகள் உள்ளன

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- தனியார் மருத்துவ நிறுவனங்களின் அனுமதிப்பத்திர பதிவுகள் மற்றும் புதுப்பித்தலை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.
- தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- தனியார் மருத்துவ நிறுவனங்களை பரிசோதித்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்
- தேவையான சந்தர்ப்பங்களில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஏனைய பிரிவுகள் இலங்கை மருத்துவப் பேரவை, சுகாதார பிரிவின் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புப் பணிகள்.
- தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான முறையான தகவல் முறைமையொன்றைத் தாபித்தல்.
- புதிய தனியார் மருத்துவமனைகளை நிறுவுவதற்காக சமர்ப்பிக்கின்ற கருத்திட்ட அறிக்கைகளை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் ஆரம்ப கட்ட அங்கீகாரத்தை வழங்குதல்.
- தனியார் மருத்துவமனைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல்.
- நிபுணத்துவ மருத்துவர்களை தற்காலிகமாக பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல்.
- நோய் தடுப்புச் சேவைகளைப் பேணுவதற்காக தேசிய வழிகாட்டல் மற்றும் தரத்துக்கு ஏற்ப தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஊடாக பண்புசார் சேவைகள் வழங்குவதை மேம்படுத்துதல்.
- தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் காலத்துக்கு ஏற்றவாறு விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்வுகளை காண்பதன் மூலம் குறித்த செயற்பாட்டின் வேலைத் திட்டத்தை மேம்படுத்துதல்.
- மனித வளங்கள், தொற்றும் மற்றும் தொற்றா நோய் தொடர்பான தரவுகள் உள்ளடக்கிய முறையான தகவல் முறைமையொன்றை தனியார் மருத்துவ நிலையங்களில் தாபித்தல் மற்றும் பேணுதல்.
- தனியார் சுகாதாரப் பிரிவு அபிவிருத்திப் பிரிவு (PHSD), தனியார் சுகாதார சேவை ஒழுங்குறுத்தும் ஆணைக்குழு (PHSRC), நைட்டா (NAITA) மற்றும் APHINH ஆகிய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன், தனியார் மருத்துவமனைகள்/ மருத்துவ நிலையங்களில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பிரிவின் தாதிகளுக்கான அறிவை புதுப்பித்தல்/ குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.

- இலங்கை பல் மருத்துவர்களின் சங்கம் (SLDA) பற் சிகிச்சை நிலையம்/ கிளினிக்குகளில் தற்பொழுது சேவையில் ஈடுபடுகின்ற பற் சிகிச்சை உதவியாளர்களுக்கான அறிவை புதுப்பித்தல்/ குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.

- தனியார் சுகாதார பிரிவின் ஊடாக பல்வேறுபட்ட முறைகள் மற்றும் மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைக்காக மேற்கொள்ளுகின்ற அறவீடுகள் சம்பந்தமாக பொருத்தமான கட்டணங்கள்/ விலைகளை நிருணயித்தல்.

- சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஒத்துழைப்புடன் தனியார் சுகாதாரப் பிரிவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தற்பொழுதுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிலையங்கள் தொடர்பான தரவுக் களஞ்சியமொன்றை உருவாக்குதல்.

- தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்ற அனைத்து டெங்கு நோயாளர்கள் தொடர்பான கணிப்பீடுகளை நடத்துதல்.

- கடந்த 3 ஆண்டுக்குள் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் சகல மனித வள விபரங்கள் தொடர்பான கணிப்பீடுகளை நடத்துதல்.

## 3.13 மேலதிகச் சேவைகள்.

### 3.13.1 ஆய்வுகூட சேவைகள்.

பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் ஒருங்கிணைப்புச் செய்கின்ற ஆய்வுகூட சேவை இந்நாட்டின் சுகாதார சேவைகள் முறைமையில் பிரதான பங்களிப்பைச் செய்கின்றது. அத்தியாவசிய மற்றும் உரிய யாப்புகளை வகுத்தல் மற்றும் செயல்வலுப்படுத்தல், தேசிய மற்றும் சருவதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு ஏற்ப ஆய்வுகூட பராமரிப்புக்கான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ வழிகாட்டல்களை வழங்குவதற்காக இந்த ஆய்வுகூட சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளரின் பொறுப்பில் உள்ளது. அரசாங்கத்தின் நேரொத்த அமைச்சின் மருத்துவமனைகளில் மற்றும் விசேட வேலைத் திட்டங்களில் ஆய்வுகூட சேவைகளைப் பலப்படுத்தல், மற்றும் ஒழுங்குபடுத்தலை விரிவுபடுத்தல் மற்றும் மாகாணங்களிலுள்ள ஆய்வு கூட சேவைகளைப் பலப்படுத்தல், ஆய்வுகூடத்துக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது தேவையான ஒதுக்கீடுகளை வழங்குதல், ஆய்வுகூட உபகரணங்களை முறையாகப் பராமரிப்பதற்காக நிதியுதவி வழங்குதல், நோய் தடுப்புக்குக்கான ஒத்துழைப்பு வழங்குதல், நோய் ஒழிப்பு மற்றும் நோய் கண்டறிதல் சேவைகளை வழங்கி கண்காணித்தல், ஆய்வுகூட சேவைகள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல், ஆய்வுகூட பணியாட் தொகுதிக்கு பயிற்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல், ஒருங்கிணைப்பு, ஆய்வுகூட சேவைகளுக்கு உரிய தரப்பினருடன் தொடர்புகளையும் ஒருங்கிணைப்புகளையும் மேற்கொள்ளல். இப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும்..

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- நேரொத்த அமைச்சின் மருத்துவமனைகளில் histopathology, hematology**,** இரசாயன நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய பிரிவுகளுக்காக ஆய்வுகூட உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 1275 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- போதனா மருத்துவமனை- கண்டி, போதனா மருத்துவமனை- கராப்பிட்டி, போதனா மருத்துவமனை- யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனை-அனுராதபுரம், அபேக்ஷா மருத்துவமனை –மகரகம ஆகிய மருத்துவமனைகளில் வைரஸ் ஆய்வுகூடங்களை நிறுவுதல் .

- வெலிசர தேசிய காச நோய் மருத்துவமனை மற்றும் ஏனைய போதனா மருத்துவமனைகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல்.

- நடமாடும் ஆய்வுகூட சேவைகளின் மூலம் தூர உள்ள கஷ்டப் பிரதேசங்களில் வசிக்கின்ற மக்களுக்குத் தேவையான ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான வசதிகளை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- நாடு பூராவும் இலக்குக் குழுக்களுக்கான முறையான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். 1550 மருத்துவ பணியாட் தொகுதி, சுகாதார நிருவாகிகள் மற்றும் மருத்துவர்கள் அத்துடன் 4565 துணை மருத்துவ பணியாட் தொகுதிக்காக நூற்றுக்கும் (100) மேற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- ஒளிப்பதிவுக் காட்சிகள், அச்சு ஊடகங்கள் ஊடாக நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பாவனை தொடர்பாக மக்களை இலக்கு வைத்து மக்கள் தொடர்பாடல் மற்றும் மக்களுக்கான கல்விசார் ஆவணங்களை விநியோகித்தல்.

- Sentinel sites 25 உடன் தொடர்புபட்டு தரவுகளை சேகரிக்கும் மென்பொருள் தொடர்பான ஆற்றல் விருத்தியுடனான தேசிய நுண்ணுயிர் எதிர்ப்பு கண்காணிப்பு முறைமை (National antimenobial resistance surveillance system) தாபித்தல் மற்றும் மடிக்கணினிகள் வழங்குதல் ஆய்வுகூட பரிசோதனைக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்கள் வழங்குவதை ஒழுங்குபடுத்தல்.

- 2018 மே மாதம் தொடக்கம் இலங்கை நுண்ணுயிர் எதிர்ப்பு கண்காணிப்பு முறைமையின் (GLASS) அங்கத்தவராதல்..

- ப்லெமின் உதவி (Fleming fund) மூலம் AMR கண்காணிப்புக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு கலந்துரையாடலை மேற்கொள்ளல் மற்றும் 2019 ஆம் ஆண்டு உதவிகளை வழங்குவதற்கான இணக்கப்பாட்டு உடன்படிக்கைகளைத் தயாரித்தல்.

- இலங்கைக்கான விரிவான தேசிய உயிரியல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் பாதுகாப்புக் கட்டமைப்பு மற்றும் யாப்புகளை வகுப்பது தொடர்பான ஐந்து வருட செயற்பாட்டுத் திட்டமொன்றை வகுத்தல்.

- கொழும்பு, கண்டி, கராப்பிட்டி, அனுராதபுரம் மற்றும் அம்பாறை போன்ற இடங்களில் ஆய்வுகூட பிரிவில் சேவையாற்றுகின்ற குழுக்களுக்காக உயிரியல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பான தேசிய மட்டத்திலான விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தியமை.

- உரிய தொழில்சார் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆரம்ப சுகாதார சேவைகளைப் பலப்படுத்தும் கருத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கான வழிகாட்டல்ளை வகுத்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| ஆய்வுகூட உபகரணங்களுக்காக மூலதன ஒதுக்கீட்டு விகிதம் | பௌதீக முன்னேற்றம் 100% | 100% | 100% | 100% |
| | பௌதீக முன்னேற்றம் 100% | 56.6% | 63.22% | 64.16% |
| தாபிக்கப்பட்ட பிரதேச வைரஸ் தொடர்பான ஆய்வுகூடங்களின் | கண்டி, கராப்பிட்டி, யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய போதனா மருத்துவமனைகள் மகரகம அபேக்ஷா மருத்துவமனையில் | - | கண்டி மருத்துவமனையில் தாபிக்கப்பட்ட | கராப்பிட்டி மற்றும் அனுராதபுரம் மருத்துவமனையில் தாபிக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | வைரஸ் தொடர்பான ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டன. | | து | |
| | | | | |
| மொத்த இடங்களின் எண்ணிக்கை | வழங்கிய நடமாடும் ஆய்வுகூட எண்ணிக்கை | 111 | 155 | 135 |
| மேற்கொள்ளப்பட்ட மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை | | 120 | 47,773 | 35,565 |
| நுண்ணுயிர் எதிர்ப்பு தொடர்பான பயிற்சியளிக்கப்பட்டோர் எண்ணிக்கை | நாடு பூராவும் பல்வேறுபட்டவர்களை இலக்கு வைத்து AMR தொடர்பான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் தொடரை நடைமுறைப்படுத்தல். | 86 பேரை பயிற்சியளிப்பவர்களாகப் பயிற்றுவித்தல். | 123 பேரை பயிற்சியளிப்பவர்களாகப் பயிற்றுவித்தல் | பல்வேறு குழுக்களைக் கொண்ட 6965 பேருக்கு பயிற்சியளித்தல். |
| AMR தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவதற்காகத் தேவையான கருவிகளை உருவாக்குதல். | நாடு பூராவும் பல்வேறுபட்டவர்களை இலக்கு வைத்து AMR தொடர்பான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் தொடரை நடைமுறைப்படுத்தல் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | மக்களை விழிப்பூட்டுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒளிப்பதிவுகள் மேற்கொள்ளல். |
| AMR கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்காக செயற்பட்ட இடங்களின் எண்ணிக்கை | AMR தொடர்பான தேசிய கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை தாபித்தல். | ஏற்புடையதல்ல | கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்காக புரோட்டோகோல் ஒன்றைத் தயாரித்தல். | தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பொருள்கோடல் செய்தல். |
| 2017-2018 அறிக்கைக்கு உலகலாவிய AMR கண்காணிப்புக்காக இலங்கையின் தரவுகளை வழங்குதல் | GLASS அங்கத்துவத்தைப் பெறல் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | இலங்கை GLASS அங்கத்தவர் |
| உயிரியல் பேணல் - உயிரியல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளின் எண்ணிக்கை | தேசிய மட்டத்திலான விரிவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயிற்சியளிப்பவர்களுக்கு பயிற்சியளித்தல். | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | 525 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது |

### 3.13.2 தேசிய இரத்த மாற்றுச் சேவைகள்

நாடு பூராவும் இரத்த மாற்றுச் சேவைகளை வழங்குவது தொடர்பான பொறுப்பு இந்தப் பிரிவுக்கே உள்ளது. மக்களுக்கான இரத்ததான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மருத்துவமனை இரத்த வங்கிகளினால் இரத்த சேகரிப்பு, சேகரித்த இரத்தத்தை இரத்தக்கூறுகளாக ஆக்குதல், சேகரித்த இரத்தத்தை மாற்றுவதன் மூலம் கடத்தப்படக்கூடிய நோய்த் தொற்றுக்களுக்கான பரிசோதனை மற்றும் இரத்தத்தை வகைப்படுத்தல், பொருத்தமான நிலையின் கீழ் இரத்தக் கூறுகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் எடுத்துச் செல்லல் அரச மற்றும் தனியார் துறை மருத்துவமனைகளுக்கு சகல சிகிச்சைகளுக்குமான தேவைப்பாடுகளுக்கு இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகளை வழங்குதல், இரத்த மாற்று மருத்துவ சேவைகள் மற்றும் அது தொடர்பாக நோயாளர்களை முகாமைப்படுத்துவதற்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல், இரத்த மாற்றம் மற்றும் இணைத்தல் சம்பந்தமான சிகிச்சை முறை (உயிரணுக்கட்டுப்பாடு மற்றும் உட்செலுத்துதல், சிகிச்சையளிக்கும் பிளாஸ்மா பரிமாற்றம், தன்னியக்க PRP சிகிச்சைகள் ) HLA Typing හා Gross Matching க்கான ஆய்வுகூட சேவைகள் வழங்குதல் போன்றன தேசிய இரத்த மாற்றுச் சேவைகளின் பிரதான பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- மதவாச்சியில் இரத்த வங்கியொன்றை ஆரம்பித்தல்.
- கொழும்பில் நடைபெற்ற தேசிய நிகழ்வொன்றில் 1500 இரத்த தானம் செய்தவர்கள் மற்றும் நடமாடும் இரத்ததான நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், 14 கொத்தணிகளில் இரத்ததான நிகழ்வுக்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டன.
- இரத்த தானம் செய்தவர்களில் சுமார் 0.5% தொற்றா நோய் (NCDs) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.
- சிவப்பணுக்களை குளிரடையச் செய்தல் மற்றும் கரைந்து போதல் தொடர்பான செயற்பாட்டின் சரியான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல்.
- புதிய பிரிவின் பண்புசார் முகாமைத்துவப் பிரிவொன்றைத் தாபித்தல், இரத்த வங்கிக் குழுவுக்கு (Cord blood bank) உபகரணங்களை வழங்குதல், மாதிரி காப்பக அலகு (Sample archiving unit) மற்றும் HLA ஆய்வுகூட உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தச் செய்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| 24 மணி சேவைகள் வழங்குகின்ற மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியின் எண்ணிக்கை | அனைத்தும் (105) | 70 | 74 | 77 |
| ஆண்டொன்றுக்கு சேகரிக்கின்ற மொத்த இரத்தத்தின் அளவு | > 400,000 | 414,175 | 423,668 | 417,000 |
| புதிதாக தாபிக்கப்பட்ட இரத்த வங்கியின் எண்ணிக்கை | தேவைப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். | 2 | 2 | 1 |
| சிகிச்சைக் குறிப்புகள் (therapeutic apheresis) சேவை வழங்குகின்ற இரத்த வங்கியின் எண்ணிக்கை | சேவை விரிவாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது | 26 | 29 | 31 |

### 3.13.3 சுகாதார சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பு

தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதனூடாக நிறுவனம் சார்ந்த தர முகாமைத்துவ பிரிவுகளை வலுப்படுத்துதல் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி வழங்குவதனூடாக நிறுவனம் சார்ந்த ஊழியர்களின் ஆற்றல் விருத்தியை மேம்படுத்தல், வழிகாட்டலை ஏற்பாடு செய்தல் மற்றும் தேசிய சிகிச்சை வழிகாட்டலில் திருத்தங்களைச் செய்தல், இலங்கையின் சுகாதார சேவைகளுக்கு சர்வதேச அங்கீகார தர நிலையை (accreditation standards ) ஒழுங்கு செய்தல் போன்றன செயற்படுத்தப்படுகின்றன.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- நேரொத்த அமைச்சினுடைய நிறுவனங்களின் தர முகாமைத்துவ அலகுகளில் காலாண்டு செயலாற்றுகைக் கூட்டங்கள் நடத்தியமை
- மாகாண அமைச்சுக்களுடைய நிறுவனங்களின் தர முகாமைத்துவ அலகுகளில் நடுத்தவணைக்கால மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியமை
- நேரொத்த அமைச்சினுடைய நிறுவனங்களின் நடுத்தர முகாமையாளர்கள் மற்றும் மேம்படுத்தும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல்.
- நோயாளர்களின் பாதுகாப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தியமை

- 5S , CQI மற்றும் TQM தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தியமை
- இலங்கையில் சுகாதார நிறுவனங்களுக்காக சர்வதேச மட்டத்திலான தரத் தேவைப்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| நேரொத்த அமைச்சின் 47 நிறுவனங்கள் தர முகாமைத்துவ அலகுகளின் காலாண்டு செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியமை. | ஆண்டொன்றுக்கு 4 | 4 PRM | 4 PRM | 3 PRM |
| மாகாண அமைச்சுக்களின் நிறுவனங்களின் தர முகாமைத்துவ அலகுகளில் நடுத்தவணை மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல். | ஆண்டொன்றுக்கு 2 | 1 DPRM | 2 DPRM | 2 DPRM |
| 5S , CQI மற்றும் TQM தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல். | ஆண்டொன்றுக்கு 3 | 5 நிகழ்சித் திட்டங்கள் | 3 நிகழ்சித் திட்டங்கள் | 3 நிகழ்சித் திட்டங்கள் |
| நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் | ஆண்டொன்றுக்கு 4 | திட்டமிடப்படவில்லை | 3 நிகழ்சித் திட்டங்கள் | 3 நிகழ்சித் திட்டங்கள் |

### 3.13.4 பொது விலங்கு மருத்துவச் சேவைகள்

இந்நாட்டின் விலங்கு மருத்துவச் சேவைக்காக பொறுப்புக் கூற வேண்டிய அமைச்சின் தேசிய மட்டத்திலான நிறுவனம் பொது விலங்கு மருத்துவச் சேவையாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- விசர்நாய்கடி நோயைத் தடுப்பதற்காக மக்களுக்கு விளக்கமளிக்கும் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியமை.
- PET ஆகு செலவு ஆக்கத்திறன் வாய்ந்த சேவைக்காலப் பயிற்சிகள் மற்றும் மாவட்ட மட்டத்திலான விசர்நாய்கடி நோயை ஒழிப்பதற்காக மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | 4 | 4 | 4 | 1 |
| பயிற்சிகளின் எண்ணிக்கை | - | 67 | 33 | 5 |
| கண்காட்சிசாலைக்கு வருகை தந்த அதிதிகளின் எண்ணிக்கை | - | 4,820 | 7,020 | 7,420 |
| விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களின் எண்ணிக்கை | - | 17,370 | 25,070 | 26,470 |
| விளக்கமளிக்கும் நிகழ்ச்சிகளின் ஊடாக உள்ளடக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | - | 12,550 | 18,050 | 19,050 |

## 3.13.5 மருத்துவ புள்ளிவிபர அலகு

மருத்துவ புள்ளி விபர அலகு அமைச்சின் சுகாதார நிறுவனங்களின் பட்டியலை இற்றைவரைப்படுத்தும் பொறுப்பினை கொண்டுள்ளது. இதற்கமைவாக 2018 ஆம் ஆண்டுக்காக நிறுவனத்தின் பெயர், உள்ள

வசதிகள், உரிமை நிறுவனத் தலைவர் மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள் ஆகியவற்றுடன் நிறுவனத்தின் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வருடாந்த சுகாதார அறிக்கை (Annual Health Bulleting) க்காக தரவுகளைச் சேகரித்தல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுதல் இந்த அலகின் இன்னுமொரு பிரதான பணியாகும். ஏற்கனவே புத்தகத்தின் அத்தியாயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வருடாந்த சுகாதார அறிக்கைக்குத் தேவையான தரவுகள் Indoor Mobility and Mortality Return,வெளி நோயாளர் பிரிவுகளின் தகவல்கள் (OPD return), கிளினிக் தரவுகள் காலாண்டுக்கு ஒரு தடவை பெற்றுக் கொள்ளப்படும். அத்துடன் தாய் மற்றும் வாய்ச் சுகாதார தரவுகள் மாதாந்தம் சேகரிக்கப்படுவதுடன் கட்டில்களின் எண்ணிக்கை, சுகாதார பணியாட் தொகுதி மற்றும் நிபுணத்துவ மருத்துவர்கள் தொடர்பான தரவுகள் அரச துறையின் சகல சுகாதார நிறுவனங்களிலிருந்தும் எல்லா ஆண்டுகளும் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெற்றுக் கொள்ளப்படும். நாடுபூராவும் உள்ள மருத்துவனைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள eIMMR திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (MOH) வலயத்துக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டுக்காக ஆண்டின் நடுப்பகுதியில் குடிசன மதிப்பீடும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள்:**

- 2018 ஆம் ஆண்டுக்காக சுகாதார நிறுவனங்களின் பெயர், வகை, உள்ள வசதிகள், உரிமை, நிறுவனத் தலைவர் தொடர்பு கொள்ளும் விபரங்கள் உள்ளடக்கிய சுகாதார நிறுவனங்களின் பட்டியலொன்று பூர்த்தி செய்யப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டுக்காக வருடாந்த சுகாதார புள்ளிவிபரப் பட்டியல் மற்றும் 2016 வருடாந்த சுகாதார அறிக்கை வெளியிடப்பட்டன. 2017 ஆம் ஆண்டுக்காக சுகாதார அறிக்கையின் அத்தியாயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- eIMMR முறைமையை செயற்படுத்துவதற்கான ஆற்றலை இது உள்ள இலங்கையின் சகல மருத்துவமனைகளிலும் இதனைச் செயற்படுத்துதல்.
- தரவுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக விண்ணப்பிக்கும் சகல நிறுவனங்களுக்கும் உரிய நேரத்தில் தரவுகளை வழங்குதல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| இற்றைவரைப்படுத்தப்பட்ட சுகாதார நிறுவனங்களின் பட்டியல் | முழுமையான பட்டியல் ஒனறை ஒழுங்கு செய்தல் | 2016 ஆம் ஆண்டுக்கான சுகாதார நிறுவனங்களின் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2017 ஆம் ஆண்டுக்கான சுகாதார நிறுவனங்களின் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2018 ஆம் ஆண்டுக்கான சுகாதார நிறுவனங்களின் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| வருடாந்த சுகாதார அறிக்கை | வருடாந்த சுகாதார அறிக்கையை வெளியிடுதல் | 2014 வருடாந்த சுகாதார அறிக்கை வெளியிடப்பட்டது | 2015 வருடாந்த சுகாதார அறிக்கை வெளியிடப்பட்டது | 2016 வருடாந்த சுகாதார அறிக்கை மற்றும் வருடாந்த சுகாதார புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டன. |
| eIMMR முறைமை | இந்த முறைமையை ஆரம்பிப்பதற்கான சாத்தியம் இலங்கையின் அனைத்து மருத்துவமனைகளிலும் இதனை நடைமுறைப்படுத்தல். | புதிதாக 124 மருத்துவனைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. | புதிதாக 65 மருத்துவனைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது | புதிதாக 24 மருத்துவனைகளில் நடைமுறைப்படுத்தப் பட்டது (2018 இறுதியில் நாட்டின் 513 மருத்துவமனைகளில் இந்த முறைமை நடைமுறைக்கு வரும். |
| இலங்கையின் அனைத்து | எல்லா ஆண்டும் | 2016 ஆண்டுக்காக | 2017 ஆண்டுக்காக | 2018 ஆண்டுக்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| MOH வலயங்களிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவு (GN) பட்டியல் மற்றும் வருட மத்தியில் சனத் தொகை மதிப்பீட்டை இற்றைவரைப்படுத்தல். | இலங்கையின் அனைத்து MOH வலயங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு (GN) பட்டியலை இற்றைவரைப்ப டுத்தல் எல்லா ஆண்டும் MOH வருட மத்தியில் சனத் தொகை மதிப்பீட்டை ஒழுங்கு செய்தல் | இலங்கையின் அனைத்து MOH வலயங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு (GN) பட்டியலை இற்றைவரைப்படு த்தல் 2016 ஆண்டுக்காக MOH வலயங்களின் வருட மத்தியிலான சனத் தொகை மதிப்பீட்டை ஒழுங்கு செய்தல் | இலங்கையின் அனைத்து MOH வலயங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு (GN) பட்டியலை இற்றைவரைப்படு த்தல் 2017 ஆண்டுக்காக MOH வலயங்களின் வருட மத்தியிலான சனத் தொகை மதிப்பீட்டை ஒழுங்கு செய்தல் | இலங்கையின் அனைத்து MOH வலயங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு (GN) பட்டியலை இற்றைவரைப்படுத்த ல் 2018 ஆண்டுக்காக MOH வலயங்களின் வருட மத்தியிலான சனத் தொகை மதிப்பீட்டை ஒழுங்கு செய்தல் |

### 3.13.6 தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை

மக்களினால் கொள்வனவு செய்கின்ற சந்தையில் உள்ள மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பண்புசார் தன்மையை தேவையான தரத்துக்கு பேணுதல் இவைகளின் உற்பத்தி, சந்தை மற்றும் விநியோகம் நிலவுகின்ற சட்டரீதியான கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்காக செயற்படுகின்ற நிறுவனம் இந்த தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாகும். புதிய மருந்துகள்/ அழகுசாதனப் பொருட்கள் /மருத்துவ உபகரணங்களைப் பதிவு செய்தல், ஏற்கனவே அங்கீகரித்துள்ள மற்றும் சந்தைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த உற்பத்திகளின் மாற்றங்கள் / மாற்றங்களை அங்கீகரித்தல் மற்றும் நெறிப்படுத்தல், மருந்து உற்பத்தி மற்றும் அழகுசாதனப் பொருட்களுக்கான நல்ல உற்பத்தி முறைகளை (Good Manufacturing Practices) நடைமுறைப்படுத்தல் மற்றும் நெறிப்படுத்தல், இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, விளம்பரத்துக்கான அனுமதிப்பத்தரங்களை வழங்குதல், சந்தையில் உள்ள மருந்துகளை விநியோகிக்கும் போது கண்காணித்தல், தரம் அழகுசாதனப் பொருட்கள்/ மருந்துகள்/ உபகரணங்கள் (CDD) தொடர்பான சந்தைப்படுத்தல் விளம்பரங்களை மீளாய்வு செய்தல் அங்கீகரித்தல், கிளினிக் பரிசோதனையை அங்கீகரித்தல் மற்றும் நெறிப்படுத்தல், ஏற்றுமதி நோக்கத்தைக் கொண்ட மருந்து உற்பத்தி தொடர்பில் WHO படிவத்துக்கு அமைவாக சான்றிதழ்களை விநியோகித்தல், பாதுகாப்பு பற்றி ஆராய்வதற்காக சந்தையில் உள்ள அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திடீர் சுற்றிவலைப்பு நடவடிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகளைச் சமர்ப்பித்தல் இந்த அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல், நல்ல உற்பத்தி முறைகள் சம்பந்தமாக 47 உள்நாட்டுக் கைத்தொழிற்சாலைகள் மற்றும் 7 வெளிநாட்டு கைத்தொழிற்சாலைகளை கண்காணித்தல் மற்றும் 23 WHO சான்றிதழ்களை விநியோகித்தல்.
- 2017.10.10 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அமைவாக அழகுசாதன உற்பத்திக்கான பதிவு மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்,
- மருந்துகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு எதிராக நட்ட நடவடிக்கை எடுத்தல் (உதாரணமாக - Tramadol, Pregablin)

- முறையற்ற விதத்தில் பாவிக்கின்ற மருந்துகளை அடையாளம் காணல் மற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு விசேட அதிரடிப்படை (STF) மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியக உத்தியோகத்தர்களுடன் இணைந்து விளக்கமளிக்கும் நிகழ்ச்சிகளை நடத்தியமை.
- மருந்துகள், விற்பனை உபகரணங்கள் மற்றும் சந்தையில் உள்ள உற்பத்திகளின் தரங்கள் மற்றும் பாதுகாப்பு , விற்பனையின் பின்னரான சந்தைக் கண்காணிப்பு.
- பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி/ செயலமர்வுகள் ஊடாக மனித வள விருத்தி.
- விசேட குழுக்கள் மற்றும் மக்களுக்கு அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை வழங்குதல்.
- மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சந்தையில் உள்ள உற்பத்திகளுக்கு உரிய வழிகாட்டல்கள், சிபாரிசுகள், பணிப்புகளை விடுத்தல், மீளாய்வு மற்றும் இற்றைவரைப்படுத்தல்.

**3.14 மருத்துவ - சட்ட சேவைகள்**

இலங்கையின் பிரதான சட்ட வைத்திய உத்தியோகத்தரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற மருத்துவச் சட்டப் பொறுப்புகளை முகாமைப்படுத்துகின்ற பிரதான நிறுவனம் சட்ட மருத்துவ நிறுவனமாகும். நாடுபூராவும் அமைந்துள்ள பல்வேறு மருத்துவமனைகளில் பெயர் குறிப்பிட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் தடய நிபுணர்களினால் மருத்துவ - சட்ட சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நோயாளர்களின், திடீர் விபத்துக்களுக்கு ஆளாகின்றவர்கள் மற்றும் குற்றவாளிகளின், சடலங்களை வெட்டி பரிசோதனை செய்து மரணத்துக்கான காரணத்தை ஆராய்தல் மற்றும் இது தொடர்பான பிரச்சினைகளுக்காக மருத்துவ - சட்ட பரிசோதனைகளை நடத்துதல், தடயவியல் தரவுகள் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறல், சட்ட திசுக்கள் - நோயியல் ஆய்வக சேவை, நச்சுப் பொருள் பகுப்பாய்வு மற்றும் ஏனைய ஆய்வுகூட சேவைகள், மருத்துவர்களுக்கான பட்டப்பின்படிப்பு பயிற்சி மற்றும் சேவைக்காலப் பயிற்சி, நீதி நிருவாகச் சேவை முறைமையின் ஏனைய தரப்பினருக்கான பயிற்சி மற்றும் மக்களுக்கு ( பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றார்) விளக்கமளிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துதல் தடயவியல் மருத்துவ நிறுவனத்தின் பிரதான பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- histopathology இன் தரம் மற்றும் அளவினை மேம்படுத்தல்.
- தேசிய அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டல் மற்றும் திசு நோயியலில் மானுடவியல் சேவைகள்
- அமைச்சின் இணையத்தளத்தின் கீழ் நிறுவனத்தின் வெப்தளத்தை வெளியிடுதல். (www.ifmt.health.gov.lk)
- அனர்த்த மற்றும் விபத்துகளினால் மரணிப்போரின் சடலங்கள் தொடர்பான மருத்துவச் சட்ட முகாமைத்துவ தரப்படுத்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| பரிசோதனை செய்த நோயாளர்களின் எண்ணிக்கை | | 12,351 | 11,573 | 11,595 |
| சடலங்களை வெட்டி பரிசோதனை செய்த எண்ணிக்கை | | 1,458 | 1,534 | 1,686 |
| பரிசோதனை செய்த பல் நோயாளர்களின் எண்ணிக்கை | | 272 | 239 | 233 |

| | | | | |
|---|---|---|---|---|
| தயாரிக்கப்பட்ட slides எண்ணிக்கை | | 4,711 | 6,120 | 7,442 |
| ஆய்வுகூட பரிசோதனை எண்ணிக்கை | | 1,825 | 1,457 | 1,604 |
| மருத்துவர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | 16 | 10 | 14 |

### 3.15 பாலியல் சார்ந்த நோய் கட்டுப்பாட்டுச் சேவைகள்

பாலியல் சார்ந்த நோய்கள்/ எயிட்ஸ் (STD / AIDS) தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அது சம்பந்தமாக செயற்படுகின்ற பிரதான நிறுவனம் தேசிய STD / AIDS தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் (NSACP) ஆகும். எச்.ஐ.வீ. (HIV) தொற்றுக்கான தேசிய ரீதியாக செயற்படல், ஒருங்கிணைத்தல் மற்றும் பங்களிப்புச் செய்தல் எச்.ஐ.வீ தடுப்புக்காக தலையிடுதல் (intervention) , STI மற்றும் HIV தடுப்புக்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், STI க்கான கிளினிக் சேவைகளை வழங்குதல், HIV நோய் மற்றும் தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் மற்றும் சேவைகளை வழங்குதல். STIL மற்றும் HIV க்கான ஆய்வுகூட சேவைகளை வழங்குதல், STI மற்றும் HIV தடுப்பதற்காக கொண்டம் உறைகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல், STI மற்றும் HIV க்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், தாயிலிருந்து பிள்ளைக்கு HIV பரவுவதை தடுத்தல், சுகாதார மற்றும் சுகாதாரம் சாராத பணியாட் தொகுதிக்கு பயிற்சிகள் மற்றும் ஆற்றல் விருத்தி, HIV மற்றும் STI கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், STI மற்றும் HIV சேவைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், STI மற்றும் HIV தொடர்பான மூலோபாய தகவல்களை பகிர்தல், மாவட்ட மட்டத்திலான வேலைத் திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல், நிருவாகப் பணிகள் மற்றும் விசேட கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல், எச்சரிக்கைமிக்க மக்களுக்கு STD சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான வசதிகளை அதிகரித்தல், உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மேக நோயை (Congenital syphilis) இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளல், பாடசாலைப் பிள்ளைகளுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல் உரிய பிரிவுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் நடத்தை முறைகளை மாற்றும் தொடர்பாடல்களுடன் MARPS க்கான இலக்கு நோக்கியதான தலையீடுகளை மேற்கொள்ளுதல்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- துறையில் உள்ள மற்றும் மருத்துவமனைகளின் சுகாதார சேவைகள் வழங்குநர்களுக்கான EMTCT பயிற்சி
- தேசிய மதிப்பீட்டுக் குழுவின் (National Validation Committee) ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியமை.
- சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தாய் சேய் (MCH) வழிகாட்டல்களை அச்சிடல்.
- EMTCT தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளித்தல் மற்றும் மாவட்ட நடவடிக்கைக் குழுக் கூட்டங்கள் நடத்தியமை.
- தேசிய STD / AIDS தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் (NSACP) மற்றும் குடும்ப சுகாதார பணியகம் (FHB) ஆகிய நிறுவனங்களின் பணியாட் தொகுதிக்காக தரவு முகாமைத்துவம் பற்றிய கூட்டங்கள் நடத்தியமை.
- பாலியல் தொழிலாளர்களுக்கு இடையே HIV தடுப்பு சம்பந்தமாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன பாதுகாப்பான பாலியல் சேர்க்கை மற்றும் HIV பரிசோதனை மேற்கொள்ளுதலை ஊக்கப்படுத்துவதற்கும் நடத்தைகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான தொடர்பாடல் தொடர்பில் இளைஞர் கழகங்களின் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பவராக பயிற்றுவித்தல். மற்றும் பரிசோதனை மேற்கொள்ளுதலை ஊக்கப்படுத்துவதற்கும் நடத்தைகளில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான

தொடர்பாடல் தொடர்பில் இராணுவ சேவையில் உள்ளவர்களுக்கு பயிற்சியளிப்பவர்களுக்கு பயிற்றுவித்தல்.

- சிறுவர் பாதுகாப்புச் சபைக்கான உணர்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள்
- இலங்கை இளைஞர் நிறுவனத்தின் இளைஞர்களின் அறிவு, எண்ணக்கரு மற்றும் பாதுகாப்பான பாலியல் செயற்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- மேல் மாகாணத்தில் போதைப்பொருள் பாவிப்பவர்களுக்கு இடையேயான கெட்ட பெயர் மற்றும் நடத்தைகள் பற்றி மதிப்பீடு செய்தல்.
- HIV பரிசோதனையை ஊக்கப்படுத்துவதற்காக பக்கட் கலண்டர்களை தயாரித்தல் மற்றும் 30000 பக்கட் கலண்டர்களை அச்சிடல்.
- மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் தாதி உத்தியோகத்தர்களுக்காக STD / HIV தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியமை
- NSACP இன் 2017 ஆண்டுக்கான ஆண்டறிக்கையை அச்சிடல்
- இலத்திரனியல் தகவல் முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| 100,000 உயிருடனான பிறப்பிற்கு HIV அறிக்கையிடப்பட்ட MTCT விகிதம் | < 50 | 1 | 0 | 0 |
| HIV தடுக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 11,400 | 2,361 | 7,927 | - |
| மறைந்துள்ள வைரஸ் அளவுடன் PLHIV விகிதம் | 95 | 90 | 93 | 92 |
| ART தொடர்பான PLHIV விகிதம் | > 90 | 90 | 90 | - |
| HIV தடுக்கும் நிகழ்ச்சியில் அடைந்து கொண்ட MSM எண்ணிக்கை | 8,637 | - | 2,561 | - |

### 3.16 மருத்துவ வழங்கற் சேவைகள்

மருந்துகள், சத்திர சிகிச்சைப் பொருட்கள், ஆய்வுகூடப் பொருட்கள், கதிர்வீச்சுப் பொருட்கள், அச்சுப் பொருட்கள் போன்றன விநியோகித்தல் மற்றும் குறித்த பொருட்கள் சுகாதார சேவைகள் நிறுவனங்களுக்கு விநியோகிக்கும் வரைக்கும் களஞ்சியப்படுத்துதல் மருத்துவ வழங்கற் பிரிவின் (MSD) பொறுப்பாகும். எல்லா மாவட்டங்களும் உள்ளடக்கியவாறு 26 பிரதேச களஞ்சியங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் தனியார் பிரிவினருக்கு பெற்றுக் கொள்ள முடியாத அபாயகரமான ஔடதங்கள் மற்றும் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை வழங்குவதும் இந்த (MSD) பிரிவின் பொறுப்பாகும். நடுத்தர மட்டத்தில், துணை மட்டத்தில் மற்றும் நிறுவன மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் தரம் மற்றும் பாதுகாப்பை அபிவிருத்தி செய்தல், ஆற்றல் விருத்தி, விநியோகத்தை முகாமைத்துவம் செய்தல், ஆராய்ச்சி மற்றும் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம் போன்றன இந்த மருத்துவ வழங்கற் பிரிவின் ஏனைய பிரதான பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- மருத்துவ வழங்கற் பிரிவில் பல்வேறு அலகுகளின் நிருமாணிப்புகள், திருத்தங்கள், விரிவாக்கம் மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளல்,
- திகன,வெலிசர மற்றும் அங்கொட உப களஞ்சியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- நாடு பூராவும் உள்ள சிகிச்சை சேவை நிறுவனங்களின் மற்றும் பிரதேச மருத்துவ வழங்கற் பிரிவுகளின் (RMSDs) களஞ்சிய வசதிகளை மேம்படுத்தல்.

- MSMIS கருத்திட்டத்தை முனைய (Terminals ) நிறுவனங்கள் வரை விரிவுபடுத்தல்.

- மருத்துவ வழங்கற் பிரிவின் பணியாட் தொகுதிக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை நடத்தியமை.

- வழங்கல் நடவடிக்கைகளை முகாமைப்படுத்தல் மற்றும் உண்மை தெரியக்கூடியவாறான மதிப்பீடுகள் மேற்கொள்ளுவதை மேம்படுத்தல் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்கிய DTC குழுவொன்றைத் தாபித்தல்.
- சிகிச்சை சேவை நிறுவனங்களின் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துவது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளுவதனை ஊக்கப்படுத்தல்.

### 3.17 உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைகள்

சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவினால் நோரொத்த அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல், பொருத்துதல், அதிகாரத்தை கையளித்தல் (Commissioning) மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் இப் பிரிவினால் மாகாண சுகாதார நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களின் தேவைப்பாடுகள் சம்பந்தமான தேவையான தொழில் நுட்ப ஒத்துழைப்பும் வழங்கப்படுகின்றது. மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல், மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், உபகரணங்களைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் பணியாட் தொகுதிக்கான பயிற்சியளித்தல் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் உள்நாட்டு/ வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குதல் உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவையின் (BES) ஊடாக மேற்கொள்ளப்படும் பிரதான பணிகளாகும் மேலும் உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைப் பிரிவின் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் வேலைத் தள வசதிகள், உபகரணங்கள் மற்றும் மேலதிக உதிரிப்பாகங்களுக்கான களஞ்சிய வசதிகள் மற்றும் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ உபகரணங்களின் பதிவேட்டு முகாமைத்துவ முறைமைக்காக (Medical Equipment Inventory Management System) இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட மென்பொருள் ஒன்றை உருவாக்குதல் இந்த உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைப் பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- கொள்வனவின் மூலம் நேரொத்த அமைச்சின் மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை உரிய காலத்துக்கு வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

- கொள்வனவின் மூலம் மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய தேவையான உதிரிப்பாகங்களை வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய தேவையான உதிரிப்பாகங்களை வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- நோரொத்த அமைச்சின் சுகாதார நிறுவனங்களுன் மருத்துவ, பல் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் நாளாந்தம் பராமரித்தல் மற்றும் அவைகள் பழுதடையும் சந்தர்ப்பத்தில் 24 மணி நேரத்துக்குள் அவற்றை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.

- உரிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் மற்றும் உபகரணங்களைப் பாவிப்பவர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.

- அமைச்சுக்கும் மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல்.

- மாகாண சபை சுகாதார நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குதல்.

### 3.18 முகாமைத்துவம், அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சேவைகள்.

#### 3.18.1 திட்டமிடல் பிரிவு

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் முகாமைத்துவ, அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் அலகின் கீழ் உள்ள பிரதான பணிப்பாளர் பிரிவு திட்டமிடல் பிரிவாகும். மொத்த சுகாதாரப் பிரிவையும் உள்ளடக்கும் வண்ணம் சுகாதார முறைமையை பலப்படுத்தும் நோக்கில் மத்திய மற்றும் மாகாண மட்டத்திலான சுகாதாரத் திட்டங்கள் பணியாட் தொகுதியின் ஆற்றல் விருத்தி மற்றும் அதனோடு ஒத்த செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான பிரதான மைய நிறுவனம் இந்த திட்டமிடல் பிரிவாகும். சுகாதார அபிவிருத்தியை திட்டமிடல் ( பிரதான திட்டமிடல், ஐந்தாண்டு சுகாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்) மற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களின் பணியாட் தொகுதியை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், சுகாதார முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் அது தொடர்பான பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், திட்டமிடல் செயற்பாடுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு அத்துடன் மத்திய மற்றும் மாகாண மட்டத்தில் சுகாதார திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்துக்குத் தேவையான ஆற்றல் விருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல் இந்த திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளாகும்.

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

- 2018 ஆம் ஆண்டின் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மாகாண வருடாந்த செயற்பாட்டுத் திட்டமும் அதன் முன்னேற்றத்தை ஆராய்ந்து பார்க்கும் நோக்கில் சேகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் 2017 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- இந் நாட்டுக்கு சமூகமளித்த மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் அதிதி நிபுணர்கள், பயிலுநர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்காக வெளிநாட்டு அமைச்சு உட்பட ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து செயல்படல்.

- 23 கருத்திட்ட பிரேரணைகள் திட்டமிடல் பிரிவுக்கு கிடைத்ததுடன் இதில் 08 பிரேரணைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு தேவையான நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- கீழே காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MoUs) அமைச்சுக்கும் மற்றும் உரிய கொடையாளிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டன.
    - யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் மூன்றுமாடி புனர்வாழ்வு நிலையமொன்றை நிருமாணித்தல் மற்றும் உபகரணங்களை வழங்கல் அத்துடன் மூன்றாண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல். (Sing Health Project)
    - கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான பத்துமாடி கட்டடமொன்றை நிருமாணித்தல். (COC Project)

- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிதாக தாபிக்கப்பட்ட மருத்துவ பீடத்தின் மாணவர்களுக்காக சிகிச்சைப் பயிற்சிகளை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு இரத்தினபுரி மாகாண பொது மருத்துவமனையை போதனா மருத்துவமனையாக தரம் உயர்த்தியமை.

- நேரொத்த அமைச்சின் சகல நிறுவனங்களின் பணியாட் தொகுதியினரின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. “ மனித வள விபரங்கள்” என்னும் தலைப்பின் கீழ் 2017.12.31 திகதியும் மற்றும் 2018 ஜனவரி 1 தொடக்கம் ஜூன் 30 வரையிலான இரண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

நிபுணத்துவ மருத்துவர்களுக்கான பணியாட் தொகுதியை தீர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- மேல் மாகாண மற்றும் வடமேல் மாகாணத்தின் நேரொத்த அமைச்சின் நிறுவனங்களின் சுகாதார திட்டமிடல் பணியாட் தொகுதிக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியமை.
- மாத்தறை மாவட்டத்தின் தாய் மற்றும் புதிய பிறப்பு சுகாதார சேவையைப் பலப்படுத்தும் கருத்திட்டத்தின் ஊடாக தாய் மற்றும் புதிய பிறப்பு சுகாதார சேவையின் விசேட மூன்றாம் நிலை தொடர்புபடுத்தல் மருத்துவமனையாக மாத்தறை, கொடகம, கொரியா - இலங்கை நற்புறவு மருத்துவமனையை (KSFH) மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- SDG இலக்கை மேம்படுத்துவதற்கு இரண்டு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் தேசிய இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் மாநாட்டை நடத்தி SDG இலக்கு பூர்த்தி செய்யப்பட்டது.

### 3.18.2 சர்வதேச சுகாதாரம்

வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய திட்டங்களை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டின் மூலம் ஒருங்கிணைத்தல் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் செல்லும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் செயற்படல், சுகாதாரத் திணைக்களத்துக்கு உரிய சகல வெளிநாட்டு பயணங்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள், அதிதிகள், ஆலோசகர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGOS) பயணங்களுக்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய உரிய அமைச்சுக்களுடனான ஒருங்கிணைப்புப் பணிகள் மற்றும் சர்வதேச சுகாதார நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் இலங்கைக்குரிய பிற உரிய பணிகளை மேற்கொள்ளுவது சர்வதேச சுகாதாரப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

- 2018/19 WHO ஈராண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- 2018/19 UNICEF ஈராண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- 2018/19 UNFPA ஈராண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

**பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள்**

<table>
<tr><th>சுட்டி</th><th>இலக்கு</th><th>2016</th><th>2017</th><th>2018</th></tr>
<tr><td rowspan="4">அங்கீகாரம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட செயற்பாட்டுப் பிரேரணைகளின் எண்ணிக்கை</td><td>100</td><td colspan="2">WHO 281 (ஒதுக்கிய தொகை ரூபா 192,006,751)</td><td>WHO - 128 (ஒதுக்கிய தொகை ரூபா 155,332,674.00)</td></tr>
<tr><td>10</td><td colspan="2">பிற மூலம் - 28 (ஒதுக்கிய தொகை ரூபா 41,286,772.00)</td><td>பிற மூலம் - 10(ஒதுக்கிய தொகை ரூபா 44,978,548.00)</td></tr>
<tr><td>20-25</td><td>UNFPA - 62 (ஒதுக்கிய தொகை ரூபா. 10,252,179.14)</td><td>UNFPA - 26 (ஒதுக்கிய தொகை ரூபா 6,265,640.00)</td><td>UNFPA - 12 (ஒதுக்கிய தொகை ரூபா 2,684,263.80)</td></tr>
<tr><td>30</td><td>UNICEF - 40 (ஒதுக்கிய தொகை ரூபா 24,212,809.33)</td><td>UNICEF - 36 (ஒதுக்கிய தொகை ரூபா 12,554,588.38)</td><td>UNICEF - 11 (ஒதுக்கிய தொகை ரூபா 2,511,343.57)</td></tr>
<tr><td>முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை</td><td>WHO - 03<br>UNFPA - 02<br>UNICEF - 02</td><td>WHO - 03<br>UNFPA - 02<br>UNICEF - 02</td><td>WHO - 03<br>UNFPA - 02<br>UNICEF - 02</td><td>WHO - 02<br>UNFPA - 01<br>UNICEF - 01</td></tr>
<tr><td>WHO பிரேரணைகளைத் தயாரிக்கும் செயலமர்வுகளின் எண்ணிக்கை</td><td>03</td><td>-</td><td>-</td><td>இரண்டு நாள் செயலமர்வு 02</td></tr>
<tr><td>சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு</td><td>-</td><td>-</td><td>737 உத்தயோகத்தர்களுக்கு</td><td>995 பேருக்கு 305 வெளிநாட்டுப்</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல். | | | 251 வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. | பயிற்சிகள் வழங்கப்பட்டன. |
| வீசா மற்றும் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல். | - | - | வீசா - 35<br>அங்கீகாரம் - 47 | வீசா - 30<br>அங்கீகாரம் - 46 |

### 3.19 நிதிச் சேவைகள்

சுகாதார அமைச்சின் நிதி திட்டமிடல், கணக்குப் பதிவுகள் மற்றும் நிதி அறிக்கைகள் உட்பட நிதி முகாமைத்துவத்துக்கான பணிகள் இந்த நிதிப் பிரிவின் அடிப்படைப் பணிகளாகும். நிதிப் பிரிவின் ஒவ்வொரு நடவடிக்கைக்காகவும் புறம்பான உப பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

#### 3.19.1. பிரதான நிதி உத்தியோகத்தர் - II

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

கீழே காட்டப்பட்டுள்ள பணிகள் தொடர்பான செலவுக் கட்டுப்பாடு :

- இயந்திரப் பொறிமுறைகளும் உபகரணங்களும் பழுதுபார்த்தல்
- வாகனங்களைப் பழுதுபார்த்தல்.
- இயந்திரப் பொறிமுறைகள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்
- உத்தியோகத்தர் பயிற்சி

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2017 | 2018 |
|---|---|---|---|
| பழுதுபார்க்கப்பட்ட இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களின் எண்ணிக்கை | 100% | 0% | 0% |
| பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | 100% | 100% | 100% |
| கொள்வனவு செய்த உபகரணங்களின் எண்ணிக்கை | 100% | 6% | 80% |
| கொள்வனவு செய்த இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களின் எண்ணிக்கை | 100% | 25% | 25% |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 100% | 100% | 100% |
| பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 100% | 90% | 100% |

#### 3.19.2 பிரதான நிதி உத்தியோகத்தர் - III

**ஆண்டுக்குள் பெற்ற பிரதான வெற்றிகள் :**

கீழே காட்டப்பட்டுள்ள பணிகள் தொடர்பான செலவு முகாமைத்துவம்

- நேரொத்த அமைச்சு, தாதிப் பயிற்சிப் பாடசாலை மற்றும் சுகாதார ஊக்குவிப்பு அத்துடன் நோய் தடுப்புச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் வாகனங்களை பழுது பார்த்தல்.
- இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள்
- நிருவாக மற்றும் நிதிப் பிரிவின் பணியாட் தொகுதிக்கான பயிற்சிகள்
- நேரொத்த அமைச்சு மற்றும் சுகாதார ஊக்குவிப்பு அத்துடன் நோய் தடுப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்காக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.

- சுகாதார ஊக்குவிப்பு அத்துடன் நோய் தடுப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்காக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல்.

**பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| சுட்டி | இலக்கு | 2016 (மில்லியன் ரூபா) | 2017 (மில்லியன் ரூபா) | 2018 (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|
| வாகனங்களைப் பழுது பார்த்தல் ( அமைச்சு நிருவாகம்) | - | 36.03 | 35.77 | 38.54 |
| இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் | - | 65.44 | 16.33 | 5.10 |
| நிருவாக மற்றும் நிதிப் பிரிவின் பணியாட் தொகுதிக்கான பயிற்சிகள் | - | 0.31 | 0.79 | 1.29 |
| நேரொத்த அமைச்சின் கீழுள்ள மருத்துவமனைகளுக்குரிய வாகனங்களைப் பழுது பார்த்தல். | - | 16.8 | 21.90 | 34.62 |
| நேரொத்த அமைச்சின் கீழுள்ள மருத்துவமனைகளுக்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | - | 164.44 | 232.55 | 304.77 |
| தாதிப் பயிற்சிப் பாடசாலைகளின் வாகனங்கள் பழுதுபார்த்தல். | - | 3.71 | 0.82 | 1.97 |
| நேரொத்த அமைச்சின் கீழுள்ள மருத்துவமனைகளுக்கான மருத்துவமனை உபகரணங்களை கொள்வனவு செய்தல். | - | 75.27 | 275.45 | 297.85 |
| சுகாதார ஊக்குவிப்பு மற்றும் நோய் தடுப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் வாகனங்கள் பழுதுபார்த்தல். | - | 1.01 | 3.19 | 2.02 |
| சுகாதார ஊக்குவிப்பு மற்றும் நோய் தடுப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்காக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | - | 6.69 | 3.53 | 6.03 |
| சுகாதார ஊக்குவிப்பு மற்றும் நோய் தடுப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்காக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல் | - | 0.38 | 0.36 | 0.28 |

## 3.20 சுகாதார சேவைகள் நிறுவனங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்.

### 3.20.1. உள்நாட்டு நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள்

சுகாதார வரவு செலவுக்கு அமைவாக நேரொத்த அமைச்சின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் உள்நாட்டு நிதியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிருமாணிப்புக் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் பிரதிப் பணிப்பாளர் நாயகத்துக்கு (வழங்கல்) வழங்கப்படுகின்றது. இதற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டின் கீழே காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| # | கருத்திட்டத்தின் பெயர் | அமைவு | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 1. | சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் அவசர விபத்துப் பிரிவின் வசதிகளை மேம்படுத்தல். | போதனா மருத்துவமனை - யாழ்ப்பாணம் மாவட்ட பொது மருத்துவமனை - பொலன்நறுவ, தள மருத்துவமனை - கல்முனை, மாவட்ட பொது மருத்துவமனை - களுத்துறை, போதனா மருத்துவமனை - அனுராதபுரம், போதனா மருத்துவமனை -கண்டி மாகாண பொது மருத்துவமனை - பதுளை, மாவட்ட பொது மருத்துவமனை - சிலாபம், மாவட்ட பொது மருத்துவமனை - மாத்தறை மாவட்ட பொது மருத்துவமனை -கேகாலை தள மருத்துவமனை - முல்லேரியா, மாவட்ட பொது மருத்துவமனை - திருகோணமலை , தள மருத்துவமனை - கம்பொல | • போதனா மருத்துவமனை - கண்டி (25%), மாவட்ட பொது மருத்துவமனை - திருகோணமலை (17%), மாவட்ட பொது மருத்துவமனை - சிலாபம் (19 மாவட்ட பொது மருத்துவமனை - கேகாலை (9%) – நிருமாணிப்புகளின் முன்னேற்றம்<br>• போதனா மருத்துவமனை - அனுராதபுரம், தள மருத்துவமனை - முல்லேரியாவ, தள மருத்துவமனை- கம்பொல – ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டது.<br>• மாவட்ட பொது மருத்துவமனை - மாத்தறை (கம்புறுகமுவ) – வேலைத் தளத்தை இன்னும் தீர்மானிக்கவில்லை.<br>• மாவட்ட பொது மருத்துவமனை - அம்பாறை – கொள்வனவு மட்டத்தில் உள்ளது. மாகாண பொது மருத்துவமனை- பதுளை- ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன் வேலைத் தளம் துப்பரவு செய்யப்படுகின்றது. | 1,143.01 |
| 2. | முல்லேரியா தள மருத்துவமனையின் தேசிய பக்கவாத நிலையத்தை நிருமாணித்தல்.. | முல்லேரியா | அத்திவாரத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது கட்டட வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | 249.50 |
| 3. | களுபோவில போதனா மருத்துவமனை மில்லேனியம் கள கட்டடத்தொகுதி | கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனை –களுபோவில | நிருமாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | 179.36 |
| 4. | மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இருதய நோய் பிரிவு, கெத்திடர் ஆய்வுகூடம் மற்றும் கள கட்டடத்தொகுதி நிருமாணிப்பு | போதனா மருத்துவமனை மட்டக்களப்பு | கட்டட வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.. | 77.30 |
| 5. | தாதி பீடம் / வதிவிட நிருமாணிப்பு. | ஸ்ரீ ஜயவர்தனபுர / முல்லேரியாவ | வேலைத்தளம் தயார்படுத்தப்படுகின்றது. | 344.88 |
| 6. | அடையாளம் காணப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவர்கள் தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பணியாட் தொகுதிக்கான உத்தியோகபூர்வ விடுதி நிருமாணிப்பு | போதனா மருத்துவமனை - கராப்பிட்டி, போதனா மருத்துவமனை - அனுராதபுரம், போதனா மருத்துவமனை - யாழ்ப்பாணம் | • போதனா மருத்துவமனை கராப்பிட்டி - வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம் - கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>• போதனா மருத்துவமனை அனுராதபுரம் – பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 105.81 |
| 7. | தோட்ட மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்தல். | சபரகமுவ மாகாணம் | தெரிவு செய்யப்பட்ட தோட்ட மருத்துவமனைகளின் மறுசீரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன | 95.24 |
| 8. | புதிய கள கட்டடத்தொகுதி நிருமாணிப்பு - மாவட்ட மருத்துவமனை | மாவட்ட பொது மருத்துவமனை - சிலாபம் | ஜம்போர வைக்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது, | 42.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிலாபம் | | | |
| 9. | பொலன்நறுவ மாவட்ட பொது மருத்துவமனையை அபிவிருத்தி செய்தல் | மாவட்ட பொது மருத்துவமனை - பொலன்நறுவ | உத்தியோகபூர்வ மருத்துவ விடுதி நிருமாணிப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பகமுன பேராதெனிய மருத்துவமனையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு கட்டட நிருமாணிப்புகள் மற்றும் மெதிரிகிரிய மருத்துவமனை நிருமாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | 111.37 |
| 10. | கராப்பிட்டி மருத்துவமனையை அபிவிருத்தி செய்தல். | போதனா மருத்துவமனை - கராப்பிட்டி | நிருமாணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 200.07 |
| 11. | அங்கொட மருத்துவமனையில் (IDH) வெ ளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம் மற்றும் கதிர்வீச்சு பிரிவை புனரமைத்தல் | தொற்று நோய் முகாமைத்துவம் தொடர்பான தேசிய நிறுவனம் NIIDM – அங்கொட | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 19.03 |
| 12. | கராப்பிட்டி, கண்டி மற்றும் தெல்லிப்பளை மருத்துவமனைகளில் புற்று நோய் பிரிவொன்றை நிருமாணித்தல். | போதனா மருத்துவமனை - கண்டி<br>தள மருத்துவமனை- தெல்லிப்பளை | தெல்லிப்பளை தள மருத்துவமனையின் மூன்று மாடிக் கட்டட நிருமாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன 8 மாடிகளைக் கொண்ட கண்டி மருத்துவமனையின் 6 வது மாடியின் கட்டமைப்பு நிருமாணிப்புகள் பூர்த்தியடைந்துள்ளன. | 193.91 |
| 13. | தாதி பயிற்சி பாடசாலையை புனரமைத்தல். | காலி, அனுராதபுரம், களுத்துறை மற்றும் கண்டி | ஜம்போர உட்செலுத்தும் வேலை (piling) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 238.22 |
| 14. | தள மருத்துவமனை ஹொரணை நவீன வசதிகளுடன் புதிய சத்திரசிகிச்சைக் கூடத்தை நிருமாணித்தல் | தள மருத்துவமனை ஹொரணை | அத்திவார வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | 221.14 |
| 15. | தள மருத்துவமனை பிம்புர X-ray பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, அவசர விபத்துப் பிரிவு மற்றும் இரத்த வங்கியைக் கொண்ட மூன்று மாடி கட்டடமொன்றை நிருமாணித்தல். | தள மருத்துவமனை- பிம்புர | உத்தேச கட்டடத்தின் 2 மாடிகளுக்கான கட்டமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கூரையின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | 4.24 |
| 16. | காலங்கடந்த சிறுநீரக நோயாளர்களை இனங் காணும் நிலையமொன்றை நிருமாணித்தல். | தெற்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் | ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, கராப்பிட்டி, மல்லாவி, செட்டிகுளம்,பதவிய, பதவிஸ்ரீபுர, சம்பத்நுவர, அரலகங்வில, தெஹியத்த கண்டிய ஹெட்டிபொல, பக்கமுன,வெல்லவாய, திஸ்ஸமஹாராம, கெப்பிட்டிகொல்லாவ, மன்ஞன்தூவ ஆகிய மருத்துவமனைகளின் கட்டடங்களை நிருமாணித்தல் | 723.55 |
| 17. | அமைச்சுக் கட்டடங்களை நிருமாணித்தல் | கொழும்பு | ஜம்போர உட்செலுத்தும் வேலை (piling) மற்றும் இரண்டு கீழ் மாடிகளின் நிருமாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>முதல் மாடியின் நிருமாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் | 762.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொண்டிருக்கின்றன. | |
| 18. | கராப்பிட்டி, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் விசேட மருத்துவமனைகளில் சிறுவர் நோய் சேவைகளுக்கான கட்டடத் தொகுதியை தாபித்தல் | போதனா மருத்துவமனை - கராப்பிட்டி, போதனா மருத்துவமனை - யாழ்ப்பாணம் மற்றும் மாவட்ட பொது மருத்துவமனை - அம்பாறை | • மாவட்ட பொது மருத்துவமனை அம்பாறை – கட்டடத்தின் இரண்டாவது மாடியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• போதனா மருத்துவமனை கராப்பிட்டி – அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | 561.95 |
| 19. | நிந்தவூர் தள மருத்துவமனைக்கான புதிய கட்டட தொகுதியொன்றை நிருமாணித்தல். | நிந்தவூர் | ஜம்போர உட்செலுத்தும் வேலை (piling) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 200.00 |
| 20. | கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் வாய்ச் சுகாதார பிரிவொன்றை நிருமாணித்தல். | போதனா மருத்துவமனை - கராப்பிட்டி | வேலைத் தளத்தின் ஒழுங்குபடுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.. அத்திவாரத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | 161.25 |
| 21. | லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் இருதய நோய்க்கான சிகிச்சை நிலையமொன்றை நிருமாணித்தல். | லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனை -கொழும்பு | அத்திவார வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கட்டடத்தின் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | 103.94 |

### 3.20.2. வெளிநாட்டு உதவியின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டு வெளிநாட்டு உதவியின் ஊடாக செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **கருத்திட்டத்தின் பெயர்** | **நிதி வருகை** | **பௌதீக முன்னேற்றம்** | **நிதி முன்னேற்றம் (ரூ.மி)** |
|---|---|---|---|---|
| 1. | மாத்தறை மாவட்டத்தில் தாய் மற்றும் பிறந்த சிசுவின் ஆரோக்கியத்தை பலப்படுத்தும் கருத்திட்டம் (GOSL - KOICA) | KOICA | • மின் பிறப்பாக்கி இயந்திரத்துக்காக புதிய அறையொன்றை நிருமாணித்தல்.<br>• புதிய கட்டடம் ஒன்று நிருமாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 187.00 |
| 2. | அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் ஆற்றலை விரிவுபடுத்தல் மற்றும் புனரமைத்தல் (SPMC) (Yen 1239.88 Mn) / For 2017 JICA (12) – LKR 1092.45 Mn and GoSL (17) LKR 175 Mn | JICA | • கட்டடங்களைப் புதுப்பதித்தல் மற்றும் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>• உபகரணங்கள் / பொறிமுறைகளைப்<br>• பொருத்துதல் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 1,299.24 |
| 3. | ஹெல்மட் கோல் மருத்துவமனை கராப்பிட்டி - காலி (GOSL - Germany) | Kfw ஜெர்மன் | • கட்டடங்களின் ஐந்து பகுதிகளின் நிருமாணிப்புகள் 70% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது<br>• இறுதி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன | 552.17 |
| 4. | விசேட தாய் சேய் மருத்துவமனையொன்று களுத்துறையில் நிருமாணித்தல். | நெதர்லாந்து உதவி | • ஜம்போர உட்செலுத்துதல் (piling) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது<br>• முதலாவது மாடியின் கொங்கிரீட் கணு | 811.80 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிருமாணிக்கப்படுகின்றது. | |
| 5. | மாகாண சபைகளின் கீழுள்ள கஷ்டப் பிரதேச மருத்துவமனைகளுக்கு கிளினிக் கழிவு முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்குவதன் மூலம் நோயாளிகளின் சிகிச்சை சேவைகளை மேம்படுத்தல். (Australia) | அவுஸ்திரேலியா | இன்சினரேட்டர் இயந்திரங்கள் 5 மற்றும் மெடாமைசர் இயந்திரங்கள் 20 கொள்வனவு செய்து தாபிக்கப்பட்டுள்ளன. | 206.42 |
| 6. | இலங்கை தேசிய மருத்துவனையின் வெளி நோயாளர் பிரிவை அபிவிருத்தி செய்தல்.(GOSL - China) | சீன அரசு | 8 வது மாடி வரை பிரதான கட்டட கட்டமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 346.88 |
| 7. | கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனைக்காக MRI Scanner இயந்திரமொன்றை வழங்குதல் (GOSL - China) | சீன அரசு | MRI Scanner இயந்திரத்தைப் பொருத்துத்தல் | |
| 8. | பொலன்நறுவயில் புதிய ஆய்வுகூடம் மற்றும் சிறுநீரக நோய் மருத்துவமனையொன்றை நிருமாணித்தல்.(GOSL - China) | சீன அரசு | அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |

### 3.20.3. இரண்டாவது சுகாதாரப் பிரிவு அபிவிருத்திக் கருத்திட்டம். (SHSDP)

ஐந்து வருட கால கருத்திட்டமான SHSDP கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. இக் கருத்திட்டத்துக்கான நிதியத்தை உலக வங்கி இரண்டு கட்டமாக வழங்கியது முதற் கட்டத்தின் கீழ் தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ளுவதற்காக பங்களிப்புச் செய்யப்பட்டது. இத் திட்டம் குறிப்பாக பிரதானமாக 4 விடயப் பரப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு முழுமையான வேலைத் திட்டத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இத் துறைகளாவன : சுகாதார முறைமையைப் பலப்படுத்தல், தாய்சேய் சுகாதாரம் மற்றும் போசாக்கு, தொற்று நோய் கட்டுப்பாடு மற்றும் தடுத்தல் அத்துடன் தொற்றா நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுத்தல். இரண்டாம் கட்டத்தின் கீழ் புதிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், தொழிற்பாடு ஆராய்ச்சி மற்றும் ஆற்றல் விருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் போன்ற விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இக் கருத்திட்டத்தின் கீழ் 20 விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. இந்த 20 விடயங்களில் 9 க்கு நிதியத்தில் இருந்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டன 11 விடயங்களுக்கு நிதியத்திலிருந்து செலவுகள் செய்யப்படவில்லை 2018 ஆம் ஆண்டு DLI 1, DLI 3, DLI 5, DLI 6, DLI 7 மற்றும் DLI 9 செலவுகள் மற்றும் இது தொடர்பில்க 100% முன்னேற்றத்தை அடைந்து கொள்ளுவது இலக்காக இருந்தது. முன்னேற்ற அறிக்கைக்கு அமைவாக DLI 1, DLI 5, DLI 6 மற்றும் DLI 7 100% முன்னேற்றத்தை அடைந்திருந்ததுடன் DLI 3 90% உம் DLI 9 75.8% உம் அடைந்து கொள்ள முடிந்தது. குறித்த ஆண்டின் உள்ளபடியான செலவு 2,142 மில்லியன் ரூபாவாகும்.

### 3.20.4. எயிட்ஸ் (AIDS), காச நோய் (Tuberculosis) மற்றும் மலேரியா (Malaria) நோய்களுக்கு எதிராக செயற்படுவதற்கு உலகலாவிய நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டம். (GFATM)

உலகலாவிய நிதியத்தின் நிதி அனுசரணையாக வழங்கப்பட்ட இந்த ஐந்தாண்டுக் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இக் கருத்திட்டம் நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். அதாவது, HIV, TB, மலேரியா மற்றும் HSS (சுகாதார முறைமையைப் பலப்படுத்தல்). எல்லாப் பகுதியின் கீழும் திட்டமிடப்பட்ட பல செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டு மொத்தச் செலவு 946.13 மில்லியன் ரூபாவாகும்.

### 3.20.5. மொத்த சுகாதார சேவையையும் உள்ளடக்கியவாறான சுகாதார சேவை வழங்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

- அரச மற்றும் தனியார் துறையினரின் கோரிக்கைகளுக்கு அமைய அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

இதற்கு அமைவாக தற்பொழுது தாபிக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டங்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

| இலக்கம் | மூலிகைத் தோட்டம் | தாபிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1 | ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன தேசிய மூலிகைத் தோட்டம்- நாவின்ன | 1964 |
| 2 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம், ஹல்துமுல்ல | 1984 |
| 3 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம் பட்டிபொல | 1985 |
| 4 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம் கிராந்துருக்கோட்டை | 1988 |
| 5 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம் பல்லேகெல | 1990 |
| 6 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம் பின்னதுவ | 2001 |
| 7 | ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவை பற்றிய தேசிய மூலிகைத் தோட்டம் கன்னெலிய | 2001 |

## காப்பகப் பணிகள்

| | | ஹல்துமுல்ல | பட்டிபொல | கிராந்துருக்கோட்டை | நாவின்னல | பல்லேகெல | பின்னதுவ | கன்னெலிய |
|---|---|---|---|---|---|---|---|---|
| **A** | **காணியைப் பாதுகாத்தல்** | | | | | | | |
| I. | உயிரோட்ட எல்லை | 300 (அடி) | 05 (ஏக்கர்) | 01 (ஏக்கர்) | - | 30(அடி) | 200 (மீற்றர்) | மீற்றர் 100 |
| II. | காணி உள்ளடங்கலான செய்கை | ½ (ஏக்கர) 300 (அடி) | 29 (ஏக்கர்) | 25 | - | 1000 (சதுர அடி) | 800 (மீற்றர்) | |
| III. | கற்சுவர்கள் மற்றும் வடிகால்களை வெட்டுதல். | 6,475 (சதுர அடி) | 30 (ஏக்கர்) | - | - | அடி 100 | 300 (மீற்றர்) | |
| **B** | **மூலிகைகளைப் பாதுகாத்தல்** | | | | | | | |
| I. | அரிதான | 19 | - | 05 | 05 | 07 | 07 | 02 |
| II. | இடத்துக்கு ஏற்ற | 19 | - | - | 02 | 10 | 06 | 04 |
| III. | அழிந்து போகும் மூலிகை | 13 | - | 08 | 05 | 10 | 06 | - |
| IV. | இலகுவில் கிடைப்பது | 125 | - | 08 | 15 | 300 | 48 | 10 |

## மருந்து மூலப்பொருட்களின் உற்பத்தி

| தொடரிலக்கம் | மூலிகை இனம் | தன்மை | | வழங்கக் கூடிய காலம் |
|---|---|---|---|---|
| | | உலராத (கி.கிராம்) | உலர்ந்த (கி.கிராம்) | |
| | **ஹல்துமுல்ல** | | | |
| 1. | ஆடாதோடை | 200 | - | ஆண்டுபூராவும் |
| 2. | லொத்சும்புல் | 200 | - | |
| 3. | மலித | - | 50 | ஜுலை, ஆகஸ்ட், செப்தெம்பர். |
| 4. | நொச்சி | - | 10.15 | ஆண்டுபூராவும் |
| 5. | ஹீன் அரத்த | - | 100 | |
| | **பட்டிபொல மூலிகைத் தோட்டம்** | | | |
| 1. | லொத்சும்புல் | - | 250 | - |
| 2. | தாருஹரித்ரா | 500 | - | -- |
| 3. | அங்கெந்த | 100 | - | - |
| 4. | அரத்தை | 250 | - | - |
| 5. | கற்றாலை | 100 | - | - |
| 6. | வெட்டிவேர் | 20 | - | - |
| | **கிராந்துருக்கோட்டை மூலிகைத் தோட்டம்** | | | |
| 1. | நொச்சி | - | 1000 | 2019 மார்ச்சு |
| 2. | ஆடாதோடை | 500 | | |
| 3. | நெல்லி (காய்) | - | 25 | 2019 மே |
| 4. | மருதமரம் | 100 | - | 2019 மார்ச்சு |
| 5. | மாதங் | 100 | - | |
| 6. | வெட்டிவேர் | - | 02 | 2019 மே |
| 7. | கிராத்த | - | 10 | |
| 8. | மல்லிகை | 05 | - | |
| 9. | மஹமிதி | 10 | - | |
| 10. | கற்றாலை (இலை) | 15 | - | 2019 ஏப்ரல் |
| 11. | கட்டுகரடு | 05 | - | |
| 12. | மஹமிதி | 08 | | |
| 13. | கற்றாளை | 15 | - | மே |
| 13. | மாதுளை | 02 | - | 2019 பெப்ரவரி |
| 14. | ரன்நிடோல் | 02 | - | |
| 15. | ஹீன் அரத்த | 20 | - | |

பல்லேகெல மூலிகைத் தோட்டத்தில் ஆடாதோடை 50 கிலோவும், கற்பூரவள்ளி 20 கிலோவும் 2019 ஆண்டு ஏப்ரல் - செப்தெம்பர் காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

**மூலிகை செடிகள் உற்பத்தி மற்றும் விற்பனைப் பணிகள்**

| தொடரிலக்கம் | மூலிகைத் தோட்டம் | உற்பத்தி செய்த நாற்றுகளின் எண்ணிக்கை | நாற்று விற்பனை வருமானம் | |
|---|---|---|---|---|
| | | | நாற்றுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ) |
| 1. | பின்னதுவ | 16,379 | 7,488 | 373,895.00 |
| 2. | பட்டிபொல | 3,661 | 1,219 | 52,260.00 |
| 3. | பல்லேகெல | 18,929 | 15,486 | 49,0070.00 |
| 4. | ஹல்துமுல்ல | 28,388 | 11,834 | 459,200.00 |
| 5. | நாவின்ன | 5,533 | 7,899 | 353,830.00 |
| 6. | கிராந்துருக்கோட்டை | 31,174 | 614 | 86,840.00 |
| | **மொத்தம்** | **104,064** | **44,540** | **1,816,095.00** |

**மூலிகைத் தோட்டங்களின் ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகள்ஜ**

**வெளியீடுகளும் புத்தகங்களும்**

| தொடரிலக்கம் | மூலிகைத் தோட்டம் | அளவு | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | பின்னதுவ | 110 | 1100.00 |
| 2. | பல்லேகெல | 23 | 230.00 |
| 3. | ஹல்துமுல்ல | 80 | 800.00 |
| 4. | நாவின்ன | 31 | 310.00 |
| | மொத்தம் | **244** | **2440.00** |

**பல்வேறுபட்ட வருமானங்கள்**

| தொடரிலக்கம் | மூலிகைத் தோட்டம் | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1. | வாடகைக்கு விடல் - சுற்றுலா விடுதி/ விடுதி/கேட்போர் கூடம்/விடுமுறை விடுதி | |
| | ஹல்துமுல்ல | 537,000.00 |
| | பட்டிபொல | 334,500.00 |
| | கிராந்துருக்கோட்டை | 70,800.00 |
| | கதிர்காமம் | 155,800.00 |
| 2. | **வேறு** | |
| | பட்டிபொல **மூலிகைத் தோட்டம்** | |
| | சுற்றுலா விடுதியின் தலையணை, பெட்சீட் வழங்கியதன் மூலம் பெற்ற தொகை | 17,670.00 |

**சமூக உதவிப் பணிகள்**

- 07 மூலிகைத் தோட்டங்களின் ஊடாக 190 விளக்கமளிக்கும் நிகழ்ச்சிகளும், 09 செயலமர்வுகளும், 10 கண்காட்சிகளும், 812 தொழில்நுட்ப பயிர்ச்செய்கை ஆலோசனை நிகழ்சிகளும் நடத்தப்பட்டன.
- பட்டிபொல மூலிகைத் தோட்டத்தில் உப உற்பத்தியாக பூக்கள் விற்பனையின் மூலம் ரூபா 11,795.00 வருமானமாகப் பெறப்பட்டன.

**இலவசமாக செடிகள்/மூலப்பொருட்கள் விநியோகம்**

| தொடரிலக்கம் | மூலிகைத் தோட்டம் | இலவசமாக செடிகள் விநியோகம் | | மூலிகைத் தோட்டங்களுக்கு இடையே செடிகள் பரிமாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | அளவு | பெறுமதி (ரூபா) | அளவு | பெறுமதி (ரூபா) |
| 1 | பின்னதுவ | 36,623 | 109,930.00 | - | - |
| 2 | பட்டிபொல | 2,031 | 68,800.00 | 1,381 | 44,930.00 |
| 3 | பல்லேகெல | 7,631 | 2,35,110.00 | - | - |
| 4 | கிராந்துருக்கோட்டை | 6,079 | 195,450.00 | - | - |
| 5 | நாவின்னல | 6,258 | 202,970.00 | - | - |
| 6 | ஹல்துமுல்ல | 8,047 | 243,310.00 | - | - |
| | **மொத்தம்** | **66,669** | **1,055,570.00** | **1,381** | **44,930.00** |

**விசேட கருத்திட்டம் ( விவசாயிகள் பங்களிப்புடனான நிகழ்ச்சிகள்/ மூலிகைத் தோட்ட விவசாயிகள் நிகழ்ச்சிகள்) விநியோகிக்கப்பட்ட செடிகளின் வகைகள்**

| இலக்கம் | மூலிகை வகைகள் | ஹல்துமுல்ல | பட்டிபொல | பின்னதுவ |
|---|---|---|---|---|
| 1. | அமுக்கரா | 325 | - | 1400 |
| 2. | திரெஸ்தவாலு | 200 விதை | - | 565 |
| 3. | கப்புகினிஸ்ஸ | 600 விதை | - | 340 |
| 4. | ஹீன்அரத்த | 1000 | - | - |
| 5. | வசம்பு | - | 950 | - |

**விசேட கருத்திட்டம் ( விவசாயிகள் பங்களிப்புடனான நிகழ்ச்சிகளுக்கு வழங்கிய செடிகளின் அளவு**

| கருத்திட்டத்தின் பெயர் | செடிகளின் அளவு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| **பின்னதுவ மூலிகைத் தோட்டம்** | | |
| விவசாயிகள் பங்களிப்புடனான மூலிகைத் தோட்டக் கருத்திட்டம் | 1400 | 43,000.00 |
| மூலிகைத் தோட்ட விவசாயிகள் நிகழ்ச்சித் திட்டம் - மத்துகம | 565 | 18,950.00 |
| மூலிகைத் தோட்ட விவசாயிகள் நிகழ்ச்சித் திட்டம | 340 | 11,400.00 |
| **நாவின்னல மூலிகைத் தோட்டம்** | | |
| BACC கருத்திட்டம் | 107 | 11,050.00 |
| மூலிகைத் தோட்ட விவசாயிகள் நிகழ்ச்சித் திட்டம | 86 | 3,560.00 |
| **பல்லேகெல மூலிகைத் தோட்டம்** | | |
| BACC கருத்திட்டம் | 1,085 | 33,150.00 |

**ஆராய்ச்சி – உள்ளக**

| | ஆராய்ச்சியின் தலைப்பு | மேற்பார்வை உத்தியோகத்தர் | உரிய விபரம் |
|---|---|---|---|
| | **பின்னதுவ மூலிகைத் தோட்டம்** | | |
| 1. | வெளிப்புற சுற்றுச்சூழலுக்கு நேத்ரா வாழைப் பழத்தை இயைவாக்கம் செய்தல் | | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 2. | விதைகளில் கிருமிகளை ஒழித்தல் | | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 3. | கிழங்கு மருந்து வெளிச் சூழலுக்கு இயைவாக்கம் செய்தல் | | |
| 4. | சிகப்பு சந்தனத்தில் கிருமிகளை ஒழித்தல் | | |
| 5. | குங்குமத்தில் கிருமிகளை ஒழித்தல் | | ஆராய்ச்சி மட்டத்தில் உள்ளது |
| 6. | மஸ்பெத்த மரக்குற்றியில் கிருமிகளை ஒழித்தல் | சீ.எஸ்.ஹெட்டிஆரச்சி | |
| 7. | சேனைக்கிழங்கு மருந்துகளின் பெருக்கம் | | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 8. | கற்றாலையை வெளிச்சூழலுக்கு பழக்கப்படுத்தல். | | வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 9. | ரன்மில்ல கிருமிகளை ஒழித்தல் | | ஆராய்ச்சி மட்டத்தில் உள்ளது |
| 10. | தளிர்களில் கிருமிகளை ஒழித்தல் | | |

## 8.5 அனுராதபுரம் ஆயுர்வேத சமூக சுகாதார ஊக்குவிப்புச் சேவையின் முன்னேற்றம்.

சுதேச மருத்துவ அமைச்சின் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழுள்ள ஆயுர்வேத சமூக சுகாதார ஊக்குவிப்புச் சேவை அனுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நோய் நிவாரண நிகழ்ச்சித் திட்டமாகும். 2001 ஆம் ஆண்டு பூர்வாங்க கருத்திட்டமாக அனுராதபுர மாவட்டத்தில் இது ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்பொழுது நிரந்த சேவையாகியுமுள்ளது. இதன் நோக்கம் ஆயுர்வேத வாழ்க்கைச் சுட்டெண் ஊடாக உடல், உள, சமூக, ஆன்மீக மற்றும் பொருளாதார ரீதியாக சிறப்பான சமூகமொன்றை இலங்கையில் கட்டியெழுப்புதல்.

**பணியாட் தொகுதி விபரங்கள்**

| | |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் | 24 |
| அபிவிருத்தி உதவி (விவசாயம்) உத்தியோகத்தர்கள் (இணைக்கப்பட்ட) | 03 |
| சமூக சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 204 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| சாரதி | 01 |
| ஆயுர்வேத சேவை உதவியாளர் (இணைக்கப்பட்ட) | 02 |




தொற்றா நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டங்கள்  போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்கள்

இக் கருத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இடையே கீழே காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னுரிமை வழங்கப்பட்டன.

**அனுராதபுரம் ஆயுர்வேத சமூக சுகாதார ஊக்குவிப்பு சேவை – 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான முன்னேற்றம்**

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித்திட்ட விபரம் | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 1. | தொற்றா நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டம் | 1.1.நடமாடும் மருத்துவக் கிளினிக் | 318 | |
| | | சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | 6,391 | |
| | | தொடர்புபடுத்திய நோயாளர்களின் எண்ணிக்கை | 307 | |
| | | 2. நோயாளரை அடையாளம் காணும் ஆரம்பப் பரிசோதனை | 569 | 16,674 |
| | | 3. அலுவலக வளாகம் சார்ந்த சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 220 | 4,597 |
| | | 4. யோகா பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 177 | 2,233 |
| | | 5. விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 3,975 | 74,796 |
| | | 6. . பரிசோதனை செய்த நோயாளர்களின் எண்ணிக்கை | 2,768 | |
| 2. | தொற்றா நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டம் | தொற்றா நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டம் | 2,803 | 44,713 |
| 3. | போசாக்கு நிகழ்ச்சித் திட்டம். | .உள்நாட்டு உணவு வகைகளை பிரபல்யப்படுத்தல்/இலங்கையர்களுக்கான பொருத்தமான போசாக்கு எண்ணக்கரு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | | |
| | | 1.நடைமுறை நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 2,058 | |
| | | 2. விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 2,641 | |
| 4. | சிறுவர் சுகாதாரம் பேணல் | சிறுவர் சுகாதாரம் பேணல் - முன்பள்ளி/பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டம் | | |
| | | 1. சிறுவர் சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 1,755 | |
| | | 4. சிறுவர் கிளினிக்குகளின் எண்ணிக்கை | 741 | |
| | | 5. விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை | 1,384 | |
| 5. | சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட முதியோர் சுகாதார சேவை நிகழ்ச்சித் திட்டம் | முதியோர் சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | | 14,947 |
| | | 1 கிளினிக்குகளின் எண்ணிக்கை | 614 | |
| | | 2 கண்காணிப்பு செய்த முதியோகர்களின் எண்ணிக்கை | 17,939 | |
| | | 3 மேலதிக சிகிச்சைக்காக நிலையங்களுக்கு அனுப்பி வைத்த நோயாளர்களின் எண்ணிக்கை | 796 | |
| 6. | உளவியல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | உளவியல் சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 203 | 5,641 |
| 7. | தாய் பேணல் | | 206 | 2,258 |
| 8. | பாடசாலை நிகழ்ச்சித் திட்டம | தாய்மார்களுக்கான சிகிச்சை எண்ணிக்கை | 151 | 9,190 |
| | | 1. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விளக்கமளித்தல். | 86 | 4,587 |
| | | 2. 5 ஆண்டு புலமைப்பரிசில் உபகரணங்கள் நிகழ்ச்சித் திட்டம் | 36 | 1,515 |
| | | 3. பாடசாலை சார்ந்த சிகிச்சை சேவைகள் நிகழ்ச்சித் திட்டம் | 369 | 653 |
| 9. | வீட்டில் உள்ளவர்களுக்கு விளக்கமளித்தல் | வீட்டில் உள்ளவர்களுக்கு விளக்கமளித்தல். | 43,461 | 62,114 |
| 10. | சமூக உதவிச் சேவை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பிற நிகழ்ச்சித் திட்டங்கள் | 1. தொற்றா நோய் கட்டுப்பாடு /மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டம் | 755 | 10,556 |
| | | 2. விசேட சிறுநீரக கிளினிக்/தொற்றா நோய்க் கட்டுப்பாடு | 132 | 1,851 |
| | | 3. ஆன்மீக விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 19 | 251 |
| 11. | மூலிகைச் செடி பேணல் மற்றும் திறமுறையான பயன்பாடு | 1. மாதிரி நாற்றுமேடைகள் | 53 | |
| | | 2. சேதன வீட்டுத் தோட்டம் | 558 | 5,168 |
| | | . வீட்டுத் தோட்ட எண்ணிக்கை | 2,471 | |
| | | 3.மூலிகைத் தோடடங்கள் (பாடசாலை/அரச நிறுவனங்கள்/வேறு) | | |
| | | மூலிகைத் தோட்டங்களின் எண்ணிக்கை | 207 | |

# இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

## 09. இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

### நோக்கு

ஆரோக்கியமான மக்கள் சமுதாயத்துக்காக தேசிய மருத்துவவியலின் அடையாளத்தைப் பேணி தேசிய மற்றும் சர்வதேச மருந்துத் தேவைகளை உயர் தரத்துடன் பூர்த்தியாக்கும் சேவையை முதன்மையாகக் கொண்ட முன்னோடி நிறுவனமாதல்.

### செயற்பணி

உயர்தரத்துடனான ஆயுர்வேத மருந்து உற்பத்தி, இறக்குமதி, விநியோகம், ஆராய்ச்சி சேவைகளை வழங்குதல் மற்றும் பாதுகாப்பதன் மூலம் மக்கள் தேவைகளை பூர்த்தியாக்குவதோடு ஊழியர் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் சமூக நலன்களை நிறைவேற்றி ஆரோக்கியத்துடனான மக்கள் சமூதாயத்துக்காக முன்னோடியாகச் செயற்படல்..

1957 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் நிதிக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் கீழ் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி 14853/3 இலக்க இலங்கை அரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் அப்போதிருந்த கௌரவ கைத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் அமைச்சர் பிலிப் குணவர்தன அவர்களினால் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்

### கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்கள்.

1. ஆயுர்வேத மருந்துகளை உயர் தரத்துடன் உற்பத்தி செய்தல்.

2. அரச துறையின் சகல ஆயுர்வேத மருத்துவமனைகள், மத்திய மருந்தகங்கள், மற்றும் சுதந்திர ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களுக்கு மருந்துகளை வழங்கும் பிரதான வழங்குநராதல்.

3. ஆயுர்வேத , சித்த, யுனானி மருந்துகளுக்கான மூலப் பொருட்கள் இறக்குமதி செய்தல். மற்றும் உள்நாட்டு சந்தைத் தேவைப்பாட்டுக்கு விற்பனை செய்தல்.

4. போட்டி ரீதியான தனியார் சந்தையை இலக்கு வைத்து உயர் தரத்திலான உள்நாட்டு மருந்துகளை உற்பத்தி செய்து பொதுமக்களிடையே பகிரங்கப்படுத்தல்.

5. உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற மூலப் பொருட்களை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்தல் , களஞ்சியப்படுத்தல் மற்றும் நியாயமான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தி செய்யும் கமக்காரர்களுக்கு உச்ச விலையைக் கொடுத்தல்.

6. மூலிகைச் செடிகளை பேணுதல் மற்றும் செய்கைகளை விரிவுபடுத்தல்.

7. மருந்து உற்பத்தியின் தரத்தைப் பேணுவதற்காக ஆராய்ச்சி செய்தல் மற்றும் இவ்வாறான மருந்து வகைகளை தரப்படுத்தல்.

8. ஆயுர்வேத மருந்துகள் உற்பத்திக்குத் தேவையான தடை செய்யப்பட்ட மருந்துகளையும் வெடிப் பொருட்களையும் சட்ட ரீதியாகப் பெற்றுக் கொண்டு மருந்துகளை உற்பத்தி செய்யும் மருத்துவர்களுக்கு சட்டரீதியாக வழங்குவதன் மூலம் பாரம்பரிய வைத்திய முறையை பேணுவதன் பொருட்டு செயற்படல்.

## அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

| தொடரிலக்கம் | கருத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 01. | நான்கு மாடி கட்டட நிருமாணிப்பு – சதுர அடி 28,500 கொண்ட நிலத்துக்குக் கீழ் உலர்ந்த மூலப்பொருட்கள், வெற்று போத்தல்கள், சீனி, பிளாஸ்டிக் பொதி, போன்ற பொருட்கள் முதல் மாடியில் இரசாயனகூடம் மற்றும் உற்பத்தி செய்த மருந்துகள் களஞ்சியப்படுத்துவதற்கும், 2 வது மாடி ஊழியர்களின் ஓய்வு அறை இரண்டும், மற்றும் நூலகம் 3 வது மாடியில் பல்நோக்கு விரிவுரை மண்டபம் மற்றும் கணக்குப் பிரிவு தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 157.00 | 100% | 98% |
| 02 | **பிரதான உற்பத்திக் கூடத்தின் கூரையை புதுப்பித்தல். -** பிரதான உற்பத்திக் கூடம் 50 வருட பழமை வாய்ந்ததாகும் இதன் கூரையை மறுசீரமைக்கப்படுகின்றது. 60 நாட்கள் 60 நாட்கள் புனரமைப்புக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 34.78 | 20% | 30% |
| 03 | நிறுவனத்தின் வளாகத்தில் இன்டர்லொக் கற்களைப் பிடித்தல். – பிரதான உற்பத்திக் கூடம் அமைந்துள்ள வளாகத்தை சுத்தமாக பேணுதல் மற்றும் அழகுபடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | 5.8 | 100% | 80% |
| 04 | **மின்சார விநியோகம் புதிய முறைமையை உருவாக்குதல்.** – பிரதான உற்பத்திக் கூடத்துக்கு, நான்கு மாடி களஞ்சியக் கட்டடத் தொகுதிக்கு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான மின் சக்தியை தடையின்றி பெற்றுக் கொள்ளுவதற்கு இதன் நோக்கமாகும், இதன் அடுத்த கட்டம் இந்த முறைமையைத் தாபிப்பதாகும். | 0.96 | 100% | 20% |
| 05 | **சுவைமிக்க மருத்துகளின் உற்பத்தி** – ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் சுவைமிக்க மருந்துகளை உற்பத்தி செய்வதில் முதலில் இருந்தாலும் இன்னும் கோரிக்கைக்கு பொருத்தமானவாறு வழங்கல்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. தற்பொழுது உற்பத்தி செய்யப்படுவது ஒரு கோடி ரூபா (ரூபா மி 10) உற்பத்தி செலவுப் பெறுமதியைக் கொண்ட சுவைமிக்க மருத்துப் பொருட்கள் மாத்திரமே சுவைமிக்க மருந்துகளுக்காக பெறப்படுகின்ற அனைத்து மூலிகைகளும் பூமியின் கூறுகளில் (Elements of Earth) இருந்து பெறப்படுபவைகளாகும். இவற்றில் பாதரசம் (Mercury), கந்தகம் (Sulphur), ஆசனிக் இருசல்பைற்று (Arsenic Bisulphite), குங்குமம் (Vermilion), ஆர்சனிக் டிரிசெல்பைற்று (Arsenic trisulphide) மற்றும் தங்கம் (Aurum/Gold) பிரதான மூலப்பொருட்களாகும். மேலே குறிப்பிட்ட அனைத்து மருந்து வகைகளும் விசேடமான நடைமுறைகளைப் பயன்படுத்த நச்சு இல்லாத குணாம்சங்களைக் கொண்ட மருந்துகளாக உருவாக்கி சுவைமிக்க மருந்துகளாக உற்பத்தி செய்யப்படுகின்றன. | 42.5 | 5% | - |

## 2017 , 2018 ஆண்டுகளின் நடைமுறைப்படுத்திய மூலதனக் கருத்திட்டங்கள்

| தொரில க்கம் | நிகழ்ச்சித் திட்டம் / கருத்திட்டம் | முதலீடு (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 01. | **மருந்துகளை உலர்த்தும் இயந்திரம் (Electric Tray Driers) 3 கொள்வனவு செய்தல் -** ரச வடிகா பிரிவின் சுவை சேர்க்கப்பட்ட மருந்துகளை உலர்த்துவதற்காகவும் புதிய உற்பத்திக் கூடத்தில் மூலப்பொருட்களை உலர்த்துவதற்கும் 3 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த 3 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் பிரதான உற்பத்திக் கூடத்திலும் மற்றைய இயந்திரம் ரச வடிகா பிரிவிலும் மற்றையது புதிய உற்பத்திக்கூடத்திலும் தாபிக்கப்பட்டுள்ளது. | 4.14 | 100% | 100% |
| 02. | **சுவை சேர்க்கப்பட்ட மருந்துகளை அரைக்கும் 04 இயந்திரங்கள் (End Runner Mills) கொள்வனவு செய்தல்.**" சுவை சேர்க்கப்பட்ட மருந்து உற்பத்தியின் ஆற்றலை அதிகரிப்பதற்காக இவை சேர்க்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது உற்பத்தி ஆற்றல் அதிகரிக்கப்பட்டுள்ளது. | 8.835 | 100% | 95% |
| 03. | **அடுக்கும் இயந்திரம் (ElectricStackers) 2 கொள்வனவு செய்தல். -** உற்பத்திக் கூடத்தில் மற்றும் நான்கு மாடி களஞ்சிய கட்டத்தில் பொருட்களை இலகுவாக பயன்படுத்துவதற்கு (Meterial Handling) 2018 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டதுடன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றது. | 2.53 | 100% | 95% |
| 04. | Hydrolic Lift கொள்வனவு செய்தல். – உற்பத்தி செய்த மருந்துகளை ட்ரோலிகளின் இட்டு புதிய நான்கு மாடிக் கட்டடத்தின் கீழ் மாடியில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டியுள்ளதால். நில மட்டத்தில் இருந்து 6 அடி உயரத்திற்கு ஒரே நேரத்தில் ட்ரோலி 2 ஐ உயர்த்தி கீழ் மாடியில் வைப்பதற்கு 2018 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் வினைத்திறனை அதிகரிக்க முடிந்தது கொள்ளளவு கிலோ கிராம் 1500 ஆகும். | 4.134 | 100% | 95% |
| 05. | **Meterial Hoist கொள்வனவு செய்தல் -** எந்த மாடியிலாயினும் சரி பொருட்களை எடுத்துச் செல்லுவதற்கு நான்கு மாடிக்கட்டடத்தில் இது நிறுவப்பட்டுள்ளது. தொழிற்பாட்டு நடவடிக்கை வெற்றிகரமாக உள்ளது. கொள்ளளவு கிலோ கிராம். 1000 ஆகும். | 3.223 | 100% | 20% |
| 06 | **மின்சாரத்தில் இயங்குகின்ற fork lift இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்.**" புகை வெளியாகாத சுற்றாடல் சார்பு இயந்திரமாகும். நான்கு மாடிக் கட்டடத்தில் கீழ் மாடியில் மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் எடுத்துச் செல்லுவதற்கு இலகுவில் பயன்படுத்த முடியும். கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | 4.134 | 100% | 95% |

## உற்பத்தியின் பல்வகைத்தன்மை

பாரம்பரியமாக காணப்படுகின்ற ஆயுர்வேத மருந்துகளுக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனம் உற்பத்திகளை அதிகரித்ததுடன் புதிய 6 உற்பத்திகள் 2018.08.06 ஆந் திகதி சந்தையில் அறிமுகப்படுத்தியது. மாற்றமடைகின்ற நுகர்வோரின் தேவைப்பாடுகள் மற்றும் பாவனை முறை போன்றவற்றை அறிந்து கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியின் பெறுபேறாக இந்த உற்பத்திகளைக் குறிப்பிட முடியும்.



















### விற்பனைக் கிளைகளை நிறுவுதல்

கூட்டுத்தாபன உற்பத்தி விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் விற்பனைக் கிளைகளின் வலையமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### அளுத்கம விற்பனைக் கிளை

கொழும்பு மற்றும் காலிக்கு இடையேயான ஒரேயொரு விற்பனைக் கிளை 2018.03.08 ஆந் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையில் அளுத்கம நகர மத்தியில் நிறுவப்பட்டது.

2018.12.31 தினத்தன்று தேறிய விற்பனை வருமானம் ரூபா 2,106,357.00 ஆகும்.

**ஜா –எல விற்பனைக் கிளை**

கம்பஹா மாவட்டத்தில் கூட்டுத்தாபன உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் ஜா –எல விற்பனைக் கிளை நிறுவப்பட்டது. 2018.09.25 ஆந் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்களினால் இக் கிளை திறந்து வைக்கப்பட்டது.

2018.12.31 தினத்தன்று தேறிய விற்பனை வருமானம் ரூபா 801,620.00 ஆகும்.

**விசேட கருத்திட்டங்கள்**

**உலர்ந்த மருந்துகளை சேகரிக்கும் நிலையம் - மொணறாகல**

ஆயுர்வேத மருந்துப்பொருட்கள் கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கின்ற பிரதான சவால்களில் ஒன்று உலர்ந்த மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுவதில் காணப்படுகின்ற கடினநிலையாகும் இதற்கு அமைவாக மொணறாகல நகரில் உலர்ந்த மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் நிலையமொன்று 2018 மே மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரலு, புளு, நெல்லி, வெந்தரா, பிங் கொஹொம்ப போன்ற மருத்துகளை சேகரிக்கும் நிலையமொன்று மொணறாகல நகரத்தில் உத்தியோகபூர்வமாக நிறுவுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் கூட்டுத்தாபனம் இடைத்தரகர்களிடமிருந்து விடுபடுவதற்கு சாத்தியம் உண்டு அத்துடன் விவசாயிகளுக்கு பொருளாதார நன்மை கிடைப்பதன் மூலம் திறமுறை அபிவிருத்தியின் ஊடாக வறுமையைப் போக்குவதற்காக சமூக உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் (CSR) இன்னுமொரு நிகழ்ச்சித் திட்டமாக மாறும்.

**புனரூதய 60 நாள் தொழிற்பாடு**

ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளில் முக்கிய நிகழ்வான புனரூதய 60 நாள் தொழிற்பாடு" இதன் பூர்வாங்க செயற்பாடு 2018.06.25 ஆந் திகதி பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்புடன் மேற்கொள்ளப்பட்டது. எதிர்வரும் 60 நாட்களுக்குள் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும். இது 2018.06.25 ஆந் திகதி சுகாதார,போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையில் இச் சந்திப்பு நிகழ்ந்தது.

**விற்பனை ஊக்குவிப்புச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்**

இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் மருந்து விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மேற்கொண்டு ஆயுர்வேத மருந்துகள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வுகள் நாடு பூராவும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் சாராம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்ற மாதம் | நடத்திய நிறுவனம் | நடைபெற்ற திகதி | தேறிய இலாபம் |
|---|---|---|---|
| பெப்ரவரி | Orange Electricals (Pvt.) Ltd., மீகொட | 22.02.2018 | 5,265.00 |
| பெப்ரவரி | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 23.02.2018 | 5,015.00 |
| பெப்ரவரி | இசுறுபாய பத்தரமுல்ல | 23.02.2018 | 10,348.75 |
| பெப்ரவரி | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பத்தரமுல்ல | 27.02.2018 | 31,101.25 |
| மார்ச்சு | தேசிய சுகாதார சேவைக் கண்காட்சி, BMICH | 02, 03 & 04.02.2018 | 142,050.00 |
| மார்ச்சு | Brandex, வெலிசர | 08.03.2018 | 6,665.00 |
| ஏப்ரல் | குடிவரவு மற்றும் குடியகல்வு நிறுவனம் | 23.04.2018 | 22,472.50 |
| மே | மகநெகும நிறுவனம் | 09.05.2018 | 22,046.25 |
| மே | பதிவாளர் நாயக திணைக்களம் | 17.05.2018 | 26,963.50 |
| மே | பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 18.05.2018 | 223,350.00 |
| ஜூன் | Ayurveda Expo - 2018 | 13, 14, & 15.07.2018 | 116,883.75 |
| ஜூலை | கம்பஹா புகையிரத நிலையம் | 26.07.2018 | 234,596.55 |
| செப்தெம்பர் | கட்டுநாயக்க மூதலீட்டு சபை | 04.09.2018 | 12,376.50 |
| செப்தெம்பர் | பிரதேச செயலகம் - பேருவளை | 24.08.2018 | 21,663.00 |
| செப்தெம்பர் | AYUREX-2018 Kandy City Centre | 04.10.2018 | 61,852.50 |
| ஒக்தோபர் | ஆயுர்வேத திணைக்களம் - திருகோணமலை | 05.06. & 07.10.2018 | 8,931.25 |
| ஒக்தோபர் | தேசிய சேமிப்பு வங்கி | 25.10.2018 | 8,986.50 |
| ஒக்தோபர் | அம்பாறை | | |
| | **மொத்தம்** | | **960,567.30** |

## 2018 கூட்டுத்தாபனத்தின் வருடாந்த உற்பத்திகள் மற்றும் விற்பனை முன்னேற்றம்

| விபரம் | ரூபா.மி |
|---|---|
| வருடாந்த உற்பத்தி | 394.081 |
| தேறிய விற்பனை | 688.355 |



ஹோமியோபதி மருத்துவ முறையின் ஆரம்பகர்த்தா

# ஹோமியோபதி மருத்துவ முறை

## 10. ஹோமியோபதி மருத்துவ முறை

ஹோமியோபதி மருத்துவமுறை நோய்க்கு மாத்திரம் அன்றி நோய்க்கான அடிப்படைக் காரணிக்கும் சிகிச்சையளிக்கின்ற விசேட மருத்துவ முறையாகும் செடிகள், விலங்குகள் மற்றும் உலோகம் போன்ற இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த மருந்துகள் பக்க விளைவுகள் இல்லாதது. ஹோமியோபதி மருந்துகளின் பயன்பாட்டின் மூலம் நோய்களுக்கு தாக்குப் பிடிக்கின்ற ஆற்றல் அதிகரிப்பதனால் நோய் குணமாவது மட்டுமள்ள, ஆரோக்கியமானவர்களாகவும் ஆகின்றனர். ஜெர்மன் நாட்டுப் பிரசையான கிருஷ்டியன் பெட்ரிக் சாமுவேல் ஹானிமான் என்னும் மருத்துவ நிபுணரால் இந்த மருத்துவ முறை பேணுதல் மற்றும் பகிரங்கப்படுத்தும் பிரதான நிறுவனம். 1970 ஆம் ஆண்டளவில் 1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட வெலிசர இலக்கம் 94 இல் தாபிக்கப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவப் பேரவை என்பதுடன் இது தொடர்பில் இலங்கையில் உள்ள முதலாவதும் ஒரேயொரு ஹோமியோபதி மருத்துவமனை வெலிசரயில் அமைந்துள்ள அரச ஹோமியோபதி மருத்துவமனையாகும். சுதேச மருத்துவப் பிரிவின் ஊடாக வெலிசர அரச ஹோமியோபதி மருத்துவமனை ஹோமியோபதி மருத்துவப் பேரவையினால் நிருவகிக்கப்படுகின்றது.

### நோக்கு

இலங்கை வாழ் பொதுமக்களின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கக் கூடிய ஆரோக்கியமிக்க சமூகத்தை உருவாக்குதல்.

### செயற்பணி

இலங்கை வாழ் பொது மக்களுக்கு குறைந்த செலவில் நோய் நிவாரண மற்றும் நோய் ஒழிப்புக்கு இலகுவானதும் ஆக்கத்திறன் வாய்ந்ததுமான மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையை பிரபல்யப்படுத்துவதற்காக வெலிசர ஹோமியோபதி மருத்துவமனை மூலம் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்லல்.

## 10.1 ஹோமியோபதி மருத்துவமனை

வெலிசர அரசாங்க ஹோமியோபதி மருத்துவமனை நிறுவப்பட்டு இற்றைவரை 15 ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த மருத்துவமனை சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் நிறுவகிக்கப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் இந்த மருத்துவமனை நிருவகிக்கப்படுவதுடன் 2018 ஆண்டுக்காக 18 மில்லியன் ரூபா மீண்டுவரும் ஒதுக்கீடாகவும், 30 மில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீடாகவும் ஒதுக்கப்பட்டள்ளது. அரசாங்கத்தின் ஒரேயொரு ஹோமியோபதி மருத்துவமனையான இதில் வெளி மற்றும் உள்ளக நோயாளர்களுக்கு இலவசமாக சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

நாளாந்தம் வெளி நோயாளர் பிரிவில் 150-200 வரையிலான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதுடன் உள்ளக நோயாளர் பிரிவில் 2 களங்கள் உள்ளதுடன் இதில் 20 நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கக் கூடிய வசதிகள் உண்டு. நோயாளர் சிகிச்சைக்கு மேலதிகமாக நடமாடும் கிளினிக்குகள், விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல், மருத்துவ சபையின் கீழ் நிறுவகிக்கப்படுகின்ற இலவச ஹோமியோபதி கிளினிக்குகளுக்காக மருந்துகளை வழங்குதல், வெளிநாட்டுப் பயிற்சிகள் பெற்ற மருத்துவர்களுக்கு கிளினிக்குகளுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற வசதிகள் இந்த மருத்துவனையினால் வழங்கப்படுகின்றது.

தொற்றா நோய் பரவுதல் அதிகரித்திருக்கும் சந்தர்ப்பத்தில் மூட்டு வியாதி, ஆஸ்த்துமா, கேஸ்ட்ரையிட்ஸ் உட்பட சகல உள மற்றும் உடல் ரீதியான சுமார் 150 நோய்களுக்கு ஹோமியோபதி மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் நாளாந்தம் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ஹோமியோபதி மருந்துகள் இலகுவாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுடன் பக்க விளைவுகள் இல்லாத சிகிச்சை முறையாகும்.

**மருத்துவனை பணியாட் தொகுதி**

02 மருத்துவ உத்தியோகத்தர்கள் உட்பட முகாமைத்துவ உதவியாளர், மருந்து கலவையாளர், கவனிப்பாளர், சாரதி மற்றும் ஹோமியோபதி சேவை உதவியாளர் என எல்லாமாக 12 பேரைக் கொண்ட பணியாட் தொகுதியினர் இங்கு சேவையில் ஈடுபடுகின்றனர். வதிவிட மற்றும் வெளி நோயாளர் பிரிவுகள் சிறந்த முறையில் செயற்படுவதற்கு போதுமான அளவு பணியாட் தொகுதியினர் இல்லாமையினால் 2018 ஆண்டு இறுதியில் தற்காலிக அடிப்படையில் ஒரு மருத்துவர் சேவைக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

**2018 சிகிச்சை வழங்கிய நோயாளர்களின் எண்ணிக்கைப் பட்டியல்**

| மாதம் | உள்ளக நோயாளர்கள் | வெளி நோயாளர்கள் |
|---|---|---|
| சனவரி | 2.368 | 4 |
| பெப்ரவரி | 2.658 | 7 |
| மார்ச்சு | 2.502 | 13 |
| ஏப்ரல் | 2.377 | 4 |
| மே | 2.363 | 8 |
| ஜுன் | 2.348 | 10 |
| ஜுலை | 2.803 | 14 |
| ஆகஸ்ட் | 2.692 | 6 |
| செப்தெம்பர் | 2.883 | 13 |
| ஒக்தோபர் | 3.417 | 10 |
| நவம்பர் | 2.864 | 13 |
| திசெம்பர் | 2.671 | 4 |
| **மொத்தம்** | **34.314** | **106** |

**நடமாடும் கிளினிக்குகள் மற்றும் விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

| திகதி | கிளினிக் நடத்தப்பட்ட இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018.01.21 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 98 |
| 2018.02.18 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 136 |
| 2018.03.11 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 140 |
| 2018.03.24 | ஸ்ரீ சித்தார்த்தாராம விகாரை பாணந்துரை | 58 |
| 2018.05.12 | மஜீட் பசால் பள்ளிவாசல் பெரியமுல்ல நீர்கொழும்பு | 54 |
| 2018.06.12 | நடமாடும் பொலிஜ் காவலரன் குரவலான | 46 |
| 2018.08.29 | மொணறாகல Vision 2020 | 372 |

## ஆய்வுகூட சேவைகள்

ஒவ்வொரு நோயாளர்களுக்கும் உரித்தான நோய் குணங்களை அடிப்படையாகக் கொண்டு ஹோமியோபதி மருத்துவ முறையின் போது மருந்துகள் நிர்ணயிக்கப்பட்டாலும் இரசாயணகூட பரிசோதனைகளின் மூலம் நோய் நிலைமைகள் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும் தெற்றா நோய் மற்றும் நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்கு இலகுவானவாறு வாரத்தில் இரண்டு நாட்கள் ஆய்வுகூட சேவைகளை வழங்குவதற்கு ஆரம்பித்ததுடன் 2018 ஆண்டு 1,118 நோயாளர்களுக்கு ஆய்வுகூட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## ஹோமியோபதி மருத்துவ கற்கை நடவடிக்கைகள் -

இந்தியாவின் ஆயுஷ் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவ புலமைப்பரிசிலின் மூலம் 6 இலங்கை மாணவர்கள் 2018 ஆண்டு ஹோமியோபதி பட்டப்படிப்பை மேற்கொள்ளுவதற்கு கல்கத்தா தேசிய ஹோமியோபதி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் ஹோமியோபதி பட்டப்படிப்பை பூர்த்தி செய்த 04 மருத்துவர்களுக்கு சிகிச்சை செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகள் ஹோமியோபதி மருத்துவமனை ஊடாக வழங்கப்பட்டது.

## மருந்துப் பொருட்கள் இறக்குமதி

ஹோமியோபதி மற்றும் இலவச ஹோமியோபதி கிளினிக்குகளுக்காக 1,528 மில்லியன் ரூபா ஹோமியோபதி மருந்துகள், அரசாங்க மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டது.

## நிருமாணிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற உத்தியோகபூர்வ விடுதித் தொகுதியை நிருமாணிப்பதற்காக 2.2 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது மேலும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் கீழ் மருத்துவமனையைச் சுற்றி சுவரின் ஒரு பகுதியைக் கட்டுவதற்கு 3.6 மில்லியன் ரூபாவும் மற்றும் நீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு 0.5 மில்லியன் ரூபாவும் செலவு செய்து நீர்த் தாங்கி நிறுத்தியொன்று நிருமாணிக்கப்பட்டது.

## மொணறாகல Vision 2020

முதல் Vision 2020 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மொணறாகலயில் நடத்தப்பட்டதுடன், ஹோமியோபதி மருத்துவமனையின் ஊடாக இதன் கண்காட்சிக் கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன் 372 நோயாளர்களுக்கு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.



மொணறாகல Vision 2020



பட்டத்தைப் பெற்றுவந்த மருத்துவர்களுக்கு நியமனத்தை வழங்குதல்

## 10.2 ஹோமியோபதி மருத்துவ சபை

### நோக்கு

ஹோமியோபதி மருத்துவ சேவையை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்தல்.

### செயற்பணி

ஹோமியோபதி மருத்துவ முறையின் ஊடாக மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் மேம்படுத்துவது சம்பந்தமான முறையான கொள்கைகளை வகுத்து இதனை பொதுமக்களுக்கு இடையே பிரபல்யப்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

அரசாங்க ஹோமியோபதி கிளினிக்குகளின் செயலாற்றுகை

2018 அரசாங்**க ஹோமியோபதி கிளினிக் - நோயாளர்களின் எண்ணிக்கை**

| **கிளினிக்குகள்** | **சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| தெஹிவலை | **16,447** |
| பரகடுவ | **13,732** |
| மாத்தளை | **10,533** |
| பாலமுனை | **8,182** |
| குருநாகல் | **11,349** |
| மொணறாகல | **4,768** |
| தோலங்கமுவ | **16,078** |
| **மொத்தம்** | **81,089** |

### அரசாங்க ஹோமியோபதி கிளினிக் முகாமைத்துவம்

2018 ஆண்டு கிளினிக் முகாமைத்துவத்துக்குத் தேவையான வசதிகளாக பணியாட் தொகுத பராமரிப்பு, மருந்துகளை வழங்குதல். மருத்துவ உபகரணங்கள் உட்பட கிளினிக் உபகரணங்களை வழங்குதல். கிளினிக்குகளின் நீர், மின்சாரம், துப்பரவேட்பாட்டுச் சேவைகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஹோமியோபதி மருத்துவமுறையை மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கில் ஹோமியோபதி மருத்துவ சபையினால் நடமாடும் கிளினிக்குகள் நடத்தப்பட்டதுடன் வெலிசர ஹோமியோபதி மருத்துவமனை இதனை ஏற்பாடு செய்தது.

**ஹோமியோபதி** மருத்துவமனையுடன் இணைந்து ஒழுங்கு செய்ய நடமாடும் கிளினிக்குகள்

| திகதி | கிளினிக் நடத்தப்பட்ட இடம் | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2018.01.21 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 79 | 19 | 98 |
| 2018.02.18 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 103 | 33 | 136 |
| 2018.03.11 | வணக்கத்துக்குரிய எட்மன் பீரிஸ் பாடசாலை சிலாபம் | 112 | 28 | 140 |
| 2018.03.24 | ஸ்ரீ சித்தார்த்தாராம விகாரை பாணந்துரை | 39 | 19 | 58 |
| 2018.05.12 | மஜீட் பசால் பள்ளிவாசல் பெரியமுல்ல நீர்கொழும்பு | 33 | 21 | 54 |
| 2018.06.12 | நடமாடும் பொலிஜ் காவலரன் குரவலான | 30 | 16 | 46 |

- ஹோமியோபதி மருத்துவ சபையினால் நெறிப்படுத்தப்படுகின்ற அரசாங்க ஹோமியோபதி கிளினிக் ஊடாகவும் ஹோமியோபதி மருத்துவ முறையை மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கில் வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும் விளக்கமளித்தல் மற்றும் பயிற்சி செயலமர்வுகள், கருத்தரங்குகள் அத்துடன் நடமாடும் கிளினிக்குகள் இதில் உள்ளடங்கும்.

**தெஹிவளை அரசாங்க ஹோமியோபதி கிளினிக்கின் ஊடாக நடத்தப்பட்ட வெளி நடமாடும் கிளினிக்குகள் மற்றும் வெளி வேலைத் திட்டங்கள்**

1. தெஹிவளை கல்கிஸ்ஸை நகர சபையுடன் இணைந்து " புரபதி செரிய" என்னும் மக்கள் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5 செயலமர்வுகளும் 5 நடமாடும் கிளினிக்குகளும் கொத்தலாவலபுர பாடசாலை, நெதிமாலகெலே பாடசாலை, நெதிமால தர்மராஜ விகாரை, ரத்மலான தர்மாரான பாடசாலை, சதஹம் விகாரை போன்ற இடங்களில் நடத்தப்பட்டன. இதில் 490 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

2. "சுவ யாத்ரா" சமூக உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெஹிவளை கிளினிக்கினால் 5 செயலமர்வுகள் மற்றும் 5 நடமாடும் கிளினிக்குகள் ஹசலக சுகதாராம அம்பன்கொல்ல ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரை, எல்பிட்டி ஜயபிம சேனாசன விகாரை, எல்பிட்டி ஸ்ரீ விஜயாராம விகாரை போன்ற இடங்களில் நடத்தப்பட்டன. 659 நோயாளர்கள் இந்த 5 கிளினிக்குகளிலும் சிகிச்சை பெற்றனர்.

**தோலங்கமுவ அரச ஹோமியோபதி கிளினிக் ஊடாக நடத்தப்பட்ட வெளி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

தோலங்கமுவ அரச ஹோமியோபதி கிளினிக்கின் ஊடாக சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு விளக்கமளிக்கும் இரண்டு செயலமர்வுகள் தோலங்கமுவ விகாரையில் கிளினிக்கின் பொறுப்பு மருத்துவரினால் நடத்தப்பட்டது. உடற்பயிற்சியுடன் நடத்தப்பட்ட இந்த இரண்டு செயலமர்வுகளுக்கும் 178 பேர் கலந்து கொண்டனர்.

**பரகடுவ அரச ஹோமியோபதி கிளினிக்கின் ஊடாக நடத்தப்பட்ட வெளி நிகழ்ச்சிகள்**

பரகடுவ அரச ஹோமியோபதி கிளினிக்கின் ஊடாக விளக்கமளிக்கும் 3 கலந்துரையாடல்களும் 3 கிளினிக்குகளும் நடத்தப்பட்டன. கிரிஎல்ல ஸ்ரீ சரணாராம விகாரை, தெஹெரகொட எல்லாவெல புராண விகாரை மற்றும் மாத்துகல ஸ்ரீ ரத்நாராம விகாரை ஆகிய இடங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் 126 நோயாளர்கள் இதில் சிகிச்சை பெற்றனர்.

**மொணராகல** அரச **ஹோமியோபதி கிளினிக் ஊடாக நடத்தப்பட்ட வெளி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

2018 ஆகஸ்ட் 29, 30, 31 ஆகிய தினங்களில் மொணராகல நகரத்தில் நடத்தப்பட்ட என்டபிரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சித் திடலில் மொணராகல அரச ஹோமியோபதி கிளினிக்கினால் ஹோமியோபதி கண்காட்சிக் கூடமொன்று பேணப்பட்டது. இந்த மூன்று நாட்களுக்குள்ளும் சுமார் 3000 பேர் ஹோமியோபதி மருத்துவ முறை தொடர்பான அறிவுகளைப் பெற்றுக் கொண்டதுடன் இந்த கண்காட்சிக் கூடத்தில் நடத்தப்பட்ட சிகிச்சை சேவையின் ஊடாக 372 புதிய நோயாளர்கள் சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டனர்.

**ஹோமியோபதி மருத்துவ முறை தொடர்பான ஊடக நிகழ்ச்சித் திட்டம்.**

தெஹிவளை கிளினிக்கின் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தரினால் இந்த ஆண்டுக்குள் 17 ரூபவாஹினி நிகழ்ச்சிகளும் 17 ஒலிபரப்பு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டதுடன் ஹோமியோபதி சம்பந்தமாக மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பத்திரிகைகளில் இந்த மருத்துவர் 2018 ஆண்டு சுமார் 44 கட்டுரைகள் பிரசுரித்துள்ளார்.

## ஹோமியோபதி புதிய கிளினிக்குகளுக்காக இடங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கட்டடங்களை மேம்படுத்துதல்

| மாவட்டம் | இடம் | நிறுவனம் |
|---|---|---|
| புத்தளம் | புத்தளம் M.O.H கட்டடம் | மாநகர சபை – புத்தளம் |
| ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை பிரதேச செயலக வளாகம் | ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம். |
| மட்டக்களப்பு | முனை வீதி, புளியந்தீவு, மட்டக்களப்பு | மட்டக்களப்பு மாநகர சபை. |
| களுத்துறை | விதேஷ்துதம, மஹஇங்கிரிய | களுத்துறை மாவட்ட செயலகம் |
| நுவரெலியா | ஆனந்த தசநாயக்க மாவத்தை. நவநகர, கொத்மலை | கொத்மலை பிரதேச செயலகம் |
| பொலன்நறுவை | நூலக கேட்போர் கூடம், தமன்கடுவ, பொலன்நறுவை. | தமன்கடுவ பிரதேச சபை |
| காலி | மஹமோதர மருத்துவமனை கட்டடத்தை கோரியுள்ளோம். | |

அமைச்சின் செயலாளர், ஹோமியோபதி இடைக்கால மருத்துவப் பேரவையின் தலைவர் மற்றும் மருத்துவப் பேரவை அலுவலகத்தினால் அரச அலுவலர்களின் மற்றும் அரசியல்வாதிகளின் பல்வேறுபட்ட கோரிக்கைகளின் பிரகாரம் 7 கிளினிக்குகளை ஆரம்பிப்பதற்காக 7 மாவட்டங்களில் இடங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது இவைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- புத்தளம் கிளினிக்குக்காக மாநகர சபையினால் கட்டடமொன்றை வழங்கி அதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

ஹம்பாந்தோட்டை பிரதேச செயலத்தின் கட்டடம் கடந்த வருடம் திருத்தங்கள் செய்யப்பட்டதுடன் இந்த வருடம் ரூபா 199 ,411.00 பெறுமதி வாய்ந்த பொருட்கள் கிளினிக்குக்காக கொள்வனவு செய்யப்பட்டன .

- இங்கிரிய கிளினிக் கட்டடத்தை திருத்துவதற்காக .615,375.00 ரூபா செலவு செய்யப்பட்டதுடன் வீட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பெயர்ப்பலகை நிருமாணிப்பதற்காக ரூபா . . 300,974.00 செலவு செய்யப்பட்டன

கொத்மலை கிளினிக் கட்டடத்தை திருத்தம் செய்வதற்காக இருந்தும் கிளினிக்கை ஆரம்பித்ததால் ரூபா 90,239.00 பெறுமதி வாய்ந்த வீட்டுப் பொருட்கள் கிளினிக்குக்கு வழங்கப்பட்டது.

### புதிய கிளினிக்குக்காக ஹோமியோபதி மருத்துவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

புதிய 7 கிளினிக்குகள் மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பேரவை அலுவலகத்துக்காக ஒருவர் என்ற வகையில் 8 மருத்துவர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பெறப்பட்ட பதவிக்கான அங்கீகாரத்துக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் ஹோமியோபதி மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. மும்மொழியிலும் பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக கோரப்பட்டதற்கு அமைவாக 29 விண்ணப்பங்கள் கிடைத்தன. நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 7 மருத்துவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. நியமனம் பெற்ற 7 ஹோமியோபதி மருத்துவர்கள் ஹோமியோபதி பட்டம் பெற்றவர்களாவர் இதில் ஒருவர் டிப்ளோமாதாரி மருத்துவராவார்.

### புதிய கிளினிக்குக்காக அலுவலக உதவியாளர்கள் ( தொழிலாளர்கள்) ஆட்சேர்ப்புச் செய்தல்.

ஆரம்பிக்கப்படவுள்ள 7 ஹோமியோபதி புதிய கிளினிக்குகளுக்கு உரிய பிரதேச செயலகங்களில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 26 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

**ஹோமியோபதி புதிய சட்டத்தை செயல்வலுப்படுத்தல்**

1970 ஆண்டு 07 இலக்க பழைய ஹோமியோபதி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது முகங்கொடுத்த பிரதான பிரச்சினையாகக் காணப்பட்டது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான ஒழுங்கு விதிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காமையாகும். இந்த விடயத்தை நன்கு புரிந்து கொண்டு 2016 ஆண்டு 10 இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது பேரவையான ஹோமியோபதி இடைக்கால மருத்துவப் பேரவை இரண்டு வருட உத்தியோகபூர்வ காலத்துக்குள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளை உருவாக்குவதில் கூடிய கவனத்தைச் செலுத்தியது 2017 ஆண்டு தேவையான ஒழுங்கு விதிகளை வரைந்து அமைச்சு அனுப்பி வைக்கப்பட்டது இந்த ஆண்டு அமைச்சும் சட்ட வரைஞர் திணைக்களமும் இணைந்து தேவையான திருத்தங்களைச் செய்து இதை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க முடிந்தது.

ஹோமியோபதி மருத்துவர்களைப் பதிவு செய்தல்
அப்போதைய சுதேச மருத்துவ அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் புலமைப்பரிசில்களைப் பெற்று இந்தியாவில் ஹோமியோபதி மருத்துவப் பட்டத்தைப் பெற்ற 08 ஹோமியோபதி பட்டப்படிப்பு மருத்துவர்கள் மருத்துவப் பேரவையின் பொதுவான பட்டியலில் பதிவு செய்து கொள்ளுவதற்காக விண்ணப்பித்திருந்தனர். இதில் 07 பேருக்கு பதிவை வழங்குவதற்கு இடைக்கால மருத்துவப் பேரவை நடவடிக்கைகளை எடுத்தது.

2016 ஆண்டு 10 இலக்க ஹோமியோபதி சட்டத்தின் (1) 30 பிரிவின் பிரகாரம் ஹோமியோபதி மருத்துவர்களைப் பதிவு செய்தல்.

புதிய சட்டத்தின் இந்த பிரிவுக்கு அமைவாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஹோமியோபதி மருத்துவப் பணியில் ஈடுபட்ட ஒருவர் மருத்துவப் பேரவையினால் நடத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவப் பேரவையின் பொதுவான பட்டியலில் ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளராக பதிவு செய்து கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதற்கு அமைவாக உரிய பரீட்சை நடத்துவதற்கு தகைமைகளைப் பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. 189 விண்ணப்தாரிகளுக்கு விடயப்பரப்பு மற்றும் உரிய அறிவு வழங்கப்பட்டது. பரீட்சை ஒழுங்கு விதிகளை வகுத்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், பரீட்சை சபையொன்றை நியமிப்பதற்கும் அமைச்சின் பரீட்சைப் பிரிவுடன் இணைந்து பரீட்சையை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இந்த ஆண்டு முடியுமாயின.

**ஹோமியோபதி மருந்துகள் இறக்குமதி 2018**

இந்த ஆண்டுக்குள் ஹோமியோபதி இடைக்கால மருத்துவப் பேரவையினால் 4 மருத்துவர்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் 34,966.41 டொலர் பெறுமதி வாய்ந்ததும் ஒரு மருத்துவருக்கு 932 யூரோ பெறுமதி வாய்ந்ததுமான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**ஹோமியோபதி மருத்துவப் பேரவை அலுவலகத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்தல்.**

ஹோமியோபதி மருத்துவப் பேரவை அலுவலத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்த ஆண்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்போது ரூபா 528,859.72 செலவு செய்யப்பட்டு ஹோமியோபதி மருத்துவ பேரவை கட்டடத்தை அலுமீனியம் மற்றும் கண்ணாடிகளைக் கொண்டு குளிரூட்டப்பட்டு நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டது. மருத்துவப் பேரவை அலுவலகத்துக்கு நீரைப் பெற்றுக் கொள்ளுவதற்காக புதிய நீர்த் தாங்கியொன்றும் நீர்த் தாங்கி நிறுத்தியொன்றும் ரூபா 500,000.00 செலவில் நிருமாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ஹோமியோபதி சட்டம் மற்றும் நிறுவன முறைமையை விரிவுபடுத்தல்.**

ஹோமியோபதி மருத்துவ முறையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதற்கு நடைமுறையில் உள்ள சட்டக் கட்டமைப்புக்குள் மேற்கொள்ளுவதற்கும், நிறுவன முறைமையை கட்டமைப்பதற்குமான தேவைப்பாட்டை இனங்கண்ட ஹோமியோபதி இடைக்கால மருத்துவப் பேரவை இதற்குத் தேவையான வரைவுகளைத் தயாரித்து ஹோமியோபதி மருத்துவர்களுக்கு சமர்ப்பித்து தேவையான பிரேரணையில் திருத்தங்களை மேற்கொண்டு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்கு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஹோமியோபதி மருத்துவர்கள் உட்பட 52 பேரின் பங்களிப்புடன் இதற்காக ஒரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது இதன்போது,

1. ஹோமியோபதி மருந்துகள் இறக்குமதி தொடர்பான கொள்கையை மீளத் தயாரித்தல்.
2. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி தொடர்பான பிரேரணை
3. ஹோமியோபதி திணைக்களச் சட்டம்

என 3 விரிவான பிரேரணைகள் தொடர்பில் மருத்துவர்கள் வெவ்வேறான குழுக்களாக கலந்துரையாடப்பட்டு இறுதி வரைவொன்று வகுக்கப்பட்டுள்ளது.